ஓம் பரப்பிரம்மணே நம:

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்,
ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

COPY RIGHT | REGISTERED.

| | | |
|---|---|---|
| கமலம்-8 | சென்னை ஸ்ரீமுகவருஷம் தைமீ 1உ | இதழ் 94. |
| Vol. 8 | 1934 -ம் வருஷம் ஜனவரிமீ 15உ | No. 94. |


## ஆனந்த  தர்சனம்

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது தாயுமானவர் வாக்கியம். இதன் கருத்து ஈசுவராக்ஞை யில்லாமல் எந்தக் காரியமும் நடவாதென்பதே. பகவானால் படைக்கப்பட்ட ஸர்வ பிராணிகளும் அவருடைய ஆக்ஞைப்படியே காரியங்களைச் செய்கின்றனர். நேற்றிருந்தவர் இன்று இல்லை. இன்று இருந்தவர் நாளை இரார். இன்ன வேளையில் இன்ன ஸம்பவம் உண்டாகப் போகிறதென்று தெரியவில்லை. மனிதர்களும், விலங்குகளும், மரங்களும் தங்கள் இச்சைப்படி நடப்பதாய்ச் சொல்வது பிசகு. எல்லாமுமே பகவானுடைய கட்டளைப்படியே செய்கின்றன. ஆயினும் மனுஷியர்கட்கு மட்டும் ஆதிநாதன் பகுத்தறிவென்னும் உத்தமமான பொருளைக் கொடுத்துப் பரீக்ஷை பார்க்கிறார். அவ்வறிவினுதவியால் ஒவ்வொருவனும் பாவம், புண்யம், நன்மை, தீமை முதலியவற்றை யறிந்து நல்வழியைப்பற்றித் தீயவழியை விட்டுவிடவேண்டும். இவ்வாறு செய்யும் ஸ்வதந்திரத்தை பகவான் நமக்கு அளித்திருப்பதால் அவருடைய கருணையை நினைத்து நாம் ஸதா காலமும் பக்தி செலுத்தவேண்டும். உதாரணமாக, மாடுகளுக்கும் பசிதாகமுண்டு. ஐயோ! தாக மெடுக்கிறது. தண்ணீர் காட்டுங்களென்று அவைகள் போஷகனைக் கேட்கப் பாக்கியம் பெறவில்லை. வாயில்லாத ஜெந்துக்களாயுள்ளன. ஆடு மாடுகளைப் பார்க்கும்போது நம்முடைய நிலைமை ஸர்வோத்கிருஷ்டமென்று நமக்குத் தெரியவில்லையா? நம்மை ஸம்ரக்ஷித்துக்கொள்ள நல்ல துணிகளும், வீடுகளும், ஆயுதங்களும் இருக்கின்றன. மற்றவைகளுக்கு அவ்விதமில்லை. இவ்வாறே, மனிதர்களில் படித்தவர்கள் உத்கிருஷ்டமாக

மதிக்கப் படுகின்றனர். அவர்களுக்கிருக்கும் ஆநந்தம் படியாதவர்களுக்குக் கிடையாது. இருட்டறையிற் செல்வோனைப்போல் படியாதவன் உலகத்தில் வித்யா இன்பமிழந்து ஸங்கடத்துடன் ஸஞ்சரிக்கிறான். ஆகவே, அவனுக்கு ஆநந்தம் குறைவுதான். தீபம் ஏற்றி யிருக்கும் அறையிற் செல்வோன் அடையும் ஸந்தோஷத்தைப்போல் கல்வி யறிவோடு கூடிய மனிதன் பிரகாஸமான இவ்வுலகத்தில் ஸந்தோஷமாகத் திரிந்து மனோத்ஸாகத்தை யடைகிறான். இவைகளெல்லாம் ஈசுவர கருணையால் கிடைக்கக் கூடியவை. ஆதலின், அவருடைய பாதாரவிந்தங்களை ஸதா தியானம் செய்யக்கடவோம்.

ஃ

"பரோபகாரம் அவசியம்" உலகத்திலே எல்லோரும் சுகத்தைவிட துக்கத்தையே அதிகமாய் அனுபவிக்கின்றனர். ஸ்வர்க்கலோக வாஸிகளான இந்திராதி தேவர்களும் அசுரர்களால் பீடை யுற்றனராதலின் ஸ்வர்க்கலோகமும் ஸஞ்சல மயமே. இகலோகத்தில் பிரஜைகள் அனுபவிக்கும் துக்கம் ஒருவிதமாய் சமனப்படுதற்கு பரோபகாரம் என்னும் மருந்துதான் சிலாக்கியம். ஒருவனுக்கு நேரிடும் துக்கத்தைக் கண்டு மற்றொருவன் அதை நிவர்த்திக்க முயல்வது அவசியம் இதனால் உதவி செய்யும் மற்றொருவனும் அதில் பாகம் பெற்றுத் துக்கிதனாகிறான். ராமன் பசியால் வருந்துவதைக் கண்ட கிருஷ்ணன் மனம் வருந்தாமலிருப்பானா? கிருஷ்ணனுக்கு இராமனுடைய ஸங்கடங்கள் தெரிந்தவுடனே வியஸன முண்டாகிறது. அவன் தக்ஷணமே இராமனை நோக்கி, "வியஸனப்படாதே, நான் அன்னங்கொண்டு வருகிறேன்" என்று சொல்கிறான். இப்படிப்பட்ட பரோபகாரம் ஒன்றினாலேதான் உலகினர் ஒருவாறு துக்கத்தை சமனப்படுத்திக்கொள்ளலாம். பரோபகார முள்ளவன் தெய்வ பக்தி யுள்ளவனாவான். எல்லா விஷயங்களையும் பரியாலோசிக்கும்போது நமது முன்னோர்கள் ஏற்படுத்திய மகா சிலாக்கியமான சாஸ்திரங்களும் விதிகளும் ஆசாரங்களும் பரோபகாரத்தின் பொருட்டாகவே யென்பது நன்கு புலப்படும்.

ஃ

"பகவத் பிரேமை" பகவந் நாமத்தைக் கேட்டளவில் மயங்கி ஆநந்திதராய் மூர்ச்சிக்கும் பரம பக்குவத்தன்மை பூர்வ ஜன்மஸுகிர்தத்தால் அமைபப் பெறுவது. அது அவதார புருஷர்களால் உலகுக்குப் பிரகாஸமாய்க் காட்டப்படுவது. மற்றபடி வேஷ அபிநயங்களால் தமக்குப் பகவத் பிரேமை ஏற்பட்டிருப்பதுபோல் பாவித்துக்கொள்வது இல்லாத ஒன்றை இருப்பதுபோல் நினைத்துக் கொள்வதற்கு ஸமமாம். பெட்டியில் ஒரு காசும் இல்லாதிருக்கையில் ஆயிரம் ரூபாய் இருப்பதுபோல் மனதில் பாவனை செய்துகொண்டு விட்டதினாலேயே பணத்தால் பெட்டி நிரம்பி விடுமோ? செலவிடுதற்கு அந்தப் பணத்தை எடுத்துக்கொள்ள இயலுமா? பகவத் பிரேமை என்பது தானே முயற்சிகொண்டு புரிவதாக இல்லாமல் தன்னையே அறியாத நிலையில் உன்

---

மழையின்போது உமது குடையில் நானும் வருகிறேனென்றால், தான் வேறு வழியில் போவதாகக் கூறி மெதுவாக நழுவிவிடுவோர் எத்தனையோ பேர்! அவ்வளவு சுயநலஸ்தரா யிருப்போர்தான் தங்களை உயர்ந்த திருமேனி என்று கொண்டாடிக்கொள்கிறார்கள்.

னம் பரமபதியிடம் சென்று லயித்து, அந்த ஆநந்தத்தில் பிரக்ஞை தவறிப் போவதாகும். பகவானே எதிரில் தோன்றிக் காட்சி தர, அந்த சுந்தர தேஜ னில் மயங்கிப் பரவசராகி, பிறகு அத்தோற்றம் மறையவே, அதன்பின்னேயே மனம் சென்று தவிக்க, பிரிவாற்றாமை தாளாது பிரலாபிப்பதாம். இத்தகைய பிரேமையின் விசேஷங்கள் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் சரித்திரத்தில் நிறைந்திருக்கின்றன. அதனில் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.

ஃ

"ஸ்ரீ சைதன்ய சரித்திரம்" கயையினின்று சைதன்யர் தமது சிஷ்யர் குழாத்துடன் நவத்வீபத்துக்கு வந்து சேர்ந்தார். அன்றிரவு தர்ம பத்நியான விஷ்ணுப்பிரியை தன்னுடைய பர்த்தாவைக் கண்டு பேசும் பொருட்டு திவ்ய மான புஷ்பமாலையையும் வாஸனைத் திரவியங்களையும் ஒரு தட்டில் எடுத்துக் கொண்டு போனாள். இதற்குள்ளாக வீதியில் யாரோ ஒருவன் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி மீது சில கீர்த்தனங்கள் பாடிக்கொண்டே சென்றான். அதைக் கேட்ட க்ஷணம் சைதன்யர் ஸ்மரணை தப்பி பூமியில் விழுந்தார். அவரு டைய பொன் மயமான சரீரத்தினின்றும் முத்துக்கள் போன்ற வியர்வை யுண்டாகிப் பெருகியோடியது. அவருடைய நிலைமையைக்கண்ட விஷ்ணுப் பிரியை பீதியை யடைந்தவளாய்த் தன் மாமியிடம் ஓடி "அம்மா, உமது குமாரர் மூர்ச்சை யடைந்து தரையில் விழுந்திருக்கிறார்" என்றாள். அன்னை யான சசிதேவி உண்மை தெரிந்தவளாதலின் சைதன்யரிடம் சென்று சில நேரம் வரை நின்று பலவித சைத்யோபசாரங்கள் செய்தாள். அவர் கடைசி யாக மூர்ச்சை தெளிந்து எழுந்து "அம்மா, நான் என்ன செய்வேன்? என்னை ஏமாற்றி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி எங்கேயோ ஓடிப்போய் விட்டார்" என்று கதறினார். இதென்ன புத்திரன் பைத்தியம் பிடித்தவனைப்போல் பேசுகிறு னென்று எண்ணிச் சசிதேவி தமது நாயகருக்கு நண்பரான ஸ்ரீ வாஸரிடம் சென்று ஸங்கதி யறிவித்தாள். இதற்குள்ளாக ஊரெங்கும் சைதன்யருக் குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்ற ஸங்கதி பரவியது. இவருடைய பெருமையும் படிப்பையும் கண்டு பொறாமைகொண்ட அநேக உபாத்யாயர் கள் அவருக்கு உண்மையாகவே சித்தப் பிரமை யுண்டாயிற்றென்று பிரஸ்தா பித்தார்கள். இவ்வசனங்களைக் கேள்வியுற்ற சசிதேவி ஸஞ்சல மடைந்தாள். அதனாலேதான் அவள் ஸ்ரீவாஸரைக் கூட்டிக்கொண்டு வந்து சைதன்யர் இருக்கும் நிலைமையைக் காண்பித்துத் தனக்கு உண்மையைத் தெரிவிக்கும் படி கோரினாள். ஸ்ரீவாஸர் சைதன்யரை உற்றுப் பார்த்து, "ஓகோ! இவன் பகவதம்சம், ஸ்ரீ கிருஷ்ண பக்தியின் பெருக்கால் இவ்வித மூர்ச்சை உண் டாகிறது" என்று அறிந்து, சசியம்மனை நோக்கி, "அம்மா! உன்னுடைய குமாரனை அற்பமாக நினைக்கவேண்டாம். அவனிடம் மகிமை யிருக்கிறது. இன்னும் சில தினங்களில் வெளிப்படும்" என்றார். இதைக்கேட்ட சசிதேவி ஒருவாறு மனம் தேறினாள். பின்னர் ஸ்ரீவாஸர் சைதன்யரை நோக்கி, "குழந்தாய்! நீ யாரைக்கண்டு இப்படி மூர்ச்சை யடைந்தாய்?" என, அதற்கு அவர் "ஸ்ரீ கிருஷ்ணரை என்று சொல்லத் தொடங்கினார். அந்த வார்த்தை

---

முதலிற் கொள்ளும்பொழுது எந்த சரக்கும் ஒளி—வனப்பு—உறுதி—வசீகரம் யாவும் பொருந்தி விளங்கி மனத்தைக் கவரும். பின்னரோ—தேய்விலோ—?

முடிவதன் முன்னம் க்ஷணமே மூர்ச்சையானார். ஸ்ரீ வாஸரும் மற்றுமுள்ள நேசர்களும் ஸ்ரீ சைதன்யரைத் தேற்றிக் களையை யாற்றினார்கள். மறுநாள் முதல் சைதன்யர் தம்முடைய சிஷ்யர்களை யழைத்துப் பாடம் சொல்வதற்குப் பதிலாக பகவத் பக்தியைப் பற்றி உபந்யாஸம் செய்யலானார். இதை யன்றோ பகவத் பிரேமை யென்று சொல்லவேண்டும். இவ்வித பக்குவம் லபிப்பது ஸமான்யமன்று.

ஃ

"வாய் வேதாந்தம் சுலபம்" இருந்த இடத்திலிருந்தே பகவானைத் தியானித்து விடலாம்; ஆலயத்திற்குச்சென்று ஜனநெருக்கடியில் அவதிப் படுவானேனென்பர். வாயாற் சொல்வது எளிதுதான். இருந்த இடத்திலிருந்தே மனத்தை ஒரு நிலையில் நிறுத்திச் சிந்தையை இறைவனிடம் செலுத்தித் தியானிக்க முடிகிறதா என்பது கேள்வி. வெறுமனே கண்களை மூடியவாறு மனத்தைப் பல இடங்களில் அலைய விடுத்து ராம ராம சிவ சிவ என்பதிற் பயனில்லை. மனத்தை இறைவனிடம் செலுத்தித் தன்னைத்தான் மறந்து தனது நினைவே இல்லாதுபோவதுதான் உண்மையான தியானமாகும். இவ்வித தியானத்தைத் தனது கடையிலிருந்தபடியே வியாபாரமும் நடத்திக்கொண்டு செய்யமுடியுமா? மனப்பக்குவ மில்லாதவர்கள் தான் தியானத்தினுடைய அருமையை யோராமல் இருந்த இடத்திலிருந்தே பகவானை ஸ்மரிக்கலா மென்பர். உண்மையான பக்குவிகளோ அப்பொழுதுதான் சற்றுநேர முன்பு ஆலயத்திற்குச் சென்று வந்திருந்தபோதிலுங் கூட, மறுபடியும் தம்மை யழைப்பவரோடும் தம்மை மறந்த குதூகலத்துடன் புறப்படுவதற்குச் சித்தமாய் விடுவர். ஆலய தரிசன பரவசம் எத்தனை முறை சென்றபோதிலும் தெவிட்டுதலென்பதேயில்லை; போதுமென்ற திருப்தியே அரிது. பகவானை சேவிக்க சேவிக்க ஆநந்தம் பொங்கி உலகினையே மறந்துவிடப் பண்ணுவதாகும். இத்தகைய பக்குவிகள் இருந்த இடத்திலிருந்து கொண்டே கடவுளைத் தியானம் செய்துவிடலாமென்று சொல்வரோ? ஒருபோதுமில்லை. பக்குவமற்றவரது சித்தத்தையும், பக்குவிகளின் திவ்ய மனப் போக்கையும் எளிதில் அறியலாம். பகவத் பக்தியுள்ளவர்கள் போலச் சொல்லிக்கொள்ளலாமே யன்றி அவ்விதம் நடப்பதென்பது எளிதில் கூடுவதன்று. பகவத் பக்தி செய்வதற்கென்று மகரிஷிகளால் அமைக்கப்பட்டுள்ள தெய்வமணங் கமழும் ஆலயங்கட்குச் சென்று வழிபட்டு அவ்வாறாகத்தான் பக்குவத் தேர்ச்சி கொள்ளவேண்டும். மனக்குரங்கை யடக்குவதென்பது ஸாதாரண காரியமா?

ஃ

"மதபோதகம்" கிறிஸ்துவப் பாதிரிகளின் மீது தூஷணை சொல்வோர் பலருளர். ஆய்ந்து நோக்கினால் அவர்களை நிந்திப்பதைவிட, நமது அவிவேகத்திற்கு நம்மை நிந்தித்துக்கொள்வது நலமெனத்தோற்றும். பாதிரிகளின் முயற்சியால் நமது பையன்கள் கிறிஸ்து மதத்தில் சேர்ந்தார்களே யென்று நம்மவர் ஆயாஸம் கொள்வர். இவ்வாறு மத விஷயமாய் அபிமான

---

கசடறக் கற்றவர்களும் தம் புலமையில் ஒரு குறைவு கண்டு, தாம் முற்றுமுணர்ந்தவரே என்பதில் நம்பிக்கையற்றிருக்கிறார்கள்.

முடைய ஜனங்கள் ஏன் நமது மத கிரந்தங்களில் இளைஞர்கட்குப் பற்றுதல் உண்டாகும்படி செய்யவில்லை? எப்படியேனும் பரீக்ஷையில் தேறினால் போதுமென்றெண்ணி மதபோதனையின்றிப் பிள்ளைகளைக்கெடுக்கும் பெற்றோர்கள் அந்ய மதஸ்தர்களாகிய பாதிரிகளை நோவது பயனற்ற காரியம். ஒரு மதத்தையும் அனுஸரியாமல் கேவலம் நாஸ்திகவாதம் செய்து கர்ம பிரஷ்டனா யிருப்பதைவிட ஏதேனும் ஒரு மதத்தைத் தழுவிக் கடவுளை வணங்குவது நன்மையன்றோ. நோயுண்டானால் அதற்குத் தானும் பரிகாரம் செய்யாமல் வேறு வைத்தியனிடமும் போகப்படாதென்று கூறும் மாதிரியில் நம்மவரின் சங்கதி யிருக்கிறது. நமது புதல்வர்களுக்கு நாம் மத கிரந்தங்களைப் படிப்பியாதவரை அவர்களுக்குக் கிறிஸ்துவர்கள் தங்கள் வேதத்தை உபதேசிக்கிறார்களே யென்று மன வருத்தப் படுவதிலென்ன உபயோகம்? எங்கேனும் ஒரு ஸபை கூடி மத விஷயமாய் உபந்யாஸம் செய்தால் அப்போது மாத்திரம் சிறிது அபிமானம் கொண்டு கூத்தாடுவதும், பின்னர் அதை அடியோடு மறப்பதும் நம்மவரின் வழக்கம். ஆகவே, நம்மவர்க்குக் கடமை யின்னதென்று அறிவிக்கவேண்டி இந்நாட்டுக்கு வந்திருக்கும் கிறிஸ்துவமிஷனரிகள் ஒரு வகையில் ஹிந்துக்களுக்கு மகோபகாரிகளேயாவர். அன்னோரின் காரியங்களைக் கண்டேனும் நம்மவர்க்கு ஸ்வமதக் கிரந்தங்களிலும், சிறுவர்கட்கு மதபோதனை செய்வதிலும் விழிப்புண்டாகுமாக.

ஃ

“பகவத் பிரார்த்தனை” (காலை ஸ்தோத்திரம்) அப்பனே! என் இறைவா! யாம் இக்காலையில் சயனத்தினின்று எழுந்து நன்றி யறிவுடன் நினைத் துதிக்கும்படி அருளிய நின் கருணையை என்னென்போம்? இந்நாளிலும் யாங்கள் அனுபவிக்கப் போகிறவை இன்னவை யென்று முன்னதாகவே அறியோமல்லவா? எம்மை மருட்டுகின்ற அஞ்ஞானமாகிய இருள் எவ்வளவு கொடியது! இவ்விருள்—இம் மயக்கம் எமக்கேன் ஜனித்ததோ? முற்றும் ஒளியாகி, நித்தியமான ஒளியிற்றானே வசிக்கின்ற உன் மக்களாயிருந்தும் எமக்குப் பயமென்னை? அப்பனே! உனை விட்டு வேறெங்கு அறிவையும் அபயமும் தேடுவோம்? சிரத்தையோடும் நின்மேல் என்றும் பூர்ண விஸ்வாசம் வைத்து நடந்து வாழ்வோமாக. கண்ணுக்குப் புலப்படாத நீ எம் கண்முன் நின்று ஸகல காரியங்களையும் நடத்தி வருவதைக்கண்டு களிக்கின்றோம். சுகதுக்காதிகளினிடையே எமது பிரதிதின கடமைகளையும் சீராய் செலுத்த முயல்வோமாக. எவ்வழியிலும் நினையே பற்றி, எக்காரியங்களிலும் விஸ்வாஸத்தோடு நின் கட்டளைக் கிணங்கி நடக்க நீ எமக்கென்றும் வழி காட்டுவாயாக. நித்திய சங்கீர்த்தனங்களும் சத்திய வந்தனாதிகளும் நினக்கு அற்பிதமாவதாக. இக்கணந் தொடங்கி பாசம் எமைப் பற்றாமலும், எவ்விதத்திலும் இவ்வுலக இச்சைகள் எம்மை யாட்கொள்ளாமலும் இருக்கப் பெறுவோமாக. அப்பனே! எமது கடமையைச் செலுத்துவதிலும், நின் திருவுள்ளத்தை நிறைவேற்றுவதிலும், எவ்வளவு ஹிம்ஸையும், துன்பமும் நேரிட்டபோதிலும் ஸஹித்து நினது பரமபத மடைவதே உலகத்தில் அடையக்கூடிய ஸகல பொருள்களுள்ளும் சிறந்த தென்பதை மறவாதிருப்போமாக. மனஸாக்ஷிக்கும் நினது திருவுள்ளத்துக்கும் இசைந்த நற்றொழிலைச் செய்யுங்கால் எமக்குள்ள முழுவன்மையோடும் முயல்வோமாக. எமது ஆத்ம உஜ்ஜீவனத்

நின் பொருட்டு என்றும் சிரத்தை யுடையோமாய் இருப்போமாக. நினது அடியார்களாகி என்றும் நினது திருவுள்ளத்தையே நாடுவோமாக. நினது அடியாரும் நினது அரிய புதல்வருமாகிய உலக மாந்தரனைவரும் எமது ஸகோதரரெனப் பாவித்து ஒழுகுவோமாக. எச்சம்பத்திலும், எந்த சமயத்திலும், எந்தக் காரியத்திலும் எமக்குப் பிறர் எவ்வாறு நடத்தவேண்டுமென விரும்புகிறோமோ, அவ்வாறே பிறரிடத்து யாம் பிசகாதொழுக முயல்வோமாக. யாம் இன்று செய்யும் காரியங்களெல்லாம் எமது நித்யமான பரலோக வாழ்வுக்கு அநுகூலமான வன்மை யளிப்பனவாக. யாம் இன்று புரியும் நின் திருக்கைங்கரியங்கள் எம்மை நித்தியானந்தத்தில் ஆழ்த்துவதாக. அப்பனே! வானோர் தொழுந்தேவே! திருவே! என் செல்வமே! நினது மஹிமை எங்கும் பிரகாசிக்கக்கடவது. ஓம் தத் ஸத்.

---



அதிகக் கண்டிப்புடனுள்ள தந்தை தன் குமாரனைக் கெடுத்துவிடுகிறார். சிறு காரியங்களையும் தந்தைக்கு மறைத்துச் செய்யவேண்டியதாகிறது.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுக ௵ தை௴ 1௳

## நம்முடன் பழகுகிறவர்களின் குணங்கள்.

ஆவலோடும் அந்தப் பழய காலத்தில் நம்முடன் பழகினோரின் குணங்களைச் சிந்திக்குங்கால், ஒவ்வொருவரின் குணங்களும் ஒவ்வொரு விதமாகி வியப்பை விளைக்கின்றன. அன்னோரிற் பல்லோர் அதுகாலை நம்மை விட்டுப் பிரிந்து போனவர்களாயும், நமக்குப் பெரிய துன்பம் இழைத்தோராயும், தமது வஞ்சனைச் சூட்சிகளுள் நம்மைச் சிக்க வைத்து லாபம் காண முயன்றோராயும், துரோகிகளாகவும் இன்னும் பலவிதமாகவும் காணப்படுகிறார்கள். அபூர்வமாய் ஒரு சிலர் மட்டும் நம்மையொட்டியே சேர்ந்து நின்று நமக்குச் சமய உதவிகள் அவ்வப்போது செய்து வருவோராய் சமய ஸஞ்சீவிகளாய் விளங்கி வருகின்றனர். வேறு சிலர் நம்மினும் அதிக செல்வ நிலைக்கு உயர்ந்து, அதன் காரணமாய் நம்மை இழிநிலையினராகக் கருதித் தூர அகன்றோராகவும் இருக்கின்றனர். இன்னும் சிலர் "இவனால் என்ன லாபம்?" என்று ஆராயத் துணிந்து, ஏதும் இல்லாமை கண்டு, சுயநல நோக்குடன் விலகினோராகவும், உள்ளார். நமது கையில் மிகுதியான பணப்பெருக்கு இருந்தவரையும் நம் இல்லத்திற்கு ஓயாது வந்து விருந்துகள் புசித்து ஸதா நம்மைச் சுற்றித் திரிந்தோர், இன்று எட்டி நின்று நமது வறுமையை நோக்கித் தாழ்வாகப் பேசும் தன்மையராய் மாறுபட்டுக் கிடக்கின்றனர்.

ஃ

ஒரு மனுஷ்யனுடைய குணங்களை எப்பொழுதும் ஒரேவிதமாய்ச் சொல்வதற்கில்லை. அடிக்கடி மாறுபட்டுப் புது உருவிலாவது தான் அதிகம். எவ்வளவோ பழகி நம்முடன் ஒரு பாயில் உறங்கிய நண்பன் இன்று அன்னியன்போல் இருக்கிறான். வெகு

---

தாம் பெற்றுக்கொள்ளும் தானங்களை இறந்தவனுக்குத் தமது மந்திரங்களின்மூலம் சேர்ப்பிப்பதாகச் சொல்லும் புரோகிதர்கள் ஒரு தபால் கார்டைத் தமது மந்திரங்களின்மூலம் மற்றொரு ஊருக்கு அனுப்ப சக்தியற்றிருப்பதேனோ?

காலத்திற்குப் பிறகு ஒரு நண்பனை நாம் ரயிலில் போகும்போது ஒரு ஸ்டேஷனில் அவன் ஒரு உத்தியோகஸ்தனாயிருக்கப் பார்க்கிறோம். பழய ஆவலோடும் அவனை அவன்தானா என்ற சந்தேகத்துடனே அழைக்கிறோம். அவனும் நம்மைக் கண்டு ஓடிவந்து பேசுகிறான். அன்பு மயமாய் நிற்கிறான். நாம் போய்ச் சேருகிற இடத்தின் விலாஸத்தையும் அவனுக்குக் கொடுக்கிறோம். அவன் விலாஸத்தையும் நாம் பெறுகிறோம். இதற்குள் ரயிலும் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுவிட, நாமும் பூர்வ பாசத்துடனும் விடைபெற்றுக்கொண்டு, நமது பக்கத்தில் உட்கார்ந்திருப்போரிடம் அந்த நண்பனும் நாமும் பழகிக் கலந்து நேசித்த பழங்காலத்து நட்பின் இன்ப லாபங்களை விவரித்துக் கூறி மகிழ்கிறோம். பின் நிகழ்வதென்ன? நாம் போய்ச் சேர்ந்த ஊருக்கு அந்த நண்பன் ஒரு கடிதமும் எழுதுவதேயில்லை. முதலில் அவனது லிகிதம் வரட்டும், பிறகு நாம் எழுதுவோம் என்று இருந்து விடுகிறோம். கடைசியில் நாம் புறப்பட்டு நமது ஊருக்குச் செல்லுகையில் முந்திய ஸ்டேஷனில் அந்த நண்பனைக் காண விரும்புகிறோம். ரயிலோ அந்த ஸ்டேஷனில் நிற்காமல் செல்கின்றது. ஆ! நமது நண்பனைக் காண முடியவில்லையேயென்று நமது மனம் தவிக்குங்கால், அந்த நண்பனும் நம்மைப் பார்த்துவிட்டு ஓடோடியும் நாம் இருக்கும் பக்கம் வருகிறான். நாமும் மகிழ்வுடன் நமது வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்ள, ரயிலும் அவ்விடத்தை விட்டுச் சென்று மறைகிறது. பிறகு நமது ஊர் வந்த பின்னரேனும் பரஸ்பரம் இருவருக்கும் கடித வரத்துப் போக்குகள் நடக்கின்றனவா? எவ்வளவோ உதவிகள் நாம் அந்த நண்பனுக்குச் செய்திருக்கையில் நம்மை இவ்விதம் மறந்து பிரிந்து ஒரு கடிதமும் வரையாதுபோயினனே என்று நமது உள்ளம் வாடி வருந்துவதில், சீ! இவ்வளவு தானா அவன் குணம், ஒவ்வொரு தடவையிலும் நம்மிடமிருந்து ஏதாவது கைப்பற்றுவதிலேயே அவனது நோக்கம்; இதுகாறும் தந்து ஏமாறியது போதுமென்று ஒதுங்கி விடுகிறோம். எத்துணையோ அன்னியோன்னியமா யிருந்த ஒரு நட்பின் முடிவு இவ்வாறாகிச் சிதைகின்றது. எப்பொழுதும் ஒவ்வொன்றைத் தூக்கிக் கொடுத்துக்கொண்டிருந்து அதன் மூலமாக ஒரு நட்பை நிலைக்க வைப்பதென்றால், அது என்றைக்கும் நடக்கக் கூடியதன்று; அத்தொடர்பு நீடித்திருக்கக்கூடியதுமன்று.

ஃ

சிலரைத் தயாளகுண மூர்த்திகள் என்கிறார்கள்; ஸத்குண ஸம்பன்னர்களென்கிறார்கள்; பரோபகாரிகளென்று பேசுகிறார்கள்;

---

ஒருவருடைய மனத்தை ஆராயாமல் கொண்ட நட்பு பின்பு கடும்பகையாய் முடிகிறது.

முற்றும் துறந்த பெரியோர் எனப் போற்றுகிறார்கள்; நூல்வல்லோரென்றும் மேதாவிகளென்றும் துதிக்கின்றார்கள். இந்தத் துதி மொழிகளுக்கேற்ப அவர்களும் அவ்விதமே காணப்படுகின்றார்கள். ஆயினும், சிற்சில தடவைகளில் பிறரைக் கண்டிதமாயும், கொடுமையாயும், கேவலப்படுத்திப் பேசிவிடுகிறார்கள். இரக்கமோ, நன்றியோ, பிறரது யோக்கியதாம்ஸங்களுக்கேற்ற மதிப்போ எதையுமே உணர்த்திக்கொள்ளாமல் உக்கிரகமான தன்மையில் நடந்துகொண்டு விடுகிறார்கள். இவ்விதம் இவர்கள் ஈனகோலமாய் நடந்துவிட்டுப் பிறகு இன்னோர் எத்துணை உதவிகள், ஆதரிப்புகள் புரிந்திடினுங்கூட, இவர்களது மதிப்பற்ற முந்திய கேவல ஸ்வபாவத்தை மற்றவர்கள் மறந்துவிட முடியாதவர்களாகி, சற்றுத் தூரத்திலேயே ஒதுங்கி நின்று தங்களின் மானத்தைக் காத்துக் கொள்ள வேண்டியவராகி விடுகின்றனர். அத்துடன் அவர்களது நேசமும் அன்பும் நிலையுள்ளதல்லவென்றும், என்றைக்கேனும் சட்டென்று பிரிந்து விடும்படிக்கே இருக்குமென்றும் உணரத்தலைப் பட்டுக் கொள்கின்றனர். இங்கு உண்டாகின்ற மனதின் மாறுதல்கள் பிறகு மறைவதேயில்லை. அவர்களின் தயவுக்கும் நட்புக்கும் காத்திருப்போர் அவர்களின் ஸ்வபாவத்துக்குத் தக்கபடியே தலையசைத்து நடந்துகொண்டு போய்விடுவதே தக்கதென்ற முடிவுக்கு வருகையில், அங்கு அன்பின் பசையோ, பரஸ்பர மனக் கவர்ச்சியோ, நட்புத்தன்மையோ எதுவும் காண்பதற்கின்றி யாவும் பற்றுதலற்ற வெளிநடிப்பாகித் தீர்கின்றது. உண்மையில், ஒரு சிலரைப் பற்றி உலகத்தார் என்ன விதமாய் நினைக்கிறார்களோ, அந்த விதமாக அன்னோர் இருப்பதேயில்லையென்பது பழகிப் பட்டுத் தெளிந்தோர் அறிந்துகொண்ட பரம ரகசியமா யிருக்கிறது. அதை வாய்விட்டு வெளியில் கூறினும் உலகினர் நம்புவதில்லை.

ஃ

தங்களின் காரியார்த்தமாக நம்முடன் பழகுகிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். இவர்கள் பரம ஆப்தர்களாகத் தங்களைக் காண்பித்துக்கொண்டு எந்த நேரமும் நமது பக்கலிலேயே இருப்பார்கள். எந்தெந்த சமயத்தில் நம்மிடமிருந்து தங்களுக்குப் பிரியமான எதெதைக் கைப்பற்ற வேண்டுமோ அதையெல்லாம் பெற்றுக்கொள்வார்கள். தங்களின் லாபத்துக்காக நம்முடன் இருந்து, தங்களின் காரியங்கள் முடிந்ததும் பிரிந்து விடுவார்கள். உன்னத ஸ்திதியி லுள்ளவர்களிடம் பழகுவதில் மிக்க மரியாதை

---

**சிலர் தங்களின் உத்தியோக பதவியிலோ, தங்கள் தலைமையில் நடைபெறும் காரியங்களிலோ சக்கரவர்த்திகள்போல் விளங்குகிறார்கள். ஆனால் பூச்சக்கரக் குடையில்லாததுதான் பரிதாபம்!**

யுடன் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் அவர்கள் கனத்த உதவிகளைச் செய்து நமது க்ஷேமத்துக்கு சாஸ்வதமான அநுகூலங்களைப் புரிந்து விடுகிறார்கள். மற்றொரு சமயமோ ஒரு சிறு அல்ப சங்கதியைச் செய்து கொடுப்பதற்கு முறண்பட்டு எதிர்வாதம் பேசுகிறார்கள். அச்சிறு உதவிசெய்ய மனமில்லாது போகிறார்கள். அதன் நிமித்தமாக நாம் கோபமோ, மனஸ்தாபமோ கொள்ளாமல், அந்த வேளையில் மாறிப் போயிருக்கிற அவர்களுடைய குணப்போக்கைத் தெரிந்துகொண்டு மௌனமாயிருந்துவிட நேர்கிறது. அதற்காக நேசத்தை விட்டு விடுவதற்கில்லை. பிறகு வேறோர் காலந்தன்னில் அன்னோர் எத்தனையோ கற்கண்டுக் கட்டிகளாகி விடுவதுமுண்டு. ஒரு சமயம் ஒரு எளியவனைக் கவனித்து உதவிசெய்யத் தன்னால் ஆனமட்டுக்கும் சிரமப்படும்படிச் சிந்தை செல்கின்றது. மற்றோர் சமயம் இது ஏதடா வீண்தொல்லை என்று மனம் அருவருத்துக் கல்லாய்விடுகின்றது. என்ன செய்யலாம்! எப்போது ஒரே மாதிரியாக ஒருவரின் குணங்கள் இருக்கவில்லையே! கோள் சொல்வோராலும் எத்தனையோ உத்தமர்களின் குணங்கள் மாறி மண்ணாய்ப் போயிருக்கின்றனவே! ஒருவன் இன்னொருவன் மீது கோள் சொல்லுகிறான். கோட்சொல்லியவனின் வார்த்தைக்கே மதிப்பு தந்து, கோளுக்கு ஆளானவன் தான் நிரபராதி என்று தன் நியாயத்தைச் சொல்ல வருகையிலே அதற்கு செவி கொடுக்காமல் ஒதுங்கிக்கொள்வோர் சிலருண்டு. இத்தகையோர் மிக்க பயங்கரமானவர்கள்; கடுஞ்சித்தமுள்ளவர்கள்; இவர்களின் காலில் விழுந்து நம் நியாயத்தைச் சொல்லிக் கொள்வதைக் காட்டிலும், நம்மீது கோட்சொல்லத் துணிந்தவனின் காலிலேயே விழுந்து அவனுக்குப் பிரியமானபடி நடந்துகொண்டுபோய்விடுவது உத்தமமானதென்று எண்ணும்படியும் ஆகிறது.

ஃ

ஒரு தனவான் ஒரு பள்ளத்தில் விழுந்து கால்கள் எல்லாம் சேறாகி எழுந்து நடந்து செல்லுகையில் எதிர் வீட்டிலிருக்கும் ஒரு எளியவன் சொம்பு ஜலத்துடன் ஓடிவந்து கால்களைக் கழுவிக் கொள்ளும்படி வேண்டுகின்றான். தனவந்தரோ இந்த சமயம் இவனது சொம்பு ஜலத்தின் உதவியைப் பெற்றால், இதிலிருந்து இவன் நம்மிடம் பிறகு தாராளமாக வரவும் போகவும் ஆகி, நம்மிடமிருந்து பல உதவிகளும் கேட்க நேர்ந்து தொல்லைகள் உண்

---

*அந்தோ விளக்கிருந்தும் பயனில்லை! திரை இடையே மறைப்பதனால் இருண்டிருக்கின்றது. விவாகமாகியிருந்தும் மகிழ்தற்கு முடியவில்லை. இடையில் கலகமோ, பருவமாகாமையோ மற்றும் ஏதுவோ திரைரூபமாக விழுந்து மறைக்கின்றது.*

டாகுமென்று கருதியவராய், அந்த சொம்பு ஜலத்தில் தம் கால்களைச் சுத்திசெய்து கொள்ளாமலே வேண்டாமென மறுத்துவிட்டுச் சென்று விடுகிறார். இது அந்த எளியவனுக்குப் பிரமிப்பையுண்டுபண்ணுகிறது. இதன் மூலமாக நாம் ஒட்டிக்கொள்வோமென்று இவர் எண்ணினார் என்று எங்கி, இவ்வளவு ஜாக்கிரதையுள்ளவரா இவர் என்று திகைக்கிறான். ராமன் பெரிய பதவியில் இருக்கிறான். அவனுடைய தந்தை மிக்க வியாதியான நிலையில் மலைவாழைப்பழங்கள் வேண்டுமென்கிறார். அதை ராமன் திண்டுக்கல்லிலுள்ள தனது பழய நண்பனை முருகனுக்குத் தெரிவித்து மணியார்டரும் செய்கிறான். முருகனோ மணியார்டரைத் திருப்பியனுப்பிவிட்டு, இரண்டுகூடை மலைப் பழங்களை யனுப்பிவைத்து, தகப்பனா குணம் பெறுகிறவரையும் பிரதி வாரந்தோறும் இவ்விதமேதான் அனுப்பி வருவதாயும், தனது தோட்டத்திலேயே பழங்கள் விளைவதால் பணம் அனுப்ப வேண்டியதில்லையென்றும் யதார்த்தமான உள்ளத்தோடும் அன்பினோடும் தெரிவித்துக்கொள்கிறான். உயர்பதவியிலுள்ள ராமனின் மனதிலோ வேறோர் யோசனை தோன்றுகிறது. ஓ! இந்த முருகன் இவ்வழியாக நம்மிடம் ஒட்டிக்கொண்டு நமக்கு மிகவும் வேண்டியவன்போல் ஆகிப் பிறகு நம்மிடமிருந்து பல உதவிகளையும் பெற்றுக்கொள்ள எண்ணுகிறான்போலும்! நாம் இருக்கும் உயர் நிலையில் இவனோடு சரிசமமாய்ப் பழகுவதும், இவனிடமிருந்து ஒரு உதவியை எதிர்நோக்கிப் பெறுவதும் நமது கௌரவத்திற்குத் தக்கதல்லவென்று குறுகிய நினைவு நினைத்து முருகனின் வேண்டுதலுக்கு விடை எழுதாதிருந்து விடுகிறான். முருகனும் இதைக் குறிப்பாய் உணர்ந்துகொண்டு மௌனமாகிறான். ஒரு மேல்பதவியிலுள்ள உத்தியோகஸ்தர் தமக்குத் தக்க சமயத்தில் தம் கீழ் உள்ள ஒரு குமாஸ்தா ஒரு முக்கிய உதவியைச் செய்ய வரும்போது, அதை வேண்டாமென்று மறுத்து விடுகிறார். அந்த உதவியைத் தாம் ஏற்றுக்கொண்டால் அதற்காகக் குமாஸ்தாவுக்குப் பிரியமாய் நடக்கும்படியாகி உட்படநேருமென்ற கோணலான எண்ணமே இவ்விதம் உதவிபெற மறுத்ததற்குக் காரணம். இவ்விதமாகச் சிலருடைய குணங்கள் லோபித்தனமாயும், கடுஞ்சித்தம் கொண்டவைகளாயும், நடுவழியில் தோன்றிக் கழுத்தறுப்பனவாயும், சிரித்துக்கொண்டே கோள்மூட்டிக் குடிகெடுப்பனவாயும் இருக்கின்றன. அன்பே இல்லாத இவர்களிடம் ஒருவன் தன் காரியார்த்தமாய்ச் செல்வதானால், அவர்க

---

தனது கபடம் மறைத்து வலியவந்து ஒட்டிக்கொள்ள விரும்புகிறவன் சிறு குழந்தைக்கு ஒருசொக்காய் தைத்துக்கொண்டு வந்ததுபோல் காண்பித்து அதைக் கொடுத்து நெருங்கிக்கொள்ள முயல்கிறான். ஆனால், வீட்டுப்பெண்களை மயக்குவதுபோல் வீட்டுத் தலைவனை வசப்படுத்த முடியாததால் பின்னடைய நேரிடுகிறது.

ளுக்குத் தக்கபடி பல்லவிகள் பாடி உட்பட்டு நடந்துகொண்டால் தான் அவன் காரியமும் முடியும்.

ஃ

ஒருவன் ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லும்பொழுது ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, தன்னைப்போலவே அதைக் கேட்ட எதிர் மனுஷ்யனும் புன்னகை கொள்வானென்று நம்புகிறான். ஆனால், அந்த எதிர் மனுஷ்யனோ பதிலுக்குப் பதில் சிரிப்பதாயின் அவனுக்குத் தான் மிக வேண்டிய மனிதன்போலப் பிறர் நினைத்துக்கொள்ளும்படியாகிவிடுமென்றும், அவ்வளவு தூரத்துக்குப் பழகக்கூடாதென்றும் கருதியவனாய் எவ்வித சிரிப்பையும் உணர்த்திக்கொள்ளாமல், அதற்குப் பதிலாகத் தனது முகத்தை உர் என்று கடுகடுத்த அன்னிய பாவனையில் வைத்துக்கொள்கிறான். இவனது உம் என்று கிடக்கும் முகத்தைக் கண்ட முன் சிரித்தவனோ இவனைப் பற்றி வியப்பு மிகுந்தவனாய், இவன் மகா சுயநல காரியவாதி என்று, அவனது குணத்தை அந்த நிமிஷமே அறிந்து கொண்டு, வெளிக்குமட்டில் அவனுக்கும் வேண்டியவன்போலவே காண்பித்துவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்குகிறான். பிறகு அவன் பக்கம் செல்வதேயில்லை. அவனிடம் ஒரு காரியமாய்ப் பேச வேண்டியிருக்கையிலும் இரண்டொரு வார்த்தைகளில் அதை முடித்துக் கொண்டு திரும்பி விடுகிறான். குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலேதான் குலாவிக் குளிர்ந்து நிற்கும். கொண்டாடாத—தன்னைப் பாராட்டாத—மதிக்காத—இடத்தில் எவருமே செல்வதில்லை. எளியவனாயினும், கூலிக்காரனாயினும், பிச்சைக்காரனாயினும் அவனுக்கும் மானமுண்டு; தன்மதிப்புண்டு; மனைவி மக்கள் உறவு சுற்றமுமுண்டு. தன்னை அலக்ஷியமாய் ஈனப் படுத்துவோனிடம் எவனும் பழக ஒப்பான்.

ஃ

குப்புவினிடம் சீனு மிக்க அன்பாக இருக்கிறான். அந்த அன்பின் மிகுதியால் சீனு தனக்கு வேண்டிய ஜெகநாதரிடம் குப்புவைப் பரிச்சயம் செய்து வைக்கிறான். குப்புவோ ஜெகநாதரிடம் அதிகப் பழக்கமுள்ளவனாகி சீனுவின்மீது கோள் குண்டுணிகள் கூறித் தாழ்த்தத் தொடங்குகிறான். இதை யறிந்த சீனுவுக்கு மனம் கொதிக்கின்றது. தனக்கு ஜீவாதாரமா யிருக்குமிடத்தில் இந்தக் குப்புவை ஏன் சேர்த்து வைத்தோமென்று கலங்குகிறான்.

---

பண்டிகை. உற்சவம் எனில் கவலையற்றவர்கட்குப் பூரண மகிழ்ச்சியே. அதனால் ஏற்படும் செலவு சிரமங்களைக் கவனிப்போர்க்கு விசாரத்துடன் சிறிதளவில்மட்டும் ஸந்தோஷம் புலனாகும்.

பிறகு குப்புவின் ஊருக்குத் தான் சென்ற சமயம் அவன் வீட்டில் பல காதற் கடிதங்கள் அகப்படுகின்றன. சீனு அதைப்பற்றிக் குப்புவிடம் கேட்க, அவன் அது ஒரு வேடிக்கையென்றும், தன்னிடம் ஒரு பெண் மயங்கிக் கற்பைக் கொடுத்த சங்கதியென்றும் கூறுகிறான். சீனுவுக்கு இதைக் கேட்க மனம் சகிக்கவில்லை. இவ்வளவு துராத்மாவாவென்று தன் மனதில் நினைத்தபடி தான் தனது ஊர்வந்து சேர்ந்து குப்புவின் துர்நடத்தையை ஜெகநாதருக்குத் தெரிவிக்கிறான். ஜெகநாதரோ இப்போது குப்புவினிடத்து மிக்க பாசம் கொண்டவராயிருப்பதால், சீனு தனக்கு எழுதிய கடிதத்தின் செய்திகளைக் குப்புவுக்கு அறிவிக்கிறார். குப்புவுக்கு ஆத்திரம் பொங்குகிறது. "பாவி மனிதன், ஒரு நாளும் ஒரு நன்மையும் செய்யாதவன், என்னை உங்களிடமிருந்து கத்தரித்துவிடப் பார்க்கிறான்" என்று கண்டபடி தூஷணைகள் புரிந்து வரைந்து, தன்னை நிரபராதியென்று தெரிவித்துக் கொள்கிறான். இவ்வளவு தூரத்திற்கு இந்தக் கதை வளர்ந்தது எவ்வாறு? இங்குதான் நாம் கருத்தூன்றிக் கவனிக்கவேண்டியிருக்கிறது. சீனு தனக்கு முக்கியமாயும் அடைக்கலஸ்தலமாயுமுள்ள பெரிய இடத்தில் குப்புவைச் சேர்த்து வைத்ததிலிருந்து இவ்வளவு விபரீதங்களும் உண்டாயினவென்பது வெளிப்படை. குப்புவின் உண்மையான குணங்களை அறிந்துகொள்ள முடியாமல், அவனைப் பரம யோக்கியனென்று சீனு கருதப்போய் இவ்வளவு துன்பங்களையும் அனுபவிக்க வேண்டியவனாகிறான். நம்முடன் பழகுகிறவர்களின் உண்மைக் குணங்களைப் பல சமயங்களிலும் தெரிந்துகொள்ள முடியாமலேபோய்விடுகின்றது. அதனால் நாம் அடைகிற கஷ்ட நஷ்ட நிஷ்டூரங்கள் சகித்தற்கரியனவாகின்றன; கண்ணீர் விட்டுக் கதறவும் வைக்கின்றன. ஐயோ! என்ன சோதனையிது?

ஃ

நேற்று நம்முடன் விருந்துண்டு வெகு உல்லாஸமாகப் பேசி மகிழ்ந்தோரை இன்று கடைவீதியிற் பார்க்கும்போது, அவர் வேறொரு பக்கமாய் ஜாடையாகத் திரும்பி உட்கார்ந்துகொண்டு நம்மைக் கண்டும் காணாதவர்போலிருப்பதைப் பார்க்கிறோம். நேற்று அவர் நம்முடன் நடந்துகொண்ட அன்பு நட்புகளென்ன?

---

சிலர் விவாகத்தில் மிக்க வெறுப்புடையவர்கள்போல் நடித்துவிட்டு, தம்மவரையெல்லாம் பகைத்து நின்று, ஊராரின் செலவில் எவ்வளவு அனுபவிக்க முடியுமோ அவ்வளவிலும்கைநனைத்துக்கொண்டு திரிகிறார்கள். இன்னோர் யோக்கியமாய் விவாகத்தைச் செய்துகொண்டு சொந்த சம்பாத்திய ஜீவனத்துடன் ஏன் வாழப் பார்க்கலாகாதோ? பெண்ணாசையற்றவர்கள் போல் நடிப்போர்தான் மிக்க கபடஸ்தர்களாகவும், பேராசைக்காரர்களாகவும் இருப்பார்கள். இல்லாதவர்களுக்கே அதிக ஆசைப் பைத்தியம் இருக்கும்!

இன்று அவர் தன்னை மறைத்துக்கொள்ளப் பார்க்கும் கபட வேடமென்ன? இப்படியும் அநேகர் நமக்குள் இருக்கிறார்கள். நமது கையில் பணம் தாராளமாய் நடமாடியபோது நமது வீட்டோடு இருந்து உண்டு களித்து, இப்போது நம்மீது வெறுப்புடன் ஒதுங்கி நம்மைக் கேவலமாகப் பேசும் எத்தனையோ பந்துக்களையும் நண்பர்களையும் காணலாம். இவர்களின் குணங்கள் முதலில் நமக்குத் தெரியாததனால் நாம் கைப்பொருளைச் செலவிட்டும் நம்மிடமிருந்தவற்றைத் தூக்கிக் கொடுத்தும் கடைசியாக இப்பொழுது ஏமாறி, ஐயோ! மோசம் போனேமேயென்று வாடுகிறோம். நமக்குப் பிரியமானவனென்று நம்பி, அவனிடம் நமது குடும்ப விஷயங்களைத் தெரிவிக்கப்போக, அவனே கபட மனத்துடன் நமது உள் விஷயங்களையெல்லாம் கிரகித்து, நமக்கு வேண்டியவர்களிடம் நம்மைப் பழித்துக்கூறி, அவர்கள் நமக்குச் செய்யவிருக்கும் நன்மையையும் கெடுக்கப் பார்க்கிறான். பொறாமைக் குணத்தோடும் நம்முடன் குலாவுவோர் எத்தனையோ பேர்! இவனும் ஒரு வீடும் வாசலுமாய் வாழ்கிறானே என்று உள்ளுக்குள் நெஞ்சம் கொதித்துப் புகைந்தபடி வெளிக்குமட்டும் வெகு பிரேமையோடு சுற்றி நிற்போரும் எண்ணிலரே! எவ்வளவு பறிக்க இயலுமோ அவ்வளவுக்கும் கைப்பற்றிக் கொள்வதன் நிமித்தமாகச் சூழ்ந்து நம்மிடம் நெருங்குவோரும் பலரே. நாம் ஒருவனை உத்தமனென்றும், உயர்ந்த சிந்தையுடையவனென்றும் நினைத்து, அவனிடத்து எவ்வளவோ மதிப்பு வைக்கிறோம். அவனே ஊருக்குச் சென்ற பின் ஒரு கடிதங்கூடப் போடுவதில்லை. கடைசியில் அவனைப் பற்றி விசாரிக்கும்பொழுது பரம ஸாத்வீகனாகத் தோன்றிய அவன் வெகு மூர்க்கனாயும், கபடஸ்தனாயும், சுயநலப் புலியாகவும் இருப்பதைக் காண்கிறோம். மிகவும் நம்பிக்கை வைத்து வியாபாரம் செய்து நமது சரக்குகளை விற்பனைக்குக் கொடுத்த இடத்தில்தான் நாம் வெகுவாக மோசம் போய்விடுகிறோம். ஒருவனுடைய கஷ்டத்தை நோக்கி இன்னொருவன் ஒரு பெருந்தொகையை உதவி, அந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றுகிறான். உதவியைப் பெற்றோனே பிறகு அந்தத் தொகையைத் திருப்பித் தராமல் ஏமாற்றி விடப் பார்க்கிறான். நன்றி செய்ததற்கு இது பிரதி உபகாரமா?

---

காம உணர்ச்சி நமது கட்டுப்பாட்டிற்கெல்லாம் அடங்குவதில்லை. படித்த படிப்பு வேதாந்தங்களையெல்லாம் அது எங்கோ மூலையில் தூக்கி எறிந்துவிட்டு விருப்ப பூர்த்தியில் ஆத்திரப்படுகிறது. மனித சுபாவம் எல்லாருடைய விஷயத்திலும் ஒன்றுதான். வெளிக்கு மிக்க மனோபலசாலிகளாகத் தோன்றுவோர் உள்ளுக்கு ஒட்டையாயிருக்கிறார்கள். 14-வயதுப் பெண்களும், 17-18-வயது ஆண்களும் விவாகமாகாவிடில் கெட்ட நடத்தையிலோ, நியசிந்தனையிலோ இறங்கமாட்டார்களென்று நிச்சயமாய்ச் சொல்லிவிடுவதற்கில்லை.

ஒவ்வொருவரது குணங்களும் அதற்கான தருணங்கள் நேர்ந்து கொள்ளுகிற ஒவ்வொரு போழ்தில்தான் தெரிய வருவதாகி, அதற்கு முன்பாக அறியக்கூடியதாக இல்லாதிருப்பதால், உலக வாழ்வில், நம்முடன் பழகுவோரிடத்தில் நாம் முற்றிலுமே நம்பிக்கை வைத்திடாமல் ஜாக்கிரதையும் முன்னெச்சரிக்கையுமாக, விழித்த கண்களோடுமிருந்து நடந்து கொள்ளக்கடவோம். எவ்வளவு கவனிப்புடன் நாம் நடந்துகொண்டாலும், நாம் தவறிவிழ வேண்டிய படுகுழிகள் அடிக்கடி எதிர்படுமானாலும், நம்மால் இயன்ற வரையில் நம்முடன் பழகுவோரிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்ள முயற்சிப்பது இனிவரும் தீமையைத் தடுக்க உதவி செய்வதாக இருக்கும். எதிலும் ஜாக்கிரதை நன்மை தரும்.

---

பத்திரிகாசிரியரின் பொறுப்பு :—சென்னை ஹைகோர்ட் பிரதம நீதிபதியும், கனம் நீதிபதி பார்ட்ஸ்வெல்லும் ஆகிய இருவர்களின் முன்பாக 'சைபுல் இஸ்லாம்" ஆசிரியர் கோர்ட்டை அவமதித்ததாக வந்த வழக்கின் விசாரணையில் பின் வருவன பத்திராசிரியரின் பொறுப்பை யுணர்த்துவனவாகும்.

கே. நரசிம்மய்யர்:—மெட்ராஸ்மெயிலிலிருந்து பிரசுரிக்கப்பட்ட செய்தி ஆசிரியருக்குத் தெரியாது. பத்திரிகை ஆபீசில் பல வேலைக்காரர்களும் உதவி ஆசிரியர்களும் இருக்கின்றனர். வழக்கம்போல் அவர்கள் செய்திகளைத் திரட்டி வெளியிட்டுவிட்டார்கள். இவ்விஷயத்தை ஆசிரியர் கவனிக்கவில்லை.

பிரதம நீதிபதி :—யார் வெளியிட்டபோதிலும், ஆசிரியர்தான் பொறுப்பாளி.

கே. நரசிம்மய்யர்:—இந்த ஒரு விஷயத்தில் என் கட்சிக்காரர் சிறிது அஜாக்கிரதையாய் இருந்துவிட்டார். இரண்டையும் கவனித்திருந்தால், கோர்ட்டை அவமதிக்கக்கூடிய முறையில் என் கட்சிககாரர் நடந்திருக்க மாட்டார்.

பிரதம நீதிபதி :—விருபங்கள், செய்திகள் எதுவாயினும், பிரசுரமாவதற்கு ஆசிரியரே பொறுப்பாளியாவர்.

---

ஒரு பெண்ணின் தேகதர்ம அவஸ்தைகளும் அந்தரங்க விருப்பங்களும் அவளது பர்த்தா அறிகிறபடி அவளை யீன்ற தாயும் தெரிந்துகொள்ள முடியாது. ஆடவர் மகளீர் இருபாலாரும் எத்துணையோ ரதிஸல்லாபத்தில் மூழ்கிவிட்டு, வெளியில் அத்தனையும் மறைத்து மிக்க பரிசுத்தராகவும் வைராக்கிய சித்தமுடையோராகவும் நடித்தலே உலகப்போக்கு. தம் உள்ளம் மறைத்தலென்பது யௌவன காலத்தில் கற்றுக்கொள்ளும் ஸாகஸ வித்தையில் ஒன்றும்.




## போக்கடித்த பணத்தின் ஏக்கம்!

1. இங்கே நான் வைத்த பணம் எங்கேயோ காணலையே!
எங்கே தான் வைத்தேன் எண்ணத்தில் தோன்றலையே!

2. பெட்டிக்குள் வைத்துப் பெரிதும் மகிழ்ந்த பணம்
கிட்டி எடுத்தவரார்? கேள்விமுறை இலையோ?

3. அதையே கைச்செலவுக்(கு) ஆகுமென எண்ணினனே!
பதைக்குதே நெஞ்சம்! பணம் பறந்து போயிற்றே!

4. சின்ன பையில்தானே சேர்த்திருந்தேன்; "பெட்டியினை
முன்னம் மூடாத மூடத்தால் போயிற்றோ?"

5. படுந் துயரத்தில் பறி கொடுத்தல் வேறேயோ?
நடுக்கொள்ளை பகலில் நமது மனைக்குள்ளேயோ?

6. எத்தனையோ உழைப்பால் எய்தியதாம அப்பணமே!
அத்தனை பாட்டின் பணமும் ஐயையோ! போயிற்றே!!

7. கர்த்தனே என் நெஞ்சுக் கலக்கத்தைத் தீராயோ?
மெத்த விருத்தியில் யான் மேவ அருள் தாராயோ?

8. பித்தளைப் பெட்டியிலும் பேதையேன் பார்த்திடுவேன்;
அத்தனைப் பணமும் அதில் அகப்பட்டால் மிக நன்றே!

9. ஆகா! மறைந்த பணம் அத்தனையும் என்றன் மனம்
நோகாத வாறே நோக்குமிங்கு காண்கிறதே!

10. அப்பாடா! எவ்வளவு ஆறுத்துயர்! தவிப்பு!!
இப்போது பட்ட துயர் எப்போதும் மறவேனே!

11. வைத்த இடம் மாற்றி வைத்துப் பின் மறப்பதிலே!
சித்தம் திகைத்து எங்கும் தேடிடச் செய்கிறதே!

12. எடுத்த போருளதை "முன் இருந்த விடத்தே"
[வைத்தால்,
தடுத்து விடக்கூடும் எந்த சஞ்சலமும் நேராமே!

ஆரியூர்—வ. பத்மநாபபிள்ளை.

[பத்திராசிரியர் எழுதிக்கொடுத்த கருத்துகளுக்கு இணங்கச்செய்தது.]




# பத்மா

## எதிர்பாராத ஆச்சரிய ஸம்பவங்கள்.

(562-ம் பக்கத் தொடர்ச்சி.)

### IV



கிரீசரும், இராமேசரும் வேலையாட்களும் ஊர் முழுதும் தேடியலைந்தும் பத்மா அகப்படவில்லை. மூன்றாம்நாள் இரவு ஐந்து மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமமொன்றில் ஓடுகிற நதியில் பத்மா குதித்துவிட்டதாயும், அருகிலிருந்தவர்கள் தூக்கியெடுத்துப் போதிய சிகிச்சைகள் செய்தனராயினும், பிழைப்பது சாத்தியமில்லை யென்றும் செய்தி எட்டிற்று. கிரீசரும் அவர் மனைவியும் கதறி யழுதனர். ஆ! அப்பொழுது மனோகரனின் மனம் என்ன பாடு பட்டிருக்கும்! அவன் உன்மத்தம் கொண்டவன் போல் ஜனத்திரளினின்றும் விலகி விரைந்தோடினன்.

ஃ

இராமேசருக்குப் பத்மாவின் செய்தியைத் தெரிவிக்க எவருக்கும் தைரியம் உண்டாகவில்லை. வெளியிலிருப்பவர்கள் இவ்விதம் தத்தளித்தபடி கிடக்க, இராமேசரின் அறையில் ஒரு குழப்பமுண்டாயிற்று. திடீரென்று ஒருவன் கைத்துப்பாக்கியுடன் அவர் முன்பு தோன்றி, "துரோகி! இந்தப் பத்திரத்தைப் படித்துவிட்டுக் கையெழுத்துப்போடு; எதிர்வார்த்தையாடாதே; சரியான ஏற்பாடுகளுடன் வந்திருக்கிறேன்" என்றான்.

இராமேசர்:—ஒரு வேலைக்காரப் பயலுக்கு இவ்வளவு துணிவா? என் முன்பு வந்து அதட்டிப் பேச அவ்வளவு தைரியமா? இந்தப் பூச்சாண்டிக்கு நான் பயப்படக் கூடியவனா? சீ! நாயே வெளியிற் செல்.

வந்தவன்:—வீணே காலத்தைக் கடத்தவேண்டாம். என் தற்காப்புக்கு என் கையில் துப்பாக்கி யிருக்கிறது. நீர் கையெழுத்திடாவிடில் உமது காலைப் பார்த்துச் சுடுவேன். உம்மைக் கொல்லமாட்டேன். ஆனால் உயிருடன் வைத்துப் பல இடங்களில் சுட்டுச் சித்திரவதை செய்வது நிச்சயம். உடனே கையெழுத்தைப் போடும். வஞ்சகன் எத்தனை நாளைக்கு வாழ முடியும்?

---

சில நோய்கள் சிரமப்பட்டுத் தேடிய ஆஸ்திபோலாகி ஸந்ததியாருக்கு விநியோகமாகிறது. உதாரணமாக, மேகவியாதியானது தலைமுறை தலைமுறையாய்த் தொடர்ந்து வருவது எவரும் அறிந்த விஷயம்.

இராமேசர் கலங்கினார். வந்திருப்பவன் சுட்டுவிடக் கூடுமென்றும், நெஞ்சுத் துணிவு கொண்டவனென்றும் அறிந்தார். வேறு வழியற்றுப் பத்திரத்தை வாசித்துவிட்டு நடுக்கத்துடன் அதில் கையொப்பமிட்டார். வந்தவன் அத்துடன் அவரை விடவில்லை. அவரது பெருவிரல் பதிவையும் அப் பத்திரத்தில் வாங்கிக்கொண்டு எலக்டிரிக் விளக்கை அணைத்து அதை அடியோடும் கெடுத்துவிட்டு மறுகணத்தில் மறைந்தான்.

ஃ

எங்கும் இருள் சூழ்ந்துகொள்ளவே, இராமேசர் ஆத்திரமடைந்தவராய் விளக்கை மறுபடியும் ஏற்ற முயன்றும் முடியாமற்போய், பரபரப்புடன் வெளியில்வந்து "வாழ்வதைப் பார்க்கிறேன்" என்று சொல்லியபடியே இன்னொரு அறைக்குள் நுழைந்தார். அந்த அறையும் இருள் மயமாயிருந்தது. உடனே துப்பாக்கியிலிருந்தும் குண்டு வெளிப்பட்ட சத்தம் கேட்டது. "விட்டேனா உன்னை? என்னை எதிர்க்க அவ்வளவு துணிவா?" என்று கூறியவாறு இராமேசர் அவ்வறையி லிருந்தவனின் கரத்தைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டு, காந்தவிளக்கை ஏற்றினார். எல்லோரும் அவ்வறைக்குள் ஓடி வந்தனர். மனோகரனின் கையில் துப்பாக்கி யிருந்தது. அவன் கைகளைப் பற்றியவாறு நின்ற இராமேசர், "இந்தப் பாவி என் அறைக்கு வந்து என்னைச் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தி ஒரு பத்திரத்தில் பலாத்காரமாக என் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டு, விளக்கை அணைத்துவிட்டு ஓடி இந்த அறைக்குள் நுழைந்தான். நான் விடாமல் துரத்திவந்து இந்த அறையில் அவனைப் பிடிக்கையில் என்னைத் துப்பாக்கியால் சுட, குறி தவறி மேலிருந்த தலையணையில் பட்டு அதோ அது எரிந்துபோ யிருக்கிறதைப் பாருங்கள். சீக்கிரம் போலீசாரைத் தருவியுங்கள்" என்றார். மனோகரன், "ஐயோ!" என்றான். சில நிமிஷங்களுக்குள் போலீசார் வந்து மனோகரனைக் கைது செய்துகொண்டு சென்றனர்.

ஃ

இந்த சம்பவத்திற்குப் பிறகு கிரீசர் மெதுவாகப் பத்மா மரணத் தறுவாயிலிருப்பதை இராமேசருக்குத் தெரிவித்தார். அவர் கொடுந் துயரெய்தித் தம்மையே மறந்து அழுது புலம்பினார். உடனே இராமேசர், கிரீசர், அவரது மனைவி, பணியாட்களுமாக மோட்டாரில் ஏறி, அவ்விரவிலேயே பத்மா இருந்த கிராமத்துக்குச் சென்றனர். பத்மா ஒரு கிராமவாசியின் வீட்டில் மிக்க ஆயாசமாய்ப் படுத்திருந்தாள். கிரீசரும் அவர் மனைவியும் அவளைக் கண்டு பிரலாபித்தனர். இராமேசர் பத்மாவின் அருகில் நெருங்கி, "உடம்பு எப்படியிருக்கிறது?" என்றார். பத்மா அவருக்குத் தன் முகத்தைக் காட்டாமல் பின் பக்கம் திருப்பிக்கொண்டாள். கிரீசர் மனோகரன் கைதியானதையும், அவன் இராமேசரை மீறி நடந்துகொண்டதையும் தெரிவித்தார். அதைக்கேட்டதும் பத்மா திடுக்கிட்டவளாய், "ஐயோ! பாவி! என் உயிர்த்தலைவனைப் பாழ்ப்படுத்தி விட்டாயா?" என்று முகத்தி லறைந்துகொண்டு

---

எதிர்காலம் எவ்விதம் இருக்குமென்பது நிலையில்லாததாக இருக்கிறது. நம்பி எதிர் நோக்கியவைகள் நிறைவேறுமற்போய் மிகுந்த துயரத்துடன் சகித்துக்கொண்ட நாட்கள் எத்தனையோ வுண்டு.

மூர்ச்சையானுள். மனேகரனைத் தனது உயிர்த்தலைவன் என்று பத்மா கூறிய வார்த்தைகள் இராமேசரின் நெஞ்சைப் பெரிதும் சுட்டு வருத்தின. கிரீசரும் மனமுடைந்தார். பத்மா அந்த வீட்டைவிட்டு வெளியிற் செல்லும்படி இராமேசருக்குக் கூறினுள். கிரீசர் அவ்விதம் சொல்லாதே என்று பத்மாவைக் கண்டித்தார்.

ஃ

மனேகரனின் வழக்கு விசாரணையாயிற்று. மனேகரன்தான் இராமேசரை எதிர்க்கவில்லை யென்றும், அவரைச் சுடவில்லை யென்றும், தானும் பத்மாவும் இளமை முதலாகக் காதலித்து நின்றதாயும், பத்மாவை இராமேசர் மணந்துகொள்ள ஏற்பாடுகள் செய்ததும், தன் மனத்தை மாற்றிக் கொண்டு பத்மாவைக் கூடியவரையில் மறந்துவிடப் பிரயாசைப்பட்டு வந்ததாகவும், பத்மா தன்னையே விரும்பி அந்த எண்ணம் நிறைவேருததால் நதியிற் குதித்து இறந்தாளென்பதைக் கேட்டதும், தனக்காக உயிர் விட்டவளுக்குத் தானும் உயிரைக் கொடுக்கவேண்டுமென்று துணிந்து; தன் அறையில் விளக்கை அணைத்துவிட்டு, இராமேசரின் கைதுப்பாக்கியால் தன்னைச் சுட்டுக்கொள்ளுகையில், இராமேசர் அங்கு திடீரென வந்து தன் கையைப் பற்றவே குறி தவறி குண்டு பரணையிலிருந்த தலையணையிற் பட்டதென்றும், மறு நிமிஷத்தில் இராமேசரைக் கொல்ல முயன்றதான குற்றம் அபாண்டமாய்த் தன் மீது சுமத்தப்பட்டதென்றும், தான் இராமேசரிடமிருந்து எந்தப் பத்திரத்திலும் கையெழுத்து வாங்கவில்லை யென்றும், தன் தந்தை இறந்த நாள் முதல் இராமேசரிடமேதான் இருந்து வந்து தலைமைக் குமஸ்தாவாக இருந்துகொண்டிருப்பதாயும் தான் குற்றவாளி யல்லவென்றும் கூறினன்.

ஃ

இராமேசர் இதை எதிர்த்து மனேகரன் தன்னைக் கொல்லவந்தது உண்மையேயென்றும், அவனைப் பன்னிரு பிராயமுதல் தன் ஆதரவில் வைத்து வளர்த்துப் பிறகு தனது தலைமைக் குமாஸ்தாவாகவும் செய்து கொண்டு எவ்வளவோ அன்புடன் நடத்திவந்திருக்குந் தான், அவன்மீது திடீரென்று குற்றஞ்சாட்டக் காரணமில்லையென்றும், இப்போதும் அவனது அடாத செய்கைக்கு வருந்துவதாயும், அவன் காதலித்த பத்மாவைத் தான் விவாகம் செய்துகொள்ள முயன்றதில் தன்மீது விரோதங் கொண்டு கொல்ல முயன்ருனென்றும் நவின்ருர். இராமேசரின் பக்கத்துக்கு வேண்டிய சாக்ஷிகள் இருந்து விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் யாவரும் இராமேசரின் பக்கமாகவே சாக்ஷியம் கூறினர். மனேகரன் பக்கத்தில் எந்த சாக்ஷிகளும் இல்லை. கடவுள்தான் தன் பக்கத்திற்குப் பேச ஒரு ஸாக்ஷியை யனுப்பவேண்டுமென்று மனேகரன் புகன்ருன். இதைக் கேட்ட இராமேசர் கலகலவென்று நகைத்தார்.

ஃ

மறு நிமிஷத்தில் ஒருவர் நியாயாதிபதியின் முன்பு தோன்றி, தான் மனேகரன் பக்கம் ஸாக்ஷியாக வந்திருப்பதாகக் கூறினர். மனேக

---

அவ்விதம் செய்வது தேகத்திற்குத் தீங்கு என்று வைத்தியர் கூறுகிறபடி நோமற் போவது தேக திடகாத்திரத்தால் இருக்கலாம். ஆயினும் கடைசியில் வைத்தியரின் சொல் பலித்துவிடும்.

னின் வக்கீல் அவரை ஸாக்ஷியாக விசாரிக்கவேண்டுமென்றார். அந்தப் புதிய ஸாக்ஷியைப் பார்த்ததும் இராமேசர் கலக்கமடைந்து வாடினார். புது ஸாக்ஷியாக வந்தவர் கூறியதாவது:— என் பெயர் ஜெகநாதன், நான் மனோகரனின் தந்தையாகிய விஜயரங்கரிடம் சமையற்காரனாக இருந்தவன். விஜயரங்கரின் மனைவி காலம்சென்றுவிட்டாள். அவருக்கு மனோகரனைத் தவிர வேறு சந்ததியில்லை. அவர் வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் பிரபலமாக வர்த்தகம் விவசாயம் இரண்டையும் நடத்திவந்தார். சிறிது கடனும் இருந்தது. அந்தக் கடனைத் தமது நண்பராகிய போலீஸ் இன்ஸ்பெக்டர் தாமோதரம் பிள்ளையிடமே வாங்கியிருந்தார். அவர் அந்தரங்கமாக ஒரு உயில் எழுதி, தாமோதரம் பிள்ளையின் கடனுக்காகத் தமது ஐயாயிரம் ரூபாய் பெறுமான நிலத்தைக் கொடுத்துவிடுவதென்றும், மற்ற சொத்துக்கள் யாவும் எழுபத்தையாயிரம் ரூபாய் பெறக்கூடியதை தனது சமயற்காரனான ஜெகநாதனே டிரஸ்டியாக இருந்து நிர்வகித்து மனோகரனுக்கு ஒப்புவித்து, மனோகரனின் ஆதரவிலேயே கடைசிகாலம் வரையில் இருந்துவரவேண்டியதென்றும், சத்தியவந்தனான ஜெகநாதனுக்கென்று தனியாக ஒரு சொத்தைத் தான் விலக்கி வைக்கவில்லையென்றும், ஆயினும் மனோகரன் தனது சொத்துக்களை ஒப்புக்கொள்ளும்போது ஐயாயிரம் ரூபாய் ஜெகநாதனுக்குக் கொடுத்து, அவனை அந்தியம் வரையில் ஸம்ரக்ஷிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டு உயிலை ரிஜிஸ்தர் செய்து தமது நண்பரான தாமோதரம் பிள்ளையிடம் பத்திரமாய் வைத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்துவிட்டார். இது எவருக்கும் தெரியாது. உயில் எழுதிய இரண்டாம் வருஷத்தில் விஜயரங்கர் காலமானார். அப்போது மனோகரனுக்கு பன்னிரண்டு வயது இருக்கும். விஜயரங்கரிடம் இராமேசர் மானேஜராக நூறு ரூபாய் சம்பளத்தில் இருந்து வந்தார். அவருக்கு உயிலின் இரகசியம் தெரியாதானதால், ஏராளமான கடன்களைத் தம்மிடமிருந்தும் பிறரிடமிருந்தும் விஜயரங்கர் பெற்றிருப்பதாகத் தப்புக்கணக்குகள் ஏற்படுத்தி, எல்லாக் கடன்களையும் தாமே தீர்த்ததுபோல் காட்டி விஜயரங்கரின் வர்த்தக சாலையையும், விவசாயசாலையையும் வஞ்சகமாக அபகரித்துக்கொண்டார். நான் இதை எதிர்த்துப் பேசி விஜரங்கரின் உயிலிற் கண்டபடி ஐயாயிரம் ரூபாய் கடனைத் தவிர வேறில்லையென்றும், ஸர்வ சொத்துகளுக்கும் நானே டிரஸ்டி யென்று வழக்காடப்போவதாகவும் கூறினேன். இராமேசர் இதைக் கேட்டுத் திகைத்துப்போனார். ஒருதினம் இரவில் நான் நித்திரையில் இருக்கும் சமயம் இராமேசரும் வேறு மூவருமாக உள் நுழைந்து என் வாயில் துணியையடைத்துத் தூக்கிச் சென்று, எனக்குப் பலாத்காரமாக ஏதோ மருந்தைச செலுத்தி மயக்கமுண்டாக்கி, சிங்கப்பூர் கப்பலில் அனுப்பிவிட்டனர். சிஙகப்பூரில் நான் ஒரு தோட்டத்தில் கூலியாக இருந்து படாத பாடுபட்டேன். இராமேசரின் கையாள் அத்தோட்டத்தின் மானேஜராக இருந்தான். எட்டு வருஷங்களுக்குப்பின் அவன் இறந்ததற்கு அப்பால்தால் எனக்கும் விடுதலை கிடைத்

---

சாஸ்திரீயமான அறிவு வளர்ச்சியின் பயனாக ஆராய்ச்சி வரவர அதிகரித்து வருகிறது. எங்கேனும் ஒரு இடத்தில் யாரேனும் புதியதொரு விஷயத்தைக் கண்டு பிடித்திருக்கிறாரென்ற செய்தி அடிக்கடி நாம் கேட்கும்படி யாகிறது.

தது. நான் வியாதியாகி ஒரு வருஷ காலம் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்து பிறகு பிழைத்து இவ்வூர் வந்து சேர்தேன்.

ஃ

முன்பு போலீஸ் இனிஸ்பெக்டராயிருந்த தாமோதரம் பிள்ளை இப்பொழுது இவ்வூரில் போலீஸ் சூப்பிரண்டாக இருப்பதை யறிந்து அவரிடம் சென்றேன். அவர் என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு, “முக்கிய மனுஷ்யனான நீ இல்லாததால் இராமேசரின்மீது எந்த நடவடிக்கையும் செய்யக்கூடவில்லை” என்று கூறினர். அவருடன் கலந்து பேசி ஒரு பத்திரம் எழுதிக்கொண்டு அவரோடும் மோட்டாரில் வந்து, அவரை வெளியில் நிற்கவைத்து நான்மட்டும் கைத்துப்பாக்கியுடன் இராமேசரின் அறையில் நுழைந்து. என்னை அவர் செய்த கொடுமைகளைக் கூறி, அவரது அக்கிரமங்களை யெல்லாம் விவரமாக எழுதி வைத்துள்ள பத்திரத்தில் கையெழுத்திடும்படி வற்புறுத்திப் பெற்றுக்கொண்டு மின்சார விளக்கை அணைத்துவிட்டு வெளியில் வந்து மோட்டாரில் ஏறி சூப்பிரண்டெண்டுடன் சென்றுவிட்டேன். இராமேசர் தான் இனித் தப்பமுடியாதென்று தெரிந்ததும். தான் அனுபவித்து வந்த அவ்வளவு சொத்துகளும் மனோகரனைச் சேர்வதா என்று அவனைக் கொன்றுவிட. அவன் அறையில் நுழைந்திருக்கிறார். அதே சமயம் மனோகரன் கைத்துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக்கொள்ள முயன்றிருக்கிறான். இராமேசர் அவன் கைகளைப் பிடிக்கவும் குறி தவறிவிட்டது. அந்த சந்தர்ப்பத்தைத் தன்னை மனோகரன் சுட்டுக்கொல்ல வந்ததாக மாற்றி, அவனே தன்னிடம் பத்திரத்தில் கையெழுத்து பெற்றானென்று கூறி எவரும் நம்பத்தக்க விதமாக இராமேசர் கதை கட்டிவிட்டார். படித்த புத்திசாலிகள் போட்ட பொய் முடிச்சை அவிழ்ப்பது மிகவும் கஷ்டம். ஆனதால், எல்லோரும் மனோகரனே இராமேசரைக் கொல்ல முயன்றதாக நம்பிவிடவே, அவனும் கைதியானன்.”

ஃ

ஜெகநாதன் தான் கூறியவைகளுக்கெல்லாம் தகுந்த சாக்ஷிகளைக் கொண்டுவந்து நிரூபித்தான். போலீஸ் சூப்பிரண்டெண்டும் ஜெகநாதனின் சார்பாக ஸாக்ஷியம் கூறி, விஜயரங்கர் செய்த உயிலையும், இராமேசர் கையெழுத்திட்டுத் தந்த பத்திரத்தையும் கோர்ட்டின் முன்பு ஆஜர் படுத்தினர். இராமேசர் ஏற்படுத்தியிருந்த புதுக் கணக்குகளெல்லாம் கோர்ட்டின்முன்பு கொண்டுவரப்பட்டு எல்லாம் பொய்க் கணக்குகளென்று ருஜுவாயின. இராமேசர் தமது குற்றங்கள் அனைத்தையும் ஒப்புக்கொண்டார். மனோகரனை வாழாதபடி செய்யவே அவனைக் கொல்வதற்குச் சென்றதாகவும், அவன் கைத்துப்பாக்கியுடன் இருக்கவே தன்னையவன் கொல்லவந்ததாகக் கல்பனை செய்ததாகவும் புகன்றார். ஸ்ரீசர் ‘ஐயோ! இத்தகைய துராத்மாவுக்கா பத்மாவைப் பலியிட யிருந்தேன்’ என்று ஆக்கிரகம் கொண்டார். கோர்ட்டார் இராமேசருக்கு ஏழு வருடம் கடின சிக்ஷை விதித்து, மனோகரனை நிரபராதி யென்று விடுதலை செய்தனர். மனோகரனை நீதிஸ்தலத்திலேயே பத்மா ஓடிவந்துவந்து அவன் கரங்களைப் பற்றிக்கொண்டாள்

---

எல்லா சௌகரியங்களுமிருந்து விவாகத்திற்கு அவசரப் படாதிருப்பவன் அந்தரங்கத்தில்கேடு கெட்ட நடத்தை யுடையவனாகவும் இருக்கலாம்.

பிரிந்த உண்மைக் காதலர் மீண்டும் கூடினர்.

ஃ

ஜெகநாதன் மீசையை முறுக்கிக்கொண்டு நின்றான். முன்பு இருந்ததுபோலவே இப்போதும் நான் சமையல் வேலையே செய்வேன் என்றான். தமோதரம் பிள்ளை சமையல் வேலையைவிட மனோகரனின் சொத்துக்களை மேற்பார்வை செய்துவரும் வேலையை ஒப்புக்கொள் என்றுகூறி, இத்தகைய சத்தியவந்தனை பணியாள் விஜயரங்கருக்குக் கிடைத்தது அவரது பாக்கியமே என்றார். ஜெகநாதன் தன் ஆதீனத்திலிருந்த சகல சொத்துக்களின் பாத்தியதையையும் மனோகரனின் வசம் ஒப்புவித்தான். இராமேசரால் வஞ்சகமாகக் கைப்பற்றப்பட்டிருந்த ஸகல சொத்துக்களும் மனோகரனைச் சேர்ந்தன.

ஃ

எந்த ஐசுவரியக் குவியலுக்காகக் கிரீசர் இராமேசரை ஆகாயத்தில் உயர்த்திப் புகழ்ந்து தாஸானுதாஸராயினரோ, அந்த ஐசுவரியக் குவியல்களுக்கெல்லாம் மனோகரனே இப்பொழுது அதிபதியாகிவிட்டதைக் கண்டு மனம் குளிர்ந்தார்! இராமேசர்மீது வைத்திருந்த அளவுகடந்த மதிப்பு மனோகரன்மீதும் இப்போது தாவிற்று. சில தனிகர்களுக்குப் பணம் முக்கியமே தவிர குணம் சிரேஷ்டமாகத் தோற்றுவதில்லை. பணமிருந்தால் கிழக் கட்டைக்கும் தங்கள் பெண்ணைக் கொடுத்துவிடத் தயாராகிவிடுவார்கள். அவர்களில் கிரீசரும் ஒருவராவார்.

ஃ

மனோகரனுக்கும் பத்மாவுக்கும் கடவுள் கிருபையால் விவாகம் நடந்தேறிற்று. அவர்களின் காதலும் ஆனந்தமயமாய் ஓங்கி விளங்குகின்றது. ஜெகநாதன் பழைய சமயற்காரன்போலவே சாமான்ய உடையுடன் இருந்துவந்தாலும், அவனுக்கு மனோகரன் ஒரு தந்தைக்குள்ள மதிப்பைக்கொடுத்து வணங்கி வருகிறான்.

(முற்றிற்று.)

T. S. சங்கரலிங்கம்.

[நமது அன்பர், "பத்மாவானவள் நதியில் விழுந்திறந்ததாகவும், அது கேட்டு மனோகரன் தற்கொலைபுரிந்து கொண்டதாகவும்" அவ்வளவுடன் இக்கதையை சோகமாய்முடித்திருக்கிறார். அதை நாம் இந்தஅத்தியாயத்தில் வேறுவிதமாக மாற்றிப் புதியகற்பனையொன்றைப் புகுத்திச் சந்தோஷமான முடிவுடன் பூர்த்தி செய்துள்ளோம். ப-ர்.]

---

மழையோ, வெயிலோ, நெடுந்தூரமோ, மிகு கஷ்டமோ—எதையும் பாராமல் புறப்பட்டுவிடுவோர்தான் காரியத்தில் வெற்றிகொண்டவராவார்கள். இவர்கள் வெற்றியுடன் திரும்பிய பிறகு, மழைக்கும் வெயிலுக்கும் பின்னடைந்தோர் நாமும் அவர்களுடன் புறப்படாமற்போனோமே யென்று ஏங்குகிறார்கள்.

---

மர்மஸ்தானத்தின் மேற்புறம் இரு பக்கங்களிலும் முடிச்சு போட்டதுபோல் நரம்புகள் கூடிக்கொண்டு நெறிகட்டிக்கொள்கின்றன. பிறகு குளிர்ஜ்வரம் வந்துவிடுகிறது. ஜ்வரத்துக்குப்பின் புருஷர்களுக்குப் பீஜங்கள் வீக்கிவிடுகின்றன. பிறகு சிறுகச்சிறுக குணமாகின்றது.



# ஹாஸ்ய சஞ்சீவினி



கிருஷ்ணன்:—நீ பத்திரிகைக்கென்று வியாசம் எழுதிவைத்திருந்தாயே? அதை அனுப்பிவிட்டாயா?

ராமன்:—என் தகப்பனாரிடம் அதைக் காண்பித்தேன். அது பாரதத்தைப்பார்த்து அப்படியே எழுதியதென்றும், தானே சுயமாக எழுதியதைத்தான் அனுப்பவேண்டுமென்றும் சொல்லிவிட்டார். நான் பாரதத்தைப் பார்த்து எழுதினேனென்று அவர் எவ்விதம் அறிந்தாரோ தெரியவில்லை.

ஃ

மனைவி:—இன்று வெள்ளிக்கிழமையல்லவா? அதனால்தான் வீடு முழுதும் மெழுகினேன்.

கணவன்:—மெழுகுகிறதில் காண்பித்த புத்திசாலித்தனத்தை, மெழுகிவிட்டுப் பிறகு ஒரு அல்ப சங்கதியில் பெரிய சண்டை பிடிக்க வருவதிலும் காண்பித்துக்கொண்டால் நல்லது. மெழுகிவிட்டுப் பெரிய கலகம் செய்வதில் மெழுகினாலும் ஒன்றுதான்; மெழுகாவிட்டாலும் ஒன்றுதான்.

ஃ

கிறிஸ்துவப் பிரசங்கி:—நமது ஆதித் தாய்தந்தையரான ஆதாம் ஏவாள் பாவம் செய்ததால் நாம் எல்லோரும் பாவிகளே. இயேசுவின் மூலம் பாவமன்னிப்பு கேட்கவேணும்.

வாலிபன்:—சிறுபோது முதல் ஒரு குழந்தைக்கு "நீ சுத்தன்" என்று சொல்லிக்கொண்டே வந்தால் அவன் அசுத்தனாகான். மனுஷ்யர்களெல்லாம் பாவிகள் என்று சொல்லிக்கொடுத்தால் குழந்தை வளர வளரத் தானும் பாவியென்று நினைத்துப் பீதியடையும். ஆங்கிலேயர்கள் தங்களைப் பாவிகளென்று சொல்லிக்கொண்டு சும்மாவிருந்தால் உலகத்தில் அத்யத்புதமான காரியங்களைச் செய்யமுடியுமா? புதிய இயந்திரங்களைக் கண்டுபிடித்திருப்பார்களா? இந்த 'இந்தியா' தேசம் அவர்களுக்குக் கிடைத்திருக்குமா?

ஃ

மனைவி வெளியில் சென்றிருந்த சமயம் பிணியாளியாய்ப் படுத்திருந்த கணவன் சமயலறைக்குச் சென்று ஒவ்வொன்றாக ஆராய்ந்தான். ஒரு பாத்திரம்நிறைய சாம்பார், மற்றொரு மாத்திரம் நிறைய மொச்சைக்கொட்டைக் குழம்பு, இன்னொரு சட்டி நிறைய ரஸம், மற்றொருபக்கம் பளபளவென்று எண்ணெய் மேலே மிதக்க ஊறுகாய் ஜாடி, ஒரு சட்டித் தயிர், காய்கறிவகை, ஒரு பெரிய தவலைநிறைய சாதமும் இருந்தது. எல்லாம் பார்த்துவிட்டுவந்து தன் படுக்கையில் படுத்துக்கொண்டான். பிறகு மனைவி வீட்டுக்குள் வர, அவளைப் பார்த்து,

கணவன்:—உனக்கு மிகவும் மனம் பிடித்துப்போன என் மாற்றாந்தாயும் அவளைச் சேர்ந்தவர்களும் வந்திருக்

---

உண்மையான பொன் கப்பலேறிப் போய்விட, இப்போது இந்தியர்கள் அணிந்துகொள்வதற்கு கிலிட் (போலி பொன்) வளையல்கள் தோன்றியிருக்கின்றன. இரண்டு ரூபா வளையல்கள் பிறகு காலணாகூடப் பெறாது.

கிறார்களே குழம்பு காய்கறி சரியாகச் செய்துவைத்திருக்கிறாயா?

மனைவி:—ஏதோ கொஞ்சம் குழம்பு கிடக்கு. அதைத்தான் அவர்கள் ஊற்றிக்கொண்டு புசிக்கவேண்டும். சாதமும் போதாது. தொட்டுக்கொள்ளவும் ஒன்றுமில்லை! உங்களுக்கு எவரும் பிடிக்காது; எனக்கு அப்படி இருக்கமுடிகிறதா?

கணவன்:—பாடுபட்டுத் தேடிய தன் கைப் பணத்தைச் செலவிட்டுப் பார்த்தால், அப்போது பிடிக்கிறதும் பிடிக்காததும் தனக்குத் தானே தெரியவரும். குழம்பே போதாதென்றாயோ? நான் இப்போதுதான் உள்ளே போய் எல்லாம் பார்த்து வந்தேன்.

ஃ

புருஷன்:—அவர்களுக்கு என் இட்டிலி வாங்கவில்லை:

மனைவி:—வீண் செலவு எதற்கு? அவர்கள் பழயசாதம் சாப்பிடுவார்கள்.

புருஷன்:—அதுமட்டும் சும்மாவந்ததா? அது செலவில்லையா? இட்டிலி வயிற்றுக்குப் போதாதென்று ஊறுகாயுடன் பழய சாதம் சாப்பிடுகிறார்களாக்கும். அப்படித்தானு?

ஃ

வேணு:—கோயிலிலே திருவிழா வருகிறதே. உன் வீட்டில் பலமாக விருந்துக்கூட்டம் சேருமே?

ராமு:—இந்தத் தடவை அப்படியல்ல. அதிகமாய் வந்து குந்துகிறவர்கள் சண்டையிட்டுக்கொண்டு போய் விட்டதால், அவர்கள் இங்குவராமல் கோயிலுக்குமட்டும் வந்துவிட்டு அப்படியே போய்விடுவார்கள். செலவு கொஞ்சம் மிச்சப்படும்தான்.

வேணு:—அப்படியானுல் சண்டையுண்டாவதிலும் ஒரு லாபம் இருக்கிறதுபோலும்! அத்துடன் ஒவ்வொருவரின் குணங்களையும் நன்ருகத் தெரியலாம் போலும்!

ஃ

சுயமரியாதைக்காரர்:—பரதாழ்வானிடம் ஸங்கதி யறிவிக்க ஹனுமார் ஓடுவானேன்? ஒரு தந்திமூலமாய்த் தெரிவிக்கலாகாதா? கடலுக்கு அணைகட்டுவானேன்? ஸ்டீமரில் போகப்படாதா? அநேக ரிஷிகளிருந்தும் தந்தியும் ஸ்டீமரும் அக்காலத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை இரயிலாவதுண்டா? தபால் ஏற்படாவதுண்டா?

இராமாயண சாஸ்திரி:—இக்காலத்திலுள்ளோர் இராமாயணத்தில் குறைகூற அஞ்சுவதில்லை ரயில், தந்தி, ஸ்டீமர் இவைகள் அக்காலத்தில் அநாவசியமா யிருந்ததென்று ஒரு பதத்தில் விடையளிக்கிறேன்.

சுயமரியாதைக்காரர்:— விடை சொல்லத்தெரியாமல் அநாவசிய மென்றுமட்டும் பதில் சொல்லும் ராமாயணசாஸ்திரிகளும் எங்களுக்கு அநாவசியமே

இராமாயணசாஸ்திரி:—வினவும் அவசியமே; அதற்கு விடை கொடுப்பதும் அவசியமே. ஆனுல், குதர்க்க

இளங் குழந்தையை ஊட்டி வளர்ப்பவளே உலகமாளுவாள் என்பது பழமொழி. வீட்டு வேலைகளைப் பூரணமாகச் செய்து முடித்த பிறகுதான் பெண்கள் மற்ற வேலைகளுக்குத் தம்மாலான உதவி செய்ய ஒழிவு தேடிக் கொள்ளவேண்டும்.

புத்தியுடன் கேட்பதற்குப் பதில் சொல்லிப் பயனில்லை.

ஃ

பெண்:—பார்த்தியா! பார்த்தியா! அம்மா ஓடிவா, ஓடிவா, சீக்கிரம் வா.

தாயார்:—(அவசரமாக ஓடிவந்து) என்ன சங்கதி? என்ன நடந்தது? ஏன் அப்படி அவசரமாகக் கூப்பிட்டாய்?

பெண்:—என் பாவாடையிலிருந்து அப்பா கோவணத்திற்குக் கிழித்துவிட்டாரு. வேஷ்டியைத் தூக்கிப்பாரு; கட்டிக்கொண்டிருக்கிறது தெரியும், நான் பொய்சொல்லவில்லை.

ஃ

அவர்:—எப்பொழுதும் சண்டையிடும் சுபாவமுள்ள மனைவியையுடையவன் என்ன செய்வது?

இவர்:—அவளிடம் கொள்ளும் கோபத்தால் தூக்கு, ஜெயில், கலகம் வராதபடி பார்த்துக்கொள்வதே பெரிய வேலை. சொல்லாமல் ஊர்விட்டுப் போய்விடுவது எல்லாவற்றிலும் நல்ல வேலை. ஆனால், மனம் வராதே.

ஃ

அப்பன்:—பட்டதாரிகளை கிராமத்துக்குப்போய் வேலை செய்யும்படி சொல்கிறார்களே. அங்குபோய் அவர்கள் என்ன செய்வது?

துப்பன்:—குளக்கரையிலுள்ள பிள்ளையார் கோயிலில் ஜெபம் செய்கிறது. "என் தலைவிதியை நினைந்தழுவனே" என்று கூவுவது!

ஃ

கிராமவாசி:-படித்த பெரிய மனிதர்கள் பெரிய பெரிய கூட்டங்கள் போட்டுப் பேசுகிறார்களே. கேட்கிறவர்களும் கேட்டுவிட்டுத் தங்கள் பாட்டில் போகிறார்கள். அதனால் ஊருக்கு என்ன நன்மை?

நகரவாசி:—அதனால் பெரியமனிதர்களின் பேர் பரவும். புது கீர்த்தி உண்டாகும். அதனால் அவர்களின் பேருக்கு ஒரு கிராக்கி ஏற்பட்டு லாபம் கிடைக்கும். தனது சொந்த சுயநலமின்றி எவனும் தனது சிறு சுண்டுவிரலைக்கூட ஆட்டமாட்டான். அது ஒரு தினுசான பிழைக்கிற நாகரீக வித்தையப்பா!

ஃ

வினா:—குறைந்த விலை விற்பனை என்றால் என்ன அருத்தம்?

விடை:—எப்போதுமுள்ள விலை தான்; ஆனால் அதிக மோசமான விலை சொல்வதை அந்த சமயம் நிறுத்திவைப்பதென்று அருத்தம்.

வினா:—போலித் தங்க வளையல் விற்கிறதே வாங்கலாமா?

விடை:—பிறகு அதை விற்க முயலும்போது இரண்டு ரூபா வளையல் இரண்டு காலணுவுக்காவது விலை போகுமா என்பதை இப்போதே யோசித்து வாங்கு.

---

ஒரு மனுஷ்யன் ஒரு பெண்ணின் கடமையை நிறைவேற்றுதல் ஒரு போதும் முடியாததே. மனுஷ்யனுக்குக் குடும்பாதரிப்பே யோசனை. பெண்ணே பிள்ளைகளின் குணசீல காரணி. எப்போதும் பிறர் திருத்தும் போது அதை அன்புடன் மதித்து ஏற்றுக்கொள்ளல் கஷ்டமான கல்வி இக்கல்வியை மாமி, கணவன் முதலானோரிடமிருந்தும் பெண் பெறுகிறாள்.






இன்று கூடிய நமது கடையில் ஆசிரியப் பெரியோர்களைப் பற்றிப் பல நண்பர்கள் பேசினர். ஒருவர் பின்வருமாறு கூறினார். "நூலாசிரியரென்று ஒருவரைப் பலரும் அறிந்திருக்கிறார்களேயன்றி அவர்களுடைய நூல்களை விலைக்குப் பெற்று ஆதரிப்பவர்களாயில்லை. இலவசத்தில் நூல்களைப் பெறவே நூலாசிரியர்களை சிநேகிக்கிறார்கள். ஒரு 'ஷாப்' வியாபாரி ஒரு நூலாசிரியருக்கு இரண்டு பிஸ்கோத் பெட்டிகளைக் கொடுத்தால் அதற்கு ஒன்றரை ரூபாய் கணக்கு எழுதுகிறார். ஆனால், அந்த வியாபாரியே அந்நூலாசிரியரிடம் புஸ்தகங்களைப் பெற்றால் அதை இனாமாகக் கொடுத்ததாக எண்ணிக்கொள்கிறார். இன்னொருவர் உங்களுக்கு உதவாத புஸ்தகங்கள் இருந்தால் தாருங்கள் என்கிறார். புஸ்தகங்களோ குழந்தைகளுக்குச் சமம். அதில் எந்தக் குழந்தையைக் கொடுப்பது? புஸ்தகத்தை இனாமாகப்பெற்றுப்பல்லிளித்து மறைந்த தந்திரசாலிகளைவிட, புத்தகத்தை விலைக்குப் பெற்றவர்களே அதிக விசுவாசமுள்ளவர்களாக இருக்கிறார்கள். நூலாசிரியரின் மீது ஏதோ கனத்த மதிப்புவைத்தவர்கள்போல் அவரைக் காணவந்து நெடுநேரம் பேசித் தொலைக்கிறவர்கள் அவருடைய ஒரு புஸ்தகத்தைக்கூட வாங்காமல் வந்தனம்கூறிப் புறப்பட்டுவிடுகிறார்கள். அந்தவேளையில் கையில் ஒரு காசுதானுமின்றி, இவர்களால் ஏதாவது விற்பனை நடக்குமென்றும், செலவுக்குக் கிடைக்குமென்றும் எண்ணி வெகுநேரம் உட்கார்ந்து பேசிய ஆசிரியர் பின் ஏமாற்றத்துடன் எழுந்திருக்கிறார். நூலாசிரியர்களை ஆதரிக்கும்விதம் இவ்வாறுதானோ?" என்றார்.

ஃ

அல்லாபிச்சை:—"அநேக நூலாசிரியர்களின் வாணாட் செய்திகளைப் பார்க்கையில். அன்னோர் பெரும்பாலும் இராக்காலத்திலேயே தங்களின் நூல்களை எழுதுகிறார்களென்று தெரிகிறது. ஒவ்வொருவருக்கும் வழக்கப்பட்டுப்போன ஒரு நேரம் இருக்கிறது. அந்த நேரத்தில் பிசகாமல் எழுந்து உட்கார்ந்துகொண்டு மடமடவென்று எழுதிவிடுகிறார்கள். பத்திராசிரியர்களாயுள்ளோருக்குப் பகற்காலமே தொழில் செய்யும் நேரமாக இருப்பதில், அந்தக் காலமும் அவர்களுக்குப் பழக்கமாகித் தங்களின் எழுத்துத் தொழிலை ஸமத்காரமாய் நடத்திச் செலுத்துகிறார்கள். ஆசிரியர்கள் எழுதும் காலையில் பொதுவாக ஏகாந்தத்தையே அவர்கள் விரும்புகிறார்கள். தனியான அறையில் இருக்கவே அவர்கள் மனம் போகிறது. அப்பொழுதுதான் விஷயங்கள் அவர்களின் சிந்தனைக்குத் தோன்றி எழுத முடிகிறது. இரண்டு ஆசிரியர்கள் ஒரு அறையில் கூடிக்

---

தன்னலம் பாராட்டும் நயவஞ்சகப் பெண்கள் தேன் மொழிகளால் சிற்றின்பப் பிரியர்களை மயக்குகிறார்கள்.

கொண்டால் அப்பொழுது இன்னும் உத்ஸாகமாகவே வேலை செய்கிறார்கள். இன்னொருவர் அருகிலிருக்கிறாரே யென்பதால் வேலை கெட்டுவிடுவதில்லை. ஆனால், ஆசிரியராயுள்ள ஒருவர் அங்கு வந்ததற்குப் பதிலாக, பொழுது போக்கும் நோக்கத்தோடுள்ள ஒருவர் அங்கு வந்தால், அந்த நேரத்தில் எழுதிக்கொண்டுள்ள வேலையே அடியோடும் கெட்டுவிடுகிறது. இரண்டு பத்திராசிரிய நண்பர்கள் பரஸ்பரம் சந்தித்து இரண்டு நாட்களாகப் பல பல பேசி இன்புற்றிருக்கையில் இரவு ஒரு மணி ஆகியும் பேச்சு வளர்ந்து செல்வதைக்கண்ட நண்பர் நாளைக்கு நான் பத்திரிகையின் தலையங்கமும் முக்கிய செய்திகளும் எழுதவேண்டிய நாளானதால், என்னை இனி விட்டுவிட்டுத் தூங்கச் செல்லுங்கள் என்றார். அதற்கு மற்ற நண்பரோ நான் அந்த வேலைகளைக் காலை நான்கு மணியிலிருந்து ஒன்பது மணி வரையும் எழுதி முடித்துக் கொடுத்துவிடுகிறேன்; இப்போது என்னிடம் பேசுங்கள் என்றார். இருவருமாக இரவு மூன்று மணிவரை பேசிக்கொண்டிருந்துவிட்டு நித்திரைக்குச் சென்றனர். சரியாக மணி நான்கு அடித்ததும் மற்றொரு நண்பர் தமது வாக்குப்படி எழுந்து எழுதும் அறைக்குச் சென்று விளக்கை யேற்றிக் கதவைமூடித் தாள்ப்பாளிட்டுக் கொண்டார். காலையில் பத்து மணிக்குக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தார். இந்தா என் வாக்குப்படி ஸகலமும் எழுதியாய்விட்டது; இனி உங்கட்கு வேலையே யில்லை என்று கூறித் தாம் எழுதியவற்றையெல்லாம் எடுத்துக்கொடுத்தார். ஆசிரிய நண்பர் அவற்றை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டுவணங்கினார். கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்பதின் இன்பச்சுவை இங்கு நன்கு தெரிந்தது" என்றார்.

ஃ

தாண்டவஞ்செட்டியார்:— "நூலாசிரியர்களின் பேட்டியைச் சுலபமாகப் பெறலாம். வாரப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடைய பேட்டியையும் எளிதில் பெறலாம். ஆனால், தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியருடைய பேட்டி கிடைப்பது பெரிய தடபுடலாயிருக்கிறது. தினசரி ஆசிரியரைக் காணவரின், அவர் இருக்குமிடமே தெரிகிறதில்லை. மானேஜரைக் கேட்பின், அவரே சகலமும் பேசியனுப்பிவிடப் பார்க்கிறார். ஆசிரியரைக் காணவேண்டுமென்று வற்புறுத்தினால், "எழுதிக்கொண்டிருக்கிறார்" என்று வெகுநேரம் தாமதிக்க வைத்துப் பிறகு ஆசிரியரிடம் அழைத்துச் செல்கிறார். சில நிமிஷங்களில் பேச்சை முடித்துக்கொண்டு வெளிவந்துவிடவேண்டி யிருக்கிறது. சில இடங்களில் ஆசிரியரின் அறைக்கு வெளியே ஒரு சேவகன் நின்றுகொண்டு தடுத்து, காணவந்தவர்களின் பெயரை உள்ளுக்குப் போய்த் தெரிவித்து, அதன் பின் அனுமதிபெற்று உள்ளே விடுகிறான். இது பெரிய இராஜபேட்டி போலிருக்கிறது" என்றார்.

ஃ

---

சிலர் குறித்த தினத்தில் பத்திரிகை வராவிட்டால் அவசரப்படுகிறார்களே தவிர, பிறகு இவர்களை அப்பத்திரிகையிலுள்ள விஷயங்களைக் கேட்டால் இன்னும் படிக்கவில்லை யென்கிறார்கள். ஆனால், அப்பத்திரிகையில் தாங்கள் எழுதியுள்ள விஷயங்களை மட்டும் மற்றவர்கள் அவசியம் படித்துத் தீரவேண்டுமென்று ஆவற் படுகிறார்கள். ஒரு பத்திரிகையை ஒரே நிமிஷத்தில் படித்து முடிக்கிற சூரத்துவப் புலிகளுமிருக்கிறார்கள்!

ஆமவடைப் பண்டாரம்:- "நான் ஒரு புஸ்தகக் கடைக்குச் சென்ற போது, அங்கு ஒரு ஆசிரியரை முதன்முதலாகச் சந்தித்தேன். அவர் வரைந்த நூல்களை நான் வெகு பிரியமாய் வாசித்து அவரிடத்து விசேஷித்த மதிப்பும் அன்பும்கொண்டிருந்தேன். அந்த அன்பின்பெருக்கால் அவரிடம் எவ்வளவோ ஆர்வத்துடன் பேச நெருங்கினேன். அந்த ஆசிரியரோ அன்பின் பசையே சற்றுமின்றி, தம்மைப் புகழ்ந்ததையும் கவனியாதவராகி இரண்டொரு சொல்லில் பதில் தந்துவிட்டு அப்புஸ்தகக் கடையில் தாம் தந்த புஸ்தகங்களின் கணக்கைத் தீர்த்துப் பணம் பெற்றுக் கொண்டு அவ்வளவுடன் சென்றுவிட்டார். அவரைப்பற்றி மேன்மையான எண்ணங்கள் கொண்டிருந்த எனக்கு இது பிரமிப்பை விளைத்தது. இவ்விதமாகப் பிறரிடம் அலக்ஷிய சுபாவமுள்ள சில ஆசிரியர்கள் இருக்கிறார்களானாலும், பெரும்பான்மையான ஆசிரியர்கள் தம்மைக் காணவருவோரிடத்து எத்துணையோ உண்மையன்புடன் நடந்துகொள்வோராயிருக்கின்றனர். உலகம் பலவிதம்" என்றார்.

ஃ

முக்கண்ணனார்:—"சிவர் ஆசிரியர்களை நன்கு தெரிந்தோராயினும் அவர்களிடம் அன்பு பாராட்டிநிற்பதில்லை. அவர்களை அலக்ஷியமாய் அவமதித்தலே அதிகம். இவர்கள் அவமதிப்பினும் உலகம் ஆசிரியர்களைப் போற்றிக் கௌரவிக்கத்தவறுவதில்லை. ஆசிரியர்களிடம் அன்புடனே பழகப் பாக்கியமற்றவர்கள் துரதிர்ஷ்டசாலிகளேயாவர். ஒரு நூலை வாசிப்பதிலும், அந்நூலாசிரியரோடு சம்பாஷிப்பது அதிக இன்பத்திற்கிடமாகும். இதன் ருசிகரத்தை அநுபவித்தவரே அறியவல்லார். சிலர் வழியில் எதிர்படும் ஆசிரியரைப் பார்த்துப் புன்னகை புரிவர். இது புன்னகையின் மூலம் அவருக்கு வணக்கம் செலுத்துவதான அர்த்தமாகும்; அந்த ஆசிரியரைத் தாங்கள் தெரிந்து கொண்டிருப்பதாகக் காட்டும் அன்புள்ள ஜாடையுமாகும். இந்தப் புன்னகைக்கு மற்றொரு பொருளும் உண்டு, "அதோ போகிறாரே அவர் தான் அந்தப் பெரிய ஆசிரியர்" என்று பழித்துப் பேசுவதாகும். ஆசிரியரோ இந்தப் பழிப்பு நகைப்புகளையும் முந்திய வணக்கமான புன்னகையையும் ஒன்றுபோலவேகொண்டு அவற்றை ஒரு விநோதமாகக் காண்பதானதன்மையில் மௌனமாய்ச் சென்றுவிடுகிறார். சில ஆசிரியர்கள் பிறர் தங்களிடம் இவ்வளவு நேரம் தான் பேசலாமென்ற ஒரு கணக்கையும் வைத்துக்கொண்டு அவ்வளவுடன் சம்பாஷணையை முடித்துக் கொண்டு, பிறகு தங்களின் காரியத்தைக் கவனிக்கத் தொடங்கிவிடுகின்றனர்" என்றார்.

ஃ

ஆழாக்கு அரிசியார்:—'ஒரு ஆசிரியர் தம்முடன் பேசிக்கொண்டிருந்தவர்களிடம் புகன்றதாவது:—'இப்போது நீங்கள் என்னைக் காணவந்து இனிப்புடன் உரையாடுவதை நான் அவ்வளவாகக் கவனியாமல், என்னை விட்டுச் சென்றபிறகு நீங்கள்

---

ஒரு அற்ப பிழைக்காகப் பிரமாதமாகத் தமது மக்களைக் கண்டிக்கும் தாய் தந்தையர், தாங்கள் எத்தனைபேரை மோசம் செய்து பொய் கூறி வஞ்சித்துமிருக்கக் கூடுமென்பதை யோசித்துப் பார்ப்பதில்லை. கள்வன் கூடத் தன் குமாரன் தன் பணப்பெட்டியில் திருடினால் கண்டிக்கப் புறப்பட்டுக்கொள்கிறான்.

என்னைப்பற்றிக் கொள்ளப்போகிற அபிப்பிராயம் இன்னதென்பதைப் பற்றியே உங்களின் பேச்சிலிருந்தும் முகச்சாயலிலிருந்தும், என்னுடன் வெறுமனே பேசி மெதுவாக எழுந்து விடுவதிலிருந்தும் குறிப்பாக நோக்கி ஆராய்ந்துகொண்டிருக்கிறே னென்பதை நீங்கள் தெரிந்துகொள்வது உத்தமமாகும்; ஏனெனில், நான் புகழ்ச்சிகளை மதியாமல், என்னுடன் பேசுபவர்கள் எத்தகையோர் என்று அவர்களின் குணப்போக்குகளையே ஆழ்ந்து சிந்திப்போனுக இருக்கிறேன். இவ்விதமாக நான் எச்சரிக்கையோ டிருப்பதற்குக் காரணம் வெகுபேரிடமிருந்து நான் அடைந்துள்ள ஏமாற்றமேயாகும். கபடமும் சுயநலமும் பழிப்புமே அதிகம். அன்பு எங்கேயோ ஓரிடத்தில் அபூர்வமாகத்தான் காணப்படுகிறது'' என்று கூறினர். இதைக் கேட்டவர்களும் சுயநலத்துடன் வந்தவர்களாதலின் பதில் உரைப்பதற்கின்றி மௌனமாயினர்'' என்ருர். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

'பஹதூர்'போன்வண்டுசெட்டியார்.

## தன் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமை.

ஒரு அதிகாரியோ, ஒரு குடும்பத் தலைவனே ஒரு காரியத்தில் தவறுதலான வழியில் நடந்துகொண்டு விட்டாலும், தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தான் செய்ததே சரியென்று ஸ்தாபிக்க முயற்சி செய்வது எங்குமே வழக்கம். அதிகாரியின் தவறுதலை அவரைச் சேர்ந்த அதிகாரி மூடிவிட்டு அவரைத் தாங்கிப் பேசுவது போலவே, குடும்பத்தலைவனின் தவறுதலை அவனது குடும்பத்தாரும் மூடிவிட்டு அவன் செய்த காரியம் தப்பல்லவென்றே சாதிக்க முற்பட்டுக் கொள்வர். இவ்விதமே, ஒரு நங்கையும் தன் தவறைக் கணவனிடம் அது தவறல்லவென்றே பேசித் தன் கட்சியை ஸ்தாபிக்க முயலுவாள். கடைசியில் குற்றம் குற்றமே.

குளிர் ஜ்வரம் வந்துகொண்டிருக்கையில் எழுதும்போது பேனாவைப் பலமாக அழுத்தி நிறுத்தி எழுதாவிடில், எழுத்துகளின் உருவம் பல கோணல்களாய், "அவர்தான் அதை எழுதினரா''வென்று சந்தேகிக்கும்படியிருக்குமாம். நடுக்கலில் எழுதுவது கிறுக்கித்தள்ளுவது ]போலிருக்கும்.

---

"நம்மிருவருக்கும் பரஸ்பரம் உள்ள நேசம் இவ்வள வென்பதை நாம் ஒருவருக்கொருவர் ஒருபோதும் சொல்லிக்கொண்டதில்லையே; மலரில் மணமும், எள்ளில் எண்ணெயும், உடலில் உயிரும் போல நமக்குள்ளிருந்த நேசம் இவ்வள வென்பதை வாயினல் விளங்கச் சொல்வது அசாத்தியமன்ரே?''

# மன்மதபாண வதை.

உலக வழக்கில் ஆடவரினும் பெண்களுக்குக் காம வாசை மிகுதியென்பர். தம் காதலைத் தாமே கண்ணாலும் முறுவலாலுங் காட்டுவரேயன்றித் தம் வாயாற் பிதற்றுதலரிது. இது காதலருள்ள இடத்தே தெரிவிக்கும் அகக்குறிப்பாகும். அக்காதலன் பிரியின் பூட்டிட்ட வாய் திறந்து புலம்பும். தம் குற்றம் காணாமல் பிறர்மேல் குற்றத்தைச் சாட்டும். காதலனின் பிரிவாற்றாமையைத் தோழிக்குத் தலைமகள் பின்வருமாறு கூறுகிறாள்:—

"கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவு
மென்னின்ற வாயும் பிழைத்ததேன்—பொன்னின்ற
கொங்கரும் பன்னழலையாய் பொருள் வயிற்
பாங்கனார் சென்ற நெறி."

தன் துயருக்குக் காரணர் சிவன், காகம், இராகு, தன் அன்னை என்றனள். எங்ஙனமெனில், மன்மதனை யுருவழித்துப் பின்னர் உருவாக்கிவிட்டவர் சிவனாதலால் மன்மதபாண வதை பொறுக்கிலேன்.

"கண்ணில்லாத மனப்பிணி கருத்திடை பொருந்திடின் மனத்
தெண்ணிலா துயிரிறுத்திடுமிடத்தினு மிடுக்கணுறுவார்."

சந்திரமதி மன்மதனைப் பழித்துக் கூறுமிடத்து இவ்வனங் கூறுகின்றாள். உன்னை எரித்து உருவமில்லாதவனாகச் செய்த சிவபிரானை நீ கொல்லச் செல்வது உனக்கு ஆண்மைத்தனமே யல்லாமல், வேறே நீ யாரைக் கொல்லத்தக்கது? பெண்பிறப்பைக்கொண்ட என்னை நீ கொல்லத் தொடங்குகிறது அறிவின்மையேயாகும்.

"உன்னைக் கொன்றான் உருவிலி யாக்கினான்
றன்னைக் கொல்லுவ தாண்மைத் தனமலாற்
பின்னைக் கொல்வதேன் பெண்பிறப் பாகிய
வென்னைக் கொல்லுவ தேழைமைப் பாலதே."

(1) முன்னொரு காலந் தன்னில் சிவபெருமான் யோகத்திலிருக்க, அதனைக் கெடுக்க முயன்ற தேவர்கள் ஏவுதலால் மன்மதன் சிவபெருமான்மேல் மலர்க்கணை தொடுத்தனன்: அப்பொழுது சிவபிரான் சினங்கொண்டு தமது அக்கினிக்கண்ணால் நோக்கவும் உடனே

மன்மதன் எரிந்து சாம்பராயினன். இதனால் சிவபிரானுக்குக் காம தகனன் எனப் பெயருண்டாயிற்று. அங்ஙனம் உருவழித்த மன் மதனுக்குக் கருணைபுரிந்து உருக் கொடுத்ததனால் அவன் செய்யும் கொடுமை சகிக்கக் கூடவில்லை.

(2) காகம் எங்ஙனம் துயர் விளைத்ததெனின், நாள்வரவைக் காட்டுங் குறியாகக் காகம் கூவுதலால், பொழுது விடிந்ததெனத் தெரிகிறது. காகத்தைக் குயில் வளர்க்காமல் கொன்றிருந்தால் நாள் கழிந்து விட்டதும், மறுநாள் வந்து விட்டதும் தெரியாமலிருக் கும். அதனால் தலைவன் வருவானென்ற எதிர்பார்ப்பான எண்ணம் தோன்றி வாதனைப்படாதிருந்திருக்கலாம்.

(3) இராகு சந்திரனை விழுங்கியிருந்தால், சந்திரிகையால் மனவருத்தமுண்டாகாது. விழுங்கி வெளிவிட்டதால் இந்த மன் மத துயரத்துக்குக் காரணமாயது.

(4) தாய் தன்னைப்பெற்ற காலத்தில்தானே கொன்றிருந்தால் தனக்கு இத்துயரம் வந்திருக்காது. தன்னை நாளொரு மேனியாய் காதற்பருவம் வரை வளர்த்ததே அவள் செய்த பிழை.

## ஜீவன மர்மங்கள்.

விருக்ஷவர்க்கங்கள் தாங்கள் என்றும் நிலைத்து நிற்ப தற்கு ஆதாரமான வேர்களை மண்ணுக்குள்ளே செல்லவிட்டு மறைத்து, வெளிக்குத் தங்களின் வளப்பத்தை மட்டும் காட்டி நிற்கின்றன. அதுபோலவே, மனிதர்களும் தங்களின் வாழ்நாளில் எவ்வகையினில் ஜீவனத்தை நடத்துகின்ற னரோ, அந்த சங்கதியை அந்தரங்க ரகசியமாக வெளியிடா மல் காத்து, மற்றவர் முன்பாகத் தங்களின் வளப்பத்தை மட்டும் தெரிவித்தபடி செல்லவேண்டும். அப்பொழுது உலகினரும் அந்த மூடியகைக்குள் ஏதோ இருக்கிறதென்று ஒரு மதிப்பும் கௌரவமும் தருவர். அநுகூல சத்துருக் களும் நமது பிழைப்பின் மர்மத்தை யறிந்து கெடுக்க முடி யாதபடியும் காத்துக்கொள்ளலாம்.

தினந்தோறும் சிறுநீர் இடைவிடாமலிறங்குவதால் குறையும் ரத்தத்தை நாம் உண்ணும் போஜனம் விருத்திசெய்து சமப்படுத்துகிறது.

# ஸோடாவாட்டரில் உப்பு உண்டா?

சாதாரணமாய் "ஸோடா வாட்டர்" என்று சொல்லப்படும் பானத்தில் ஸோடா கரைந்திருக்கிறதென்று யூகிக்கலாம். ஆனால், அதில் சோடா என்பதே கிடையாது. கரியமில வாயுவைத் தண்ணீரிற் செலுத்திச் சிறிது பாகம் அதில் கரையும்படி செய்வதுமல்லாமல், விசேஷமான பாகத்தை அதற்குள் அடைத்துப் புட்டியை நன்றாய் மூடி விடுகிறார்கள். அதனால்தான் புட்டியைத் திறந்தவுடனே உள்ளே அடைபட்டிருக்கும் கரியமிலவாயு மிகுந்த வேகத்தோடு வெளிக்கிளம்பி அதனுடன் ஜலத்தையும், வெளியில் இழுத்துக்கொண்டு வருகிறது. இவ்வாயு ஜலத்தில் கரைந்திருப்பதால்தான் பானத்திற்கு ஒருவிதமான ருசியும், காரமும், உண்டாகிறது. இவ்வாயுவானது வெளியிற் செல்லு முன்னரே சிலர் அதை உட்கொண்டு திக்குமுக்காடித் திகைத்து நிற்பதை நாம் பலமுறையும் காண்கிறோம். இவ்வாயுவை நாம் சுவாசித்தால், அது நமக்குத் தீங்கை விளைவிக்கிறதென்பது சகலருக்குந் தெரிந்திருக்கலாம். ஆயினும், அதைத் தண்ணீருடன் உட்கொண்டால், நமக்குச் சிறிது நேரம் உற்சாகத்தை உண்டு பண்ணுகிறது. இதனால், கரியமிலவாயுதான் அதிலிருப்பதென்பதைச் சுலபமாய் அறியலாம். ஸோடாவாட்டர் புட்டியைத் திறந்தவுடனே அதிலிருந்து வெளிச் செல்லும் காற்றையும், மற்றொரு புட்டியிலோ பாத்திரத்திலோ பிடித்து, அப்பாத்திரத்திற்குள் எரிந்துகொண்டிருக்கும் ஒரு வர்த்தியை விட்டால், அந்த வர்த்தி உடனே அவிந்துபோய் விடும். சாதாரணக் காற்றானால், அது எரிந்துகொண்டிருக்குமல்லவா?

இதில் ஸோடாவே இல்லை என்றால் இப்பெயர் வரக் காரணமென்னவென்று கேட்கலாம். இப்பானத்திற்கு வேண்டிய கரியமில வாயுவை அநேகம் வஸ்துக்களிலிருந்து உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் சாதாரணமாய் ஸோடா உப்பின்மீது லவணத் திராவ-

---

காரி இரண்டெழுத்தாயினும் அதைக் காண்பது எவ்வளவு கஷ்டம்? பிறர் செய்த காரியத்திற்குக் குறை சுலபத்திற் கூறிவிடலாம். தான் அதைச் செய்யும் போதன்றோ அதிலுள்ள கஷ்டம் தெரியும்.

கத்தை ஊற்றி இவ்வாயுவை வெளிப்படுத்துகிருர்கள். ஸோடா உப்பிலிருந்து இப்பானத்திற்கு வேண்டிய கரியமில வாயுவை உற்பத்தி செய்வதால், இதற்கு ஸோடா வாட்டர் என்ற பெயர் வரக் காரணமாயிற்று.

ச. முனிஸ்வாமி பிள்ளை,
சரஸ்வதி சபைத்தலைவர்
டர்பன், நெட்டால்.

[ஸோடா உப்பை ஜலத்துடன் முதல் தினம் கலந்துவைத்து, மறுதினம் அந்த ஜலத்தை ஸோடா பானத்திற்காக யந்திரத்தில் ஊற்றி, அதனோடு கரியமல வாயுவையும் கலக்கச்செய்து புட்டிகளுக்குள் புகவிடுப்பதே பழயநாள் முறை. தற்கால நாகரீகத்தில் ஸோடாவில் ஸோடா உப்பு சேர்ப்பது அரிதாயுள்ளது. அது ஒரு வீண்செலவெனவியாபார தந்திரமாய்க் கைவிட்டார்கள் போலும். ஸோடாஉப்பு சேர்ந்திருப்பதுதான் உத்தமம். ப-ர்.]

## அது எவரைக் குறிக்கிறது?

ஒரு நாவலைக் கற்பித்து எழுதுகையில், இன்னாரைக் குறித்தே அது எழுதப்படுகிறதென்று அதன் ஆசிரியர் தமது நண்பனுக்குக் கூறினர். அந்த நாவலின் முதல் இரண்டு அத்தியாயங்கள் பத்திரிகையில் வெளி வந்தன. அதை நண்பன் கண்டதும் அந்த இரு அத்தியாயங்களையும் எவரைக் குறித்து அது எழுதப்பட்டதோ அவருக்கு அதை அனுப்பி, அதை நன்முக ஆராயின் எவரைக் குறித்து எழுதியதென விளங்குமென்று ஒரு கடிதமும் அனுப்பினன். அக்கடிதம் வந்த வேளையில் அந்நாவலின் ஆசிரியரே அங்கு இருந்து விட்டதால், அக்கடிதத்தைப் படித்துவிட்டு, கடிதத்தை மறைத்துத் தமது நாவலையும் வேறு வழியில் மாற்றித் திருத்திவிட்டார். பிறகு அந்த நண்பன் மற்றொரு சமயம் சந்திக்கையில், "உங்கள் நாவல் வேறு புது வழியிலிருக்கிறதே?" என, அதற்கு ஆசிரியர் "அது எவரைக் குறிக்கிறதென நீ கபடமாய் எழுதிய கலகக்கடிதம் என்னை விழித்துக்கொள்ள வைத்துவிட்டது" என்ருர். நண்பன் பதில் பேசவில்லை. இத்தகையோரும் நண்பர்களா?

கையிற் போதிய பொருளில்லாமையும், தகுந்த வரன் கிடைக்காததுமே விவாகத்தை ஒத்தி வைப்பதற்குக் காரணங்களாக இருக்கின்றன.

# பழமொழி குறிப்புகள்

## 4. மக்கள்.

(436-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 352. "துஷ்டப் பிள்ளைக்கு ஊரார் புத்தி சொல்லுவார்கள்."

கெட்டதும் நல்லதும் இயற்கையிலேயே அமைப்பு. அவரவர்கள் பிறந்த இயல்புக்குத் தக்கபடி நல்லதும் தீயதுமான குணங்களும் தொடர்ந்து வளர்கின்றன. சிலர் நல்லவர்களாகவே வளருகிறார்கள். சிலர் வெளிக்கு நல்லோராக நடந்து நற்பெயரும் பெற்று, உள்ளுக்குக் கபடமாகித் தமது துர்க்குணங்களை மறைத்து வாழ்வோராகிறார்கள். இவர்களைத்தான் அதிக புத்திசாலி என்ற பெயரால் கௌரவப்படுத்துகிறார்கள். மூன்றாவதாக உள்ளவர்களோ வெளிப்படையாகவே துஷ்டக்கோணல் கொண்டவர்களாய்த் தமக்கும் பிறர்க்கும் தீங்கு விளைத்துக் கொள்கிறார்கள். நற்சுபாவம், நல்ல நினைவு என்பதே இவர்களிடம் அரிது. வெளிப்படையாகவே வஞ்சகம், மோசம், தூஷணை, எதிர்ப்பு எல்லாவற்றிலும் தலையிட்டுக்கொண்டு வீட்டுக்கு அடங்காமல் திரிவர். அத்தகையோருக்கு ஊரார் புத்தி கற்பித்து விடுவது நிச்சயம். இன்னோரின் சேஷ்டைகளுக்குப் பதிலுக்குப் பதில் 'பூசைகள்' கொடுத்து ஊரார் அடக்கிவிடுவர். வேலைக்குப்போன இடத்திலுங்கூட மோசக்காரன் என்று எந்தக் கடையிலும் சேர்க்கமாட்டார்கள். பெற்றோர்கள் புத்தி சொல்லித் திருத்த வேண்டிய அவசியமில்லாமலே, ஊரார் துஷ்ட குணமுள்ளோரைக் கேவலப்படுத்தித் தங்களோடு சேர்க்காமல் விலக்கித் தனக்குத்தானே நற்புத்தியுண்டாகும்படி செய்துவிடுவார்கள். ஆனால், இந்த நற்புத்தி நீடித்திராது. மறுபடியும் பழைய துஷ்டகுணம் திரும்பிக்கொண்டு ஊராரிடம் திட்டுகள் வாங்கும்படியாகிவிடும். ஜென்ம குணம் மாறுவது கஷ்டம்.

### 353. "அடித்து வளர்க்காத பிள்ளையும், முறுக்கி வளர்க்காத மீசையும் செவ்வையாகா."

மீசை வைத்துக்கொண்டிருப்போருக்கு ஸதா மீசையின் மீதே கை போகும். அடிக்கடி அதை முறுக்கி சீர்படுத்தி ஒரு ஒழுங்கில் கொண்டு வருவது வழக்கம். அவ்விதம் முறுக்கித் திருத்திச் சரி செய்யாவிடில் அது

---

அருவருப்புச் சோறும், அசங்கிதக்கறியும் இடுவதைப் பார்க்கினும் பட்டினி கிடக்க விடுவது நன்று. தன் வஞ்சகத்தை அவன் உணர்ந்துகொண்டானென்று அறிந்த பின், அதை மறைப்பதற்காக அவனுக்கு வேண்டியதைச் செய்யப் புகுவதிலும் கேடுகெட்ட தன்மை வேறொன்றுண்டா? என் செய்யினும் தான் நினைத்த வஞ்சகத்தைத்தான் அவன் அதிகமாக உணருவான்.

கண்டபடி விறைத்து நின்று அவலக்ஷணமாய்த் தோற்றும். அவ்விதமே அடித்து வளர்க்காத பிள்ளையும் தான்றோன்றியாகிப் பெற்றோரின் சொல்லுக்கு உட்படாமல் தன் மனம் போனபடி நடக்கத் தொடங்கிக் கெடுவான். அடித்து வளர்த்தல் என்பதில் எப்போதும் அற்ப விஷயங்களுக்கெல்லாம் அடித்துக்கொண் டிருப்பதென்பதல்ல. கண்டிப்பாயும் நய பயத்தாலும் அடக்கித் திருத்த வேண்டுமென்பதாம். குழந்தைகள் குற்றம் செய்யும்போதெல்லாம் அக்குற்றத்துக்குத் தகுந்தபடி அவர்கள் செய்த பிசகை அவர்களுக்கு எடுத்துக்காட்டிக் கோபித்துத் திருத்துதலே தக்கது. அடிப்பது பிசகு என்ற போதிலுங்கூட, அந்த அடிப்பயத்தை நிதான புத்தியோடு மிதமாக உபயோகித்தால் அது விசேஷ நன்மையைச் செய்து குழந்தைகளைச் சீர்திருத்துவதா யிருக்கிறது. இதை உத்தேசித்தே,

354. "அடி உதவுகிறதுபோல அண்ணன் தம்பி உதவுவானா?"

என்ற பழமொழியும் உலக வழக்கத்தில் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. எந்த உபாத்தியாயர் அடித்துக் கண்டிதமாக இருந்தாரோ, அவரைத் தான் பிற்காலத்தில் நாம் கொண்டாடி நமது படிப்பு எல்லாம் அவரால் தான் வந்தது என்று விசுவாசத்தோடும் சொல்லிக் கொள்கிறோம். சிறு பருவத்தின் சிக்ஷை நம்மை வயது சென்ற பிறகு புத்திமான்களாகப் பண்ணுகிறபடியால், அது நமக்கு எவ்வளவு க்ஷேமத்தை உண்டுபண்ணுகிறதோ, அவ்வளவு க்ஷேமத்தை நமது சகோதரர்கள்கூடச் செய்கிறதில்லையென்று அடியைப் பற்றிச் சிறப்பாக எடுத்துக் காட்டியதாகும். ஆனால்,

355. "அடிக்க ஒரு கை, அணைக்க ஒரு கை."

வேண்டும் என்று மற்றொரு பழமொழியும் இருக்கிறது. குற்றங்கண்ட இடத்து மிதமாய் அடித்துத் திருத்தவும் வேண்டும். பிறகு, ஐயோ! அடித்து விட்டோமே என்று பச்சாத்தாபப்பட்டுக்கொண்டு அடித்த சிறுவனை அணைத்து நமது பிரியத்தைக் காண்பித்து, இனி அந்தவிதமாக நடவாதேயென்று கூறித் தழுவிக் கொள்ளவும் வேண்டும். தன் குழந்தையின் சிறு சேஷ்டைகளைச் சகியாமல் கோபத்துடன் தாய் ஒரு அடி கொடுத்து விடுகிறாள். அடிபட்டாலும் அக்குழந்தை மீண்டும் அத்தாயிடமே அழுதுகொண்டு வருகிறது. அப்பொழுது தாய் இரக்கத்தோடும் அக்குழந்தையை இழுத்து மடிமீது வைத்துக்கொண்டு பால் கொடுக்கத் தொடங்கி அதைத் தடவித் தருகின்றாள். இதுதான் இயற்கை அன்பு என்பது. சொந்தத் தாய் அடித்தாலும் அடுத்த நிமிஷத்தில் அன்போடும் தழுவிக்கொள்ள ஓடிவருவாள். மாற்றாந் தாயோ அடித்துவிட்டு மேலும் துவேஷமாகவே ஆத்திரத்தோடும் நிற்பாள். இதுதான் சொந்தத் தாய்க்கும், மாற்றாந் தாய்க்கும் உள்ள பேதம். அடிப்பதிலும் அளவு நிதானம் வேண்டும். அந்த அடியும் சிறுவர்களைத் திருத்துகிற அன்போடும் கூடியிருக்க வேண்டும். அப்போதுதான் அடிக்குச் சிறப்பும் பயனும் உண்டாகும். (தொடரும்.)

---

பரோபகார சிந்தையாலுண்டான அபிமானம், தான் எவ்வளவு செய்திருப்பினும் இவ்வளவு செய்திருக்கிறோமே என்று கணக்கிட்டுப் பார்க்க ஒப்பாத தயை நிறைந்த மனமாகத் ததும்பி நிற்குமாம்.

# பத்திரிகைகளின் ஆதி அமைப்பு.



பத்திரிகைகள் என்று பொதுவாகச் சொல்லப்பட்டபோதிலும், ஒவ்வொரு பத்திரிகையும் தனக்கேனச் சொந்தமாக ஒரு அமைப்பைக்கொண்டு, பிற்காலத்தில் எவ்வளவு புதுத் திருத்தங்களும் விசேஷ அபிவிருத்திகளும் ஏற்படினும், அவை யாவும் முந்திய ஆதி அமைப்புக்குள் அடங்கினதாகவே ஆகி, முதலில் தோடங்கிய அமைப்பினது அழகு குன்றாமல் வெளிவருவதாயுள்ளன. இவ்விதமே, ஒவ்வொரு குடும்பத்தின் அமைப்பும் அந்தந்தக் குடும்பத்தலைவனின் மனப்போக்குக்கும், ஸம்பாத்திய நிலைமைகட்கும் தக்கவாறு அமைந்துள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு பண்டிகை விரதாதிகள் விசேஷமாகத் தோற்றுகின்றன. ஒரு குடும்பத்திற்கு விசேஷமாகக் காணுகிற விரத நோன்புகளை மற்றொரு குடும்பத்தார் அநுஷ்டியாமல், 'அது எங்கள் வீட்டில் வழக்கமில்லை'என்று மறுத்து விடுகின்றனர். அந்தந்தக் குடும்பத்தின் அமைப்புகள் அந்தந்தக் குடும்பத்திற்கு ஒவ்வொரு விதமான அழகைக் கொடுத்துக்கொண்டு நிற்கின்றன. அந்த அழகும் ஒழுக்கும் நெடுநாள் வழக்கமாகி, அந்த வகையில் ஒரு மதிப்பையும் உயர்வையும் கொடுப்பதாயுமுள்ளன. பத்திரிகைகளின் நிலைமையும் இவ்வாறே.

ஃ

நெடுநாளாகத் தொடங்கி நடத்தப்பட்டு வக்த ஒரு குடும்பத்தின் அமைப்பு, அக்குடும்பத் தலைவன் கண்மூடியதும் கெட்டுக் கௌரவத்தை இழந்துவிடுகின்றன. மற்றொருவர் அந்தக் குடும்ப நிர்வகிப்பை ஏற்றுக்கொண்டபோதிலும், காலஞ்சென்றவரது அமைப்பைத் தழுவ இயலாமல் வேறு புது வழியையே தொட்டுக்கொள்ள வேண்டியதாகி, முந்திய கௌரவத்தையும் மேன்மையையும் இழந்து உருக்குலைகின்றன. காலையில் பலகாரம் சாப்பிட்ட வீட்டினர் பழய சாதம் உண்ணவும் வருகின்றது. ஒருவருக்கு இருந்த ஒருவித சக்தி மற்றவருக்கு இருப்பதில்லை. "அவர் இருந்தால் இப்படியெல்லாம் ஆகுமா?" என்று அங்கலாய்க்கும் குடும்பங்கள் எத்தனையோ உண்டு.

ஃ

ஒவ்வொரு பத்திரிகையும் தொடங்கப்படும்பொழுது அதன் ஆசிரியர்கள் அதற்கெனச் சில விசேஷ அமைப்புகளை அதற்குச் சொந்தமாய் இருக்குமாறு புகுத்துகின்றனர். அவ்வழியிலேயே அப்பத்திரிகைகளை அதனதன் ஆசிரியர்களும் நடத்துகின்றனர். அந்த அமைப்பு ஒரு தனி அழகையும் வசீகரிப்பையும்

---

ஒரு தாசி தன் நேசனோடு பேசுகையில், தான் பேசியது சரிதானாவென்று அருகிலுள்ள குலஸ்திரீயை நோக்குகிறாள். அதற்குக் குலஸ்திரீ பதில் கூறாது ஒதுங்கி விடுவதே மானங்காக்கும் வழி. அந்த சமயம் குலஸ்திரீ சிரிப்பினும், அதுவும் அவள் ஒழுக்கமற்றவளோவெனச் சந்தேகிக்க வைத்திடும். உலகில் மாதரின் நடவடிக்கைகளை வெகு கருத்துடன் கவனிக்கப்படுவதால், அன்னோர் எதிலும் அதிக எச்சரிக்கை பெறவேண்டியுளது.

தந்து, ஜனங்களின் மனதைக் கவர்ந்து, அந்த அமைப்பையே ஜனங்கள் விரும்பி, அந்த அமைப்பிலுள்ள ருசிகரத்திற்காகவும் தனிச்சுவைக்காகவுமே அப்பத்திரிகையை அன்புடனேற்று ஆதரிப்பவர்களாகின்றனர். 'புளிப்பு' என்று பொதுவாகச் சொல்லப்பட்ட போதிலும், இளாக்காயின் புளிப்பு ஒருவிதம், எலுமிச்சம் பழத்தின் புளிப்பு ஒருவிதம், மாங்காயின் புளிப்பு ஒருவிதம், கிச்சிலி, கொளுஞ்சி, திராக்ஷை, பம்பளிமாசு முதலியவற்றின் புளிப்பு ஒவ்வொரு விதம். அந்தந்தப் புளிப்பின் சுவைக்காகவே அததை விரும்புகின்றனர். இவ்விதமே இனிப்பிலும் பலவகை. கரும்பின் இனிப்பு ஒருவகை. பிலாச்சொளையின் இனிப்பு இன்னொரு வகை. சீதாப்பழத்தின் இனிப்பு வேறொரு வகை. அந்தந்த இனிப்பை அவரவர் விரும்பி அததன் மீது விருப்பங்கொண்டு நாடுகின்றனர்.

ஃ

இவ்விதமே, ஒவ்வொரு பத்திரிகைக்கும் அதனை ஆதியில் ஆரம்பித்த ஆசிரியர் எந்த அமைப்பில் அதைத் தொடங்கினரோ, அந்த அமைப்பையே அந்தப் பத்திரிகையைத் தொடர்ந்து ஆதரிக்கும் பத்திரிகாபிமானிகளும் விரும்புவோராகி, அந்த அமைப்புக்கு ஒரு விசேஷித்த மதிப்பையும் உண்டாக்குகின்றனர். திவான்பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தாம் ஆரம்பித்த ஜநவிநோதினி என்னும் மாதப் பத்திரிகையைத் தாம் தொடங்கிய ஆதி அமைப்பின்படியே 25-வருஷ காலங்கள்போல் நடத்தி வந்து அழியாப் பெரும்புகழைப் பெற்றனர். "ஜநவிநோதிநி" யில் வெளிவந்த விஷயங்களைத் திரட்டி 3, 4, 5, 6-ம் வகுப்புப் பாட புஸ்தகங்களாகவும் ஏற்படுத்தினர். அப்பத்திரிகையின் அமைப்பைக் கொண்டாடாதவர்களில்லை. அந்த அமைப்பில் மற்றொருவர் நடத்த முடியாததால், அப்பத்திரிகையும் நின்று போயது. சேலத்தில் பன்னிராண்டுகளாக நடைபெற்ற "திராவிடாபிமானி" என்ற வாரப் பத்திரிகை மிகப் பிரக்கியாதி கொண்டிலங்கிற்று. அதை ஆரம்பித்த ஆதி ஆசிரியர் அப்பத்திரிகையிலிருந்தும் விலகவே, அவரது அமைப்பில் மற்றவர்கள் நடத்த முடியாமற்போக, அப்பத்திரிகையும் நின்றுவிட்டது. "விஜய விகடன்" "மஹா விகடதூதன்" முதலிய பத்திரிகைகளும் அதன் ஆதி ஆசிரியர்கள் அமைத்த வழியில் மற்றவர்கள் எழுதிச்செல்ல இயலாமையால் அப்பத்திரிகைகளும் கண்மூடின. அந்தந்தப் பத்திரிகைகளின் ஆதி ஆசிரியர்கள் அமைத்த ஆதி அமைப்பு-அந்த ஆசிரியர்கள் விலகியோ, காலஞ்சென்றோ கெடுமாகில், மாறுபடுமாகில், அந்தப் பழய அமைப்பிலேயே அபிமானம் கொண்டிருந்த பத்திரிகாபிமானிகள், புது மனுஷ்யர்கள் ஆசிரியர்களாகத் தோன்றிப் புது அமைப்பைத் தொடங்கும்போது, அந்தப் புது அமைப்பை விரும்பாமல் விலகிவிட, பத்திரிகையும் க்ஷீணித்து மறைகின்றது. இதுவே அதிகமாகக் காணும் ஸம்பவம்.

ஃ

சென்னை "தாருல் இஸ்லாம்" பத்திரிகை ஸ்ரீமான் பா. தாவுத்ஷா

"வீட்டிலக்காரம் வண்ணான் அறிவான்" என்ற பழமொழி மிக்க அநுபவமானது. ஒவ்வொருவர் வீட்டிலும் எத்தனை சேரகத் துணிமணிகள் உடுக்கிறார்களென்பதைத் தன்னிடத்தில் போடும் அழுக்குத் துணிகளினால் வண்ணான் உணர்ந்துகொள்வானாம்.

வின் அமைப்பு. சென்னை "நவசக்தி" ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியாரின் அமைப்பு. இந்த அமைப்பு அதன் ஆசிரியர்களின் காலத்திற்குப் பின்னரும் கொள்ளப்பட்டாலன்றி அப்பத்திரிகைகள் நடைபெறுவது கஷ்டமே. ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணிய ஐயர் ஆதியில் "சுதேசமித்திரனை" அமைத்த ஆதி அமைப்பின்படியே இன்றைக்கும் நடந்துவருவதால் அது புகழோங்கி நிற்கின்றது. ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அமைத்த ஆதி அமைப்பின்படியே "ஆனந்த போதினி" மாத ஸஞ்சிகை இன்றும் நிலவி வருகின்றது. ஆசிரியர்கள் காலஞ்சென்றாலும், அவர்கள் அமைத்துச்சென்ற ஆதி அமைப்பின் ருசிகரம் மாறவில்லை. ஸ்ரீமான் வி. நடராஜ ஐயர் அமைத்த பக்திஞானச் சுவையான ஆதி அமைப்பின் வழியிலேயே "லோகோபகாரி"ப் பத்திரிகை இன்றும் நடைபெற்று வருகிறது. ஆகவே, அவ்வப்பத்திரிகைகளின் ஆதி ஆசிரியர்கள் தொடங்கிக் காட்டிய ஆதி அமைப்பின் ஒரு தனிச் சுவை வழியிலேயே அவ்வப்பத்திரிகைகளும் நடைபெறுவதுதான் அதற்கு ஒரு சிறப்பாகி மேன்மையும் அபிவிர்த்தியும் உண்டாக்கக் கூடியதாகும். அதனதன் ஆதி ஆசிரியர்களே ஜீவந்தர்களாயிருந்து அந்தந்தப் பத்திரிகைகளை நடத்திவரும் வரையில் அப்பத்திரிகைகளுக்கு ஒரு குறைவுமில்லையென்பது திண்ணம்.

பத்திரிகையின் ஆதி ஆசிரியர்கள் காலஞ்சென்ற போதிலும், பத்திரிகையின் ஆதி அமைப்பு மாறாதிருப்பதே பத்திரிகா நிர்வாகத்தின் பெரிய சாமர்த்தியமாகும். ஒரு பத்திரிகையின் பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே—அதன் ஆதி அமைப்பின் வசீகரம்—அவ்விதம் கூறியவரின் மனக்கண்ணுக்கு எதிரில் அப்படியே தத்ரூபமாய்க் காட்சி தந்து பரவசப்படுத்திவிடுவதிலே, அவர் அந்த ஆதி அமைப்பைச் சிலாகித்து, "ஆ! அந்தப் பத்திரிகையைப்போல இன்னொரு பத்திரிகை ஆகுமா" என்று ஆநந்தப்படுவோராகின்றனர். இது அப்பத்திரிகையின் ஆதி அமைப்பானது தருகிற ஒரு தனிச் சுவையின் பரவசமாகும். ஆதலின், அதனதன் ஆதிஅமைப்பின் இனிப்பு அப்படியே இருந்து வரவேண்டியது அப்பத்திரிகைகளின் அபிவிர்த்திக்கு இன்றியமையாததாகும். அப்பத்திரிகைகளை ஸ்தாபித்த ஆதி ஆசிரியர்கள் சாமான்யப் படிப்பாளிகளாக இருந்தபோதிலுங்கூட, அன்னோரின் ஆழ்ந்த அநுபவமும், கைத்திறமும், எழுத்தின் விசேஷமும் பொதுஜன அபிமானத்திற்குப் பாத்திரமாகி விட்டபடியால், அவர்களுக்கே விசேஷித்த கௌரவத்தையும் உயர்வையும்கொடுத்து. அவர்களுக்காகவே அவர்களின் பத்திரிகையை ஆதரித்து வருவோராகவும் ஆகிவிடுவது அநுபவ பூர்வகமான உண்மையாகும்.

ஃ

---

எத்தனை பிள்ளைகளை இதற்குமுன் தன் வயிற்றில் தாங்கிப் பெற்றிருந்த போதிலுங்கூட, புதிதாகக் கர்ப்பவதியாகி ஒரு குழந்தையைப் பெறுமுன்பு பழயபடிக் கனத்த பிரஸவ அவஸ்தையைப்பட்டுத் திகைத்துத் தமோறியே ஆகவேண்டியிருக்கிறது. அவ்விதமே, நூலாசிரியரும், பத்திரிகாசிரியரும் இதற்கு முன்பு எவ்வளவோ எழுதித் தள்ளியிருந்த போதிலுங்கூட. புதிதாக ஒன்றை எழுதப் புகுகையில் எவ்வளவோ பாடும், கண் விழிப்பும், பெருமூச்சும் கொண்டே எழுதி முடித்துப் பூர்த்தி செய்யவேண்டியதான பரிதாபத்திலிருக்கிறார்கள்.

# செலவோ செலவு! சடங்கோ சடங்கு!!



தையும் வந்தது, வழியும் பிறந்தது, பொங்கலும் ஆனது, அதற்கென்று அழைத்து வந்த மாப்பிள்ளையும் பெண்ணும் பல சீர் வரிசைகளுடனே மங்களமாய் ஊருக்குப் புறப்பட்டுப் போயும் ஆச்சுது! கூடக் குந்தி விருந்து ருசி கண்டவர்களும் இன்னும் இருந்து தங்குவது இழிவு என்று தெரிந்து தங்களின் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு அவரவரிருப்பிடம் சென்றும் ஆனது; இனி மேற்கொண்டு என்னென்ன செலவுகளை எதிர்பார்ப்பதென்று ஒவ்வொரு குடும்பக்காரனும் நினைத்துக் கொட்டாவி விடுகிறான்! போன வருஷம் போலக் கும்பகோணத்துக்கு மூட்டை கட்டுவதற்கு இந்த வருஷம் மகா மகம் இல்லாததும் கைப் பணத்துக்கு ஒரு மிச்சம் தான்! அவசியமான செலவுகளைச் செய்ய வேண்டியதுதான். ஒவ்வொரு பண்டிகை நோன்பு விரதங்களும் ஒவ்வொரு சிறப்பான சூட்சுமக் கருத்து நுட்பத்துடன் அமைந்தவைகள் தான்! ஆனால், தனது சக்தியையும் தெரிந்து கொண்டு நடக்கவேண்டாமா? இதைப் பற்றி வெகு நாளாய் விகடனுடைய நீண்ட கால அனுபவத்தாலறிந்ததும், மேலோர் எற்கெனவே யுரைத்திருப்பதுமாகிய ஒரு பெருத்த சங்கதியை என் நஞ்சான் குஞ்சான்களுக்குத் தெள்ளத் தெளிய உள்ளதை யுள்ளவாறு உண்மையை யுணரும்படி விளக்கிக் காட்டவேண்டுமென்பது என்னுடைய எண்ணம்! அஃதென்னவென்கிறீர்களோ? அடுக்கடுக்காய் அந்த அனுபவ ஞானத்தை அளந்து சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஃ

“குடிப்பது கூழ்; கொப்பளிப்பது பன்னீரு” என்பது போல, தங்களுடைய அந்தஸ்தும் நேர் நிர்வாகமும் தெரியாமல், “தூங்குவது ஒட்டுத் திண்ணை—கனவு காண்பது மச்சி மாளிகை” யென்பதாய், கலியாணம் முதலான சுபங்களும், அந்திய கிரியைகளான கருமம் போன்ற அசுபங்களும், ஆன சடங்குகளுக்கு, “தம்பி கால் நடை—பேச்சு பல்லக்கில்” என்பதாக, ஒருவருக்கொருவர்

---

ஜனங்கள் எப்படி நடக்கிறார்களோ, எப்படி நியாயமாய் நடக்கவேண்டுமோ அதற்கு விபரீதமாய் நடத்தலுக்கே நாகரீகமென்று பெயராம்.

வீண் டம்பங்கள் பேசி, "ஊரல் பஞ்சமறிகிறதா" என்பதாக, வீட்டில் உட்கார்ந்து நீள நீள வாய் மணியம் செய்யும் பெண்டுகள் "புலியைக்கண்டு பூனை சூடிக்கொண்ட" மாதிரிபோல், ஒருவர் செய்தது போலவும், ஒருவர் நடித்தது போலவும், நடனம் செய்யும்படி வீட்டுப் புருஷர்களுக்குப் போதித்துத் தட்டிக் கொடுக்கிறார்கள்! அதற்குக் காது கொடுத்து "ஆனமுதலி லதிகம் செலவானால் மானங் கெடு* மென்பதை மனதிலெண்ணாது, "குதி குதி யென்பவர்களெல்லாம் கூடவே தீயில் குதிக்க மாட்டார்கள்" என்பதையும் நினையாது, ஏராளமான சடங்குகளில் கை நனைத்துக்கொண்டு அபரிமிதமான செலவுகளைச் செய்து விடுகிறார்கள்! அந்தச் சடங்கள் என்னென்னவென்று ஜாப்தா கொஞ்சம் காட்டட்டுமோ? கேட்கிறீர்களா?

ஃ

அகமெடுத்தல், அரைநாண் கட்டல், கோடியுடுத்தல், அன்னப்பிராசனம், உபநயனம், எண்ணெய் வார்த்தல், எருவிடல், கதிராறுத்தல், காது குத்தல், குடிபுகல், குளம் வெட்டல், கிணறு தோண்டல், சவுளஞ் செய்தல், ஜாதகங் குறித்தல், சிரார்த்தஞ் செய்யல், சீமந்த முடித்தல், ருகிமனைப் புகல், சொற்பயிற்றல், நிஷேகம், புஞ்சவனம், பொன்பூணல், முடி சூட்டல், மாடுகொள்ளல், வித்தியாரம்பம் செய்தல், விதைத்தல், விவாகச் செலவுகளைப் பெருக்கல், வாகனம் ஏறல் இன்னும் இதுபோன்றவைகளுக்கெல்லாம் அபாரமான செலவுகளைச் செய்து, புது நகைகள் பண்ணுவித்து, மேளம் பாண்டு முதலியவைகளை வைத்தும் பெருமைப் படுகிறார்கள்! இதனோடு கூத்து நாடகம், சதிர் கச்சேரி, நாட்டியக் கச்சேரிகளையும் வைத்தல், தாசி நடித்தல்கள், தடபுடலான வாத்தியங்கள் முழங்கும்படி செய்தல், ஊராரையெல்லாம் தருவித்து விருந்திடல், வீட்டை ஏராளச் செலவில் அலங்கரித்தல், வரிசை யெடுத்தல், பாண வேடிக்கை செய்தல், பாட்டுக் கச்சேரி வைத்தல், மணக்கோலம் வருதல், பீட்டின், பிரோஹாம், மோட்டார், யானை, ஒட்டை, கூட்டங்கள் உடன்செல்லல், பெண் ருதுவானதற்குப் பிரமாதச் செலவுகள் செய்தல், முதலியவைகளுக்கு அமிதமான பொருளைத் தன் கையிலில்லா விட்டாலும் கடன்பட்டுச் செலவு செய்தல் என்னும் கெடுவழக்கத்தில் அகப்பட்டுக் கொள்கிறார்கள்! கடன் என்பது எப்படிப்பட்ட கழுத்தறுப்பென்பதை என் நாட்டார் நகரார் அறியாததல்லவே! ஒழி மகன் கல்யாணத்தில் உண்டது லாபம் என்று அகப்பட்ட வரையில் தின்று, கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு ஒடுவோர் எத்தனையோ பேர்! எல்லோருக்கும் பந்துக்கள் நண்பர்கள் என்று பொதுவாக ஏற்பட்டுள்ள பெயருக்குக் குறைவில்லை! பிறகு உதவுகிறவர் யாரென்று பார்த்தால், எவருமே அகப்படாமல் அவரவர் அரிப்பை அவரவரே சொரிந்து கொள்ளும்படியாகத்தான் ஆகும்.

ஃ

ஒருவன் யுக்தி புத்தியாய் உழைத்துச் செல்வாக்கில் உயர்ந்து சீமானாகி

---

தங்கம் அக்கிராம விலையேற்றத்தில் நிற்பதால் இப்போது பெண்ணுக்கு எவ்வளவு நகை போடுகிறீர்கள் என்று கேட்பதைவிட்டு, பெண்ணின் பேருக்கு எவ்வளவு நிலம், வீடு, தொகை எழுதி வைக்கிறீர்கள் என்று மாற்றிக் கேட்கும்படியான காலமாய் முடிந்துளது.

விட்டால், அவனைப் பார்த்து மற்றவனும் அப்படியே உடுத்தவும், அவனைப்போல வாகனாதிகள் ஏறவும், அவன் வீட்டுப் பெண்களை ஆபரணாதிகளால் சிங்காரிக்கவும், அவன் வீட்டிற்கு ஏவலாளர்கள் அமைந்திருப்பதுபோல் தன் வீட்டுக்கு அமைத்துக் கொள்ளவும் எண்ணுகிறதற்குத் தகுந்தபடிக்கு பணவரவுக்கும் அவனைப்போல் முயற்சி எடுத்துக்கொள்ளாமல் செலவிட மாத்திரம் பேரவாக் கொண்டால் எப்படிச் சாத்தியமாகும்? மாவில்லாமற் பணியாரமாமா? எண்ணெயில்லாது தீபமெரியுமா? புருஷனில்லாது புத்திரோற்பத்திக்கு ஆஸ்பதமாகுமா? ஒருவரைப் பார்த்து மற்றவரும் செலவிட முயல்வதில் தன் வரவு செலவு வகைகளை யோசித்துப் பார்க்கவேண்டாமா?

ஃ

“சாகிற வரையிலும் வைத்தியன் விடான், செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரப் பாப்பான்” என்கிற பழமொழியின்படி, வைத்தியன் பிராணன் போக ஐந்து நிமிஷங்கள் இருக்கும்போதும் ஐந்து வராகன் கொடுத்தால் பூபதி சிந்தாமணி கொடுக்கிறேனென்று சொல்லி இரக்கமில்லாமல் பணம் பறிப்பான். பஞ்சாங்கக்காரனோ செத்தாலும் விடான்! இறந்த இரண்டாம் நாள் முதற்கொண்டு இதுவுமொரு கந்தாயமென்று கருமாந்தரம், மாசியம் ஆன பின்பும் மகன், பேரன், இரண்டாம் பேரன் வரைக்கும் பறித்துத் தின்பான்! பிராமணனுக்குக் கொடுக்கிறது கடவுளுக்குச் சேருகிறது என்பதான பைத்தியத்தில் ஆகும் செலவுகளை எண்ணி முடியுமா? வருஷதிதி, மாளியபட்சம், அமாவாசை நோன்புகள், தீபாவளி, பொங்கல் இவைகளிலும் எவ்வளவோ ஏராளச் செலவுகள் குவியும்!

ஃ

ஒரு அவசர காரியமாய் அடுத்த நாள்களில் பிரயாணம் வைத்துப் புறப்பட வேண்டுமெனக் கருதிப் பஞ்சாங்க ஐயரை அழைப்பித்து நாள் பார்க்கச்சொல்ல, “ஆகாத பஞ்சாங்கத்துக்கு அறுபது நாழிகையும் தியாச்சியம்” என்பதுபோல, சீரங்கத்துக்குப் போக வேண்டுமென்றால், தெற்கே வாரசூலை, திருப்பதிக்குப் போகவேண்டுமென்றால் வடக்கே வாரசூலை, மைசூருக்குப் போகவேண்டுமென்றால் மேற்கே வாரசூலை, மறுநாள் கரிநாள், அதற்கு மறுநாள் செவ்வாய்க்கிழமை, அதற்குமறுநாள் கிருத்திகை, அதற்கு மறுநாள் மாசப்பிறப்பு, அதற்கு மறுநாள் நீர் பிறந்த நாள், அதற்கு மறுநாள் உங்கள் தகப்பனார் திதி, அதற்கு மறுநாள் சூரிய கிரகணம், இதற்குள்ளாக ஆடி மாதம் பிறக்கிறது, அடியெடுத்துவைக்க வொண்ணாது, ஆவணி மாசத்தில் இரா பத்தாமிடத்துக்கு வருகிறான், பதியைக் குலைப்பான், அடுத்த மாசம் திருமலைப் புரட்டாசி மாதம், அப்புறம் மழைக்காலம், இந்த வருஷத்துக்குள் நல்ல நாளில்லையென்று சொல்லி, அத்துடன் நவக்கிரக பூஜை செய்யவேண்டுமென்பார்.

ஃ

---

தமிழ் அன்பர் மஹாநாட்டில் ஏழை நூலாசிரியர்கள் அங்கத்தினராக இடம் பெறவில்லை. ஸ்ரீமான் எஸ். எஸ். அருணகிரிநாதன், வரகவி ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார் முதலாயினோர் சாமான்ய மனிதர்கள் போலும்! பணத்துக்குள்ள மதிப்பு கல்விக்கில்லை. கல்வியறிவு குறைந்தோர் முன் பூர்ணமாகக் கற்றோர் கைகட்டிக் காத்திருக்க வேண்டிய காலமாய்விட்டது.

துரை இன்றைக்குக் கப்பலேறு கிறார், நான் போய்க் காணவேண்டு மென்றால், இன்றைக்குக் கரிநாள் காணக்கூடாது, கண்டால் கெடுதி யுண்டாகுமென்று ஜோசியர் பேசு வார். பன்னிரண்டு மணிக்குச் சரி யாய் துரை கோட்டைக்கு வந்தால் சீப் செக்கிரட்டேரியுடன் பேசிப் பெரிய உத்தியோகம் கொடுப்பதாகச் சொன்னார், போகவேணுமென்றால், அப்போது வர்க்கம், இராகுகால மாகையாலும், மரணயோகமா யிருப் பதாலும் காணவேகூடாது என்பார். ஆயினும், மனம் தாளாமையால் எப் படியேனும் முடியட்டுமென்று சோசி யர் சொல்லை மீறித் துரையைக் காணச்சென்று கண்டுகொண்டாலோ, துரையும் அந்த வேளைக்கு இருந்து, மற்றவர்களும் இருந்து, ஜீவனத்துக் கான வேலையும் நிச்சயமாய்க் கிடை த்து எற்பாடாகி சந்தோஷத்துடனே வீட்டுக்குத் திரும்பும்படியாகிறது. சோசியரின் சொற்படிப் போகாதிருந் தால் வாயில் மண் தான்!

ஃ

இந்த சமயத்தில் நல்ல லாபம் வரத்தக்க ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று சோசியரைக் கேட் பினோ, உமக்குக் கிரகசாரம்போதாது, இராசா அஷ்டமத்தில் வருகிறபடி யால் நஷ்டமுண்டாகு மென்பார்; ஆருடம் பாருமென்றால் இருபத் தொன்றில் குறைத்து சொல்லு, அத னோடு ஐந்து மூன்றைக் கூட்டிக் கொள், எடுக்கிற காரியம் கைகூடா தென்பார்! சம்பந்தம் பண்ணத் தகுதி யுள்ள ஓர் பிள்ளைக்கும் பெண்ணுக் கும்பொருத்தம் பார்க்கச் சொன்னால், செவ்வாய்த் தோஷமிருக்கிறது, கழுத் துப் பொருத்தம், வயிற்றுப் பொருத் தம், யோனிப் பொருத்தம் இல்லை யென்று சொல்லித் தட்டிவிடுவார்: இந்தப்படியாக அநேக காரிய குந்த கங்களையும், நஷ்டங்களையும், இடை ஞ்சல்களையும், உண்டாக்கிவிடுவார். சோசிய நிமித்தம் பார்ப்பவருக்கு நஷ்டமும் காரியக் கெடுதியும் உண் டாக்குவதேயன்றி பலிப்பதொன்று மில்லை யென்று உய்த்துணரும் புத்தி மான்களுக்குத்தானே அனுபவத்தில் மெய்ப்படும்! இந்த வகையில் ஆகும் செலவுகளும் சடங்குகளும் எத்தனை எத்தனையோ!

ஃ

இதல்லாமலும், நம்முடைய அம்மாமார் செய்கிற வீண் செலவு களுக்குக் கணக்கேயில்லை! எடுத்ததற் கெல்லாம் ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு பிரார்த்தனை செய்து கொண்டு முடிப்பெடுத்துக் கட்டுகி றது! முடி செலுத்துகிறது! பெரிய பாளையத்தாளுக்கு வேப்பஞ்சேலை செலுத்தப் பிரார்த்தனை செய்து கொள்கிறது! வண்ணாரப் பிள்ளையார் கோவிலுக்கும், சாலைவிநாயகர் கோவி லுக்கும், அடிப்பட்ட பிள்ளையார் கோவிலுக்கும், ஆயிரம் தேங்காய் உடைக்கப் பிரார்த்தனை செய்து கொள்கிறது! திருவெள்ளூர் திருக் குளத்தில் நூறு மணங்கு வெல்லம் கரைக்கப் பிரார்த்தனை செய்துகொள் கிறது! இன்னும் சில்லரை தேவதை களுக்கு மாவு படைக்கிறது, கூழ் வார்க்கிறது, கும்பம் போடுகிறது! எகாத்தாளுக்கும், பொன்னியம்மா ளுக்கும், பூவாடைக்காரிக்கும் ஆடு

---

தாதுபுஷ்டிலேகியம் ஒன்றுக்கு சிறந்த முறையிலேயே செய்வதற்கு ஆறு அல்லது எழு ரூபாய் செலவிட்டால், கேட்லாக்குகளில் போடப்படும் விலைக்குக் கணக்கிடின் 27-ரூபாய்க்கு அதிகமான லேகியம் தயாராகிவிடும் என்று ஒரு வைத்தியர் கூறுகிறார்.

வெட்டிப் பொங்கலிடுகிறது! கன்னியம்மாளுக்கும். அண்ணன்மாருக்கும் முனீசுவரனுக்கும் பொங்கலிட்டுப் படையல் போடுகிறது! பாவாடைராயனுக்குப் பூசை போடுகிறது! பெரிய ஆண்டவனுக்கு முப்பூசையுங் கப்பறையும் எடுக்கிறது! காட்டேரிக்கு ரத்த பூசை போடுகிறது! பூசாரியிடம் குறிகேட்கிறது! குறத்தி குடுகுடுப்பைக்காரன் குறிகள் கேட்கிறது! இப்படிப்பட்டவைகள் அநேகமிருக்கின்றன! இன்னும் பாரதகோஷ்டிக்குள் ஆகும் செலவுகள் கணக்கிட முடியாது! ததியாராதனை என்று சொல்லிக்கொண்டு செய்யும் ஏராளச் செலவுகளை எண்ண முடியாது! இதில் அவரவர் சம்பாதிக்கிற பணம் பாதிக்கு மேலாகவே செலவாகிப் போகிறது! பாட்டனர் செத்த இழவுக்காக வாங்கின கடன் தீராததற்கு முன்னமே பாட்டியார் சாகிறாள்! அந்தக் கடன் தீராததற்கு முன்னமே இன்னொரு பெரிய செலவு கட்டாயமாய் வந்துவிடுகிறது! அந்தக் கடன் தீராததற்கு முன்னமே தகப்பன் சாகிறான்! அந்தக் கடன் தீராததற்குள்ளாகவே தம்பி தங்கைக்குக் கல்யாணம்! அந்தக்கடன் தீராததற்கு முன்னமே சின்னவீட்டுச் சேதி வெளியில் வந்து சீமந்தம், பிள்ளைப்பேறு முதலாகியவைகளில் செலவுகள் உண்டாகின்றன! இவற்றால் எந்த நாளைக்கும் கடன் பட்டு வருமானத்தில் பாதி செலுத்திவந்தும் வட்டி உயர்ந்து தீராக் கடன்காரனுகி, நல்ல துணி, நல்ல சாப்பாடில்லாமல், சேர்த்த பணமும் தொலைந்து கஷ்டப்பட்டுக்கொண்டு காலந்தள்ள நேர்வது விவேகபட்சமாகுமா வென்று விகடன் கேட்கிறேன்.

ஃ

எந்தச் செலவிலும் நிதானம் வேணும். பகுத்தறிவு வேணும், வரவுக்குள் அடங்கிய செலவின் கட்டுப்பாடு வேணும். ஒரு காலணு கடன் வாங்கத் துணிந்துவிட்டால் பிறகு பத்துப்பை கடனுக்கும் துணிந்துவிடுவதே வழக்கம்! சனிக்கிழமையென்றும் நல்லநாளென்றும் வீடெல்லாம் மெழுகிவிட்டுப் பிறகு கணவன் மனம் புண்பட அவனேடு சண்டை பிடிப்பதால் சுகிர்தமுண்டோ? புருஷனின் ஆயுள் விருத்தியைக் கோரி கௌரீ நோன்பு இருந்துவிட்டு அன்று மாலைச் சண்டையிலே அவனைக் கண்ணவிந்துபோக, நாசமாக என்று ஏசுவதில் என்ன பயனே? குழந்தை பிறந்ததினம் என்று பெரிய விருந்துகள் நடத்திக் கொண்டாடிவிட்டு, அந்தத் தினத்திலேயே அந்தக் குழந்தையை மற்றவர்மீதுள்ள கோபத்தைக் காட்டுவதற்காக ஓங்கி ஓங்கி அறைந்துக் கதறும்படி செய்வதால் என்ன பிரயோசனமோ? இந்த விகடக் கிழவன் என்னவோ தொனப்புகிறானென்று அலக்ஷியமாய் எண்ணினலும் சரி, அல்லது இந்த விகடனைக் குத்தித் துளைந்துச் சுடு சொல்லாக சிடு சிடு கட கட எனப் பேசினும் சரி, இந்த விகடன் சொல்லைக் கேளா விட்டாலும். பெரிய பெரிய தலையான டாக்டர் ரவீந்திரநாத டாக்கூர் தாடி தாதா சொல்வதையாவது

என் கையில் இப்பொழுது பணம் இருப்பதால், நீ அதை எனக்கு வாங்கிக்கொடுத்த விலையை இப்போதே பெற்றுக்கொண்டு விடு; பிறகு என் கையில் இல்லாமலும், தரமுடியாமலும் போகக்கூடும்; ஆனதால் என் நாணயத்தை நீ காப்பாற்றுவதற்காக இப்போதே வாங்கிக்கொண்டுவிடு என்று ஒருவன் கூறுகிறான். அது அவன் மனதைத் திறந்து சொல்லும் உண்மையான மொழியே. அவனுடைய எழ்மை நிலையும் அவ்வாறாகத்தானிருக்கிறது.

மனதிலே பதியவையுங்கள். அவர் சொல்வதாவது:—

"வகுப்பு முறையால் நாம் மக்களைப் பிரிந்து வருகின்றோம். அவர்களை ஒரே நிலையில் வைத்திருக்கின்றோம். அதனால் நமது "வாழ்க்கை விதி" களையும் அலட்சியம் செய்து விட்டோம்."

"மக்களை எவ்விடத்திலும் மந்தயான நிலையிலிருக்கும்படி செய்து விட்டோம். மக்களைத் தம் தம் கதியைத் தாமே நிர்ணயித்துக்கொள்ள முடியாதவாறு செய்து விட்டோம். நெடுங்காலமாக இருந்து கெட்டுப் போனதாகவும், அறியாமையுடன் கூடியதாகவுமுள்ள வாழ்க்கை இலட்சியத்தைப் பிறரிடம் பெற்று ஏராளமான சடங்குகளை ஏற்படுத்தியிருக்கின்றோம். நமது ஆன்மா பழைய வழக்கங்களிலிருந்து விடுபட முடியாதவாறு செய்து விட்டோம். அதனால் நாம் எய்தியுள்ள தண்டனை மிக்க அதிகமாகும்" என்கிறார்.

ஃ


ஆகவே, நம்மவர்கள் இனி யாவது செலவுகளிலும் சடங்குகளிலும் பகுத்தறிவைக் காட்டிக் கொண்டு பக்குவமாய் நடப்பது தான் என்றைக்கும் சீராக நேராக சிறப்பாக வாழ வழிபாகுமென்று விகடன் உள்ளதை யெல்லாம் வெளியில் இழுத்துச் சொல்லிவிட்டேன்! கேட்டால் கேளுங்கள் ராஜாவே! விட்டால் விடுங்கள் துரைகளே! உங்கள் பாடு! ராம்! ராம்! சுபம்!சு! சுவாஹா!!

---

ஒருவன் மற்றொருவரிடமிருந்து அன்புபோல் மபக்கி அநேக புஸ்தகங்களைப் பெற்றுக்கொண்டான் அப்புஸ்தகங்களைத் தந்தவர்மீது பிறகொரு காலத்தில் விரோதமாகிப் பின்வருமாறு ஒரு கடிதம் இன்னொருவருக்கு எழுதினான்:—"இனி அவர் விஷயத்தைக் கனவிலும் நினையேன். அவர் கொடுத்த புஸ்தகங்கள் கொஞ்சம் இருக்கிறது. அதை அவருக்கே அனுப்பி விடவேண்டும். அல்லது தீக்கு இரையாக்கவேண்டும். அவருடைய பொருள் ஒன்றுவது இங்கிருக்க நான் கண்டு சகியேன். பாவி மனிதன் ஒரு அருமையான துணைவனை இழந்தார்." இவ்விதம் 29-9-1921-ல் எழுதியவன் 1933-ம் வருஷத்தில் மிகு வணக்கமாய் மற்றொரு புஸ்தகத்துக்கு, முன்பு அன்பால் கொடுத்தவருக்குக் கடிதம் எழுத, அதற்கு அவர் எவ்வித பதிலும் தரவில்லை. "இந்த அருமையான துணைவனை" இழந்ததில் அவர் எவ்வகையிலும் நஷ்டப்பட்டவராகவும் காணவில்லை. ஒரு தீய மனிதனுடைய உண்மைக்குணம் தெரிந்துகொண்டதற்கு அவர் முன்னெச்சரிக்கையடைந்தவராகவே தோன்றினர். கடிதத்தில் கண்டபடி அவன் அப்புஸ்தகங்களைத் திருப்பியனுப்பவுமில்லை, தீக்கு இரையாக்கவுமில்லை! ஏனோ?

---

ஒருவர் உத்தியோகத்தில் நுழைந்துவிட்டால், அவர் எத்தனை தவறுதலாகவும் புதுக் கோணல்களாகவும் மதவிரோதமாகவும் நடந்துகொண்டாலுங்கூட, அப்படி நடந்துகொண்டால்தான் உத்தியோகம் உயருமென்று வீட்டிலிருப்பவர்கள் நம்பி அதை ஒரு பெருமையாகவும் பாவிக்கிறார்கள். இன்னும் அந்தப் புது உத்தியோகஸ்தர் பிராந்தி, ஒயின், பீர் இவற்றிலும் ருசி பார்க்க ஆரம்பித்தால் அதையும் உத்தியோக கௌரவமென்று மதிப்பார்கள் போலும்!



மரம் செடிகளிலுள்ள இலை ஈசுவர சிருஷ்டியாம்! எழுதவும் படிக்கவும் மனிதன் செய்த இலைக்குக் காகிதம் என்று பெயராம்!

கவிகளுக்குப் புலப்படாதது ஒன்றுமில்லையாம்! அதனாலேயே சில கவிகள் வெகு பொல்லாதவர்களாகிறார்களாம்!

ஈ அன்னத்துடன் வயிற்றுக்குள் சென்றால் உடனே வாந்தி யெடுக்க வருமாம்! அவ்விதமே, விஷமியான ஒருவன் ஒரு நற் குடும்பத்துக்குள் புகுந்தால் சீக்கிரத்தில் நாசந்தானாம்!

பணமில்லாதவனை மனைவி நேசியாளாம்! ஆதலின், பணம் இல்லாவிடினும் இருக்கிறது போலவே காட்ட வேண்டுமாம்!

பிறர் வீட்டில் வசிப்பதும், புசிப்பதும் நாணுகிறவர்களுக்குக் கஷ்டமானாலும், பிடிங்கித்தின்பவர்களுக்கு அகப்பட்ட வரையில் இது வெகு சுகமாகவே யிருக்கிறதாம்!

தன் குடும்பத்திற்காகச் செலவு செய்வதைத் தான் ஒரு பெரிய புண்ணிய தானமாக நினைக்கவேண்டுமாம்!

அரண்யப் பிரதேசங்கள் எல்லோரையும் வசப்படுத்துமாம்! ஏனெனில், அங்கே சாக்கடை நாற்றமும், மோட்டார் எமன்களும், முனிசிபல் வரியும் கிடையாதாம்!

இனிமையாகப் பேச அறிந்தோனுக்குப் பகைவனே ஏற்படானாம்: வெகு பேரை வஞ்சித்து இனிப்பிலே மயக்கி வேண்டியதைச் சுருட்டிக் கொண்டு ஓடலாமாம்!

இவ்வுலகில் எல்லோருக்கும் நல்லவன் ஒருவனும் இல்லையாம்! மாமிக்கு வேண்டியவர்கள் மருகிக்கு விரோதமா யிருப்பார்களாம்!

வணக்க முள்ளவனே உண்மையான பிள்ளையாவானாம்! அவனால்தான் பிறரை நன்றாக ஏமாற்றிப் பறிக்க முடியுமாம்!

காகமும் கிடைத்ததைத் தின்று கொண்டு தன்மதிப்பில்லாமல் வெகு காலம் ஜீவிக்கிறதாம்! ஆனால், மனிதனோ இலவசத்திலேயே புசித்துக் கொண்டு, அதிலே தனக்கும் ஒரு கௌரவ மிருப்பதாகத் தன்மதிப்புடனே தடபுடல் செய்வானாம்!

காமப்பேயுள்ளோனுக்குப் பயமும் வெட்கமும் இல்லையாம்! கதவு மூடப்பட்டிருக்கையில் பயமும் வெட்கமும் வேண்டியதில்லையாம்!

உடலில் அன்பில்லாதவர் எவர்? அன்பு இருப்பவர்கள் போல் காட்டுவோரிடம் தான் அன்பு கிடையாதாம்!

காலமும் முடிவற்றது; பூமியும் எல்லை யற்றது; ஆதலால், எவ்வளவோ மாறுதல்கள் ஏற்படலாமாம்! அப்படி மாறுதல்கள் ஏற்படுவதால் தான் நேற்றைய சிறுமி இன்று ஒரு குழந்தைக்குத் தாயாகிறாளாம்!

வியாபாரி நேசம் கூடாதாம்! எவ்வளவு இனிப்பான பேச்சிலும் காசு பணம் சாமான் கணக்கு வெகு கண்டிப்பாயிருக்குமாம்! ஒரு காசுகூட விட்டுப் போகாதாம்!

கல்வி கற்றால் பாடல்கள் செய்யவும் அறிய வேண்டுமாம்! அப்போது தான் ஊராரை மிகமிக மயக்கி எதையும் இலவசத்தில் பெற்று நக்க முடியுமாம்!

# சீன தேசத்து ஆசரணைகள்.

(555-ம் பக்கத் தொடர்ச்சி.)

16. சைனாக்காரரின் தண்டனைகள் :—

முன்னமே கூண்டு என்கிற ஜெயிலைப் பற்றிச் சிறிது சொல்லியிருக்கிறோம். அதில் அகப்பட்டுக்கொண்டவனுக்குத் திரும்பவும் முடியாது, நிற்கவும் முடியாது, அசையக்கூட முடியாது, அவன் சாகும் வரைக்கும் அதிலேயே அல்லல்பட வேண்டியதுதான். அத்துடன் போயிற்றா? குற்றவாளிக்கு மிகுந்த வெட்கம் உண்டாக்கி அவனை அழவைப்பதற்கு அந்தக் கூண்டைத் தெருத்தெருவாய் எடுத்துக்கொண்டு போவார்கள். இதல்லாமலும், மிகப் பளுவான பலகையின் நடுவில் பொத்தலுண்டாக்கித் தலையை நுழைத்துவிட்டு, பக்கங்களில் இரண்டு துவாரங்களைச் செய்து அதில் இரண்டு கைகளையும் நுழைத்துவிட்டுச் சில குற்றவாளிகளை வருத்துகிற தண்டனையுமுண்டு. குற்றத்திற்குத் தக்கமாதிரி பளுவும் அதிகப்படும். இது மிகவும் வெட்கக்கேடான சித்திரவதையாயுள்ள தண்டனை, பெரிய மனிதர்களாகிய குற்றவாளிக்கு இது அடுத்த தண்டனையாகச் சொல்லப்படுகிறது. அவர்களை இவ்வித தண்டனைக்குட்படுத்தி அவர்களின் வீட்டுப் பக்கத்திலேயே விட்டுவிடுவது வழக்கம். பிரம்பாலடிப்பது மற்றொரு தண்டனை. அடிபட்டவன் மாஜிஸ்திரேட்டுக்கு வந்தனை செய்து போவது வழக்கம். ராஜத்துரோகம் செய்தவர்களுக்கு மாத்திரம் சித்திரவதை விதிப்பதுண்டு. விரல் விரலாய் வெட்டி யெறிந்தும், சதையைத் துணிக்கைகளாகச் செதுக்கியும் பல வகையான கொடுமைகள் அவர்களுக்குச் செய்வதும் உண்டு.

17. சைனாக்காரர் உபசாரம்:—ஒருவரின் வீட்டிற்கு ஒருவர் சென்றால் மிக்க வாய் உபசாரம் நடக்கும். அங்கேயே தங்கியிருக்க வேண்டுமென்றும், பல நாளைக்கு அவ்விடமே புசித்து ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் வீட்டுக்காரன் விருந்தாளியை வெகுவாக வேண்டிக்கொள்வான். எவ்வளவு வேண்டிக்கொண்டாலும் விருந்தாளி அதற்கு மறுத்துவிட்டுப் புறப்பட்டுவிட வேண்டியதுதான் மரியாதையாகும். அவ்விதமின்றிப் புசிப்பதற்கு ஒப்புக்கொண்டு தங்கிவிட்டாலோ பிறகு வீட்டுக்காரன் அவனைப்பற்றிச் சிறிதும் கவனியான். மரியாதை தெரியாத மூடன் என்று இகழ்ந்து பரிகசிப்பான். கேவலம் செய்வான். அதை விருந்தாளி கண்டுகொண்டு தானாகப் புறப்பட்டுச் சென்றுவிடுவான். போகிறவனை என் போகிறாய் என்று வீட்டுக்காரனும் கேட்காமல் ஜாடையாக இருந்துவிடுவான்.

18. சைனாக்காரர் விவாகம்:—அநேகமாக நம்மைப் போலவே

---

"என் கலியாணத்திற்கு வரன் நிச்சயமாயிற்று. என் ஆசைக்கேற்ற காதற் கணவர் கிடைத்திருக்கிறார். சிநேகம் சிநேகத்தைத் தரும். நல்ல இடம் தேடி வாழ்க்கைப்பட்டேன். இது நான் பெற்ற பெரும்பேறு.

சைனக்காரர்களுக்குள்ளும் கல்யாணப்பிள்ளை கல்யாணப்பெண்ணை விவாகத்திற்கு முன் பார்க்கிற வழக்கம் கிடையாது. கல்யாணப்பிள்ளை மிகவும் ஆர்ப்பாட்டத்துடன் ஊர் கோலமாய்ப் போய்க் கல்யாணப் பெண்ணை அழைத்துவருவது வழக்கம். கல்யாணப் பண்டிகைகள் சாதாரணமாக முடிவாக ஒருமாதம் செல்கின்றது. கால்மடக்குண்ட பெண்களே மிகவும் ரூபவதிகளென்று அவர்களையே கல்யாணப் பிள்ளைகள் தேடுவார்கள். அநேகர் சதிபதிகள் சௌக்கியமாய் சந்தோஷ சித்தத்தோடு வாழ்ந்துவந்த போதிலும், பல புருஷர்கள் தங்கள் மனைவிகளை மிருகங்கள்போல் நினைத்து அவர்களை அடிப்பதும் வருத்துவதும் வழக்கமா யிருக்கிறது.

18 சைனக்காரர்கள் மரணம்:- சைனக்காரர்கள் உயிராக இருக்கும் போதே விலையுயர்ந்த மரம் வாங்கி வைத்துத் தனது மரணப் பெட்டிக்கு என்று ஏற்பாடு செய்து வைப்பது வழக்கம். சைனக்காரன் ஒருவன் இறந்துவிட்டால், அந்த வீட்டுத் தெருவில் ஒரு போர்ட் கட்டி, இறந்தவன் பெயர், பட்டம் முதலானவைகளை எழுதி வைப்பது வழக்கம். இறந்தவனுடைய பந்துக்களெல்லாரும் ஒன்று சேர்வதும், முரட்டு வெள்ளைத் துணியைத் தலையிலும் உடம்பிலும் அணிந்து தரையில் உட்கார்ந்து அழுவதும் வழக்கம். மரணப் பெட்டியில் சுண்ணாம்பு போட்டுப் பிரேதத்தை வளர்த்தி வைத்து, இருபத்தொருநாள் பொறுத்துப் பிரேதம் புதைக்கு மிடத்துக்குக் கொண்டு போவது வழக்கம். பந்துக்கள் போகும்போது வெள்ளைத் துணியை உடம்பிலே போட்டு இடுப்பிலே கயிற்றைச் சுற்றிக்கொண்டு புதைக்குமிடத்திற்குச் செல்வது சாதாரணமாய்க் காணக்கூடியது. பந்துக்கள் சிலநாள்வரைக்கும் பிரேதங்களைப் புதைக்குமிடத்திலேயே சூழ்ந்து நின்று இறந்தவர்களைப் பற்றிப் பஜனை செய்வார்கள். வீட்டிற்கு வந்ததும் போர்டைக் கழற்றி, இறந்துபோன பெரியோர்களுக்கென்று ஏற்படுத்திய ஹாலில் சேர்த்துவிடுவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் இறந்துபோன பெரியோர்களுக்கென்று ஒரு ஹால் ஏற்படுத்தி அவரவர்களின் போர்டுகளைச் சேர்த்து வைத்திருப்பது வழக்கம். ஒருவனுடைய சந்ததியார் முழுமையும், எத்தனை பெயராக இருந்தபோதிலும், அந்த ஹாலில் பெரியோரைத் தொழுங் காலங்களில் ஒன்றாய் வந்து சேருவது சகஜம். தேசங்கள்தோறும் பாஷைகள் வேறு; அவரவர் ஸம்பிரதாயங்களும் வெவ்வேறு. உலகம் பலவிதம்.

---

பெண் ஜன்மமோ புண் ஜன்மமோ! சீக்கிரம் ருதுவாகாவிட்டாலும் திட்டுகள் வருகின்றன. விரைவில் விவாகம் கூடாவிடில் பெரிய பழிப்பு. கல்யாணமாகிக் குழந்தை சீக்கிரம் தோன்றாவிடில் கணவன் மறுமணம் செய்வதாகப் பேசுகிறான். குழந்தை பிறந்தும் பெண்ணானல் சொட்டுச் சொல் வருகிறது. பிரசவம் மறு பிறப்பாகிறது. தனக்குப் பின் வருபவ ளிடம் தன் மக்கள் என்ன பாடு படுவரோ என்ற ஏக்கமும் வேறே!

---

செத்துச் சாம்பலாகிவிட்ட டாக்டர் அன்னிபிஸண்டு அம்மையார் ஆவி ரூபமாக தியாஸபிகல் சங்கத்திலிருக்கிற லெட்பீட்டர் என்பவரிடத்தில் வந்து பேசியவாறு இருந்ததாக ஒருகட்டுக்கதை கிளப்பிவிடப் பட்டது.

# சிறுமணித்திரள்

(வ.—ரா.)

அலையின் தலையில் வருகிறது நுரை. புயலின் இடையில் ஜொலிக்கிறது மின்னல். அல்லல் படும் மனதில் முழங்குவது வீரச்சொல்.

அமைதி யில்லாத பொது வாழ்வில் நெருக்கடிகள் ஏற்படுவது இயல்பு.

மனிதனுய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் அரசன் மகளைக் கலியாணம்செய்து கொள்ளப் பாதி சம்மதம் தான். ஆனால், அரசன் மகள் சம்மதிக்க வேண்டாமா?

மனிதனின் பழய வாழ்வைப் படம் பிடித்துக் காண்பிப்பது நாடகம்; தற்கால வாழ்வை சித்திரமாகக் காண்பிப்பது நாடகம்; எதிர்கால வாழ்வைக் கற்பனை மூலமாய்க் காண்பிக்க முயலுவதும் நாடகமே.

மனிதனுக்குத் தன் முகமும் தெரியாது; கண்ணாடி பார்த்தால் கூடச் சரிவரத் தெரியாது. ஒவ்வொரு மனிதனும் பிறருடைய முகத்தையும் முதுகையும் பார்த்துத்தான் அவைகளின் அமைப்பை நன்றாய்த் தெரிந்துகொள்ள முடியும். முகம் என்பது அறிவுக்குக் குறி, முதுகு சக்திக்கு அடையாளம். அர்ஜுனன் "முதுகு அழகன்" என்பதைக் கேட்டிருப்பீர்கள். போரில் முதுகு காட்டாததே முதுகுக்கு அழகு என்றும் சொல்வார்கள். முதுகின் வலிமையையும், முகத்தின் பொலிவையும் பொறுத்தது மனித வாழ்வு என்று ஏன் சொல்லக்கூடாது?

சோர்வு மனிதனை நீர்க்கச் செய்யும். சாந்தி மனிதனைக் கெட்டிப் படுத்தி அவனுக்கு உரம் ஊட்டும். சோர்வுக்கு, அலுப்பு மந்திரி. சாந்திக்கு, கர்மம் அஸ்திவாரம். சோர்வு மனிதனை அழிக்கும். சாந்தி மனிதனை ஆக்கும்.

வலிமை இழந்த அறிவும், ஏக்கம் பிடித்த மனமும், தளர்ந்துபோன நரம்புகளும், ஓய்ச்சல் கொண்ட உடல் அங்கங்களும் மகாநாடு கூடினால் என்ன தீர்மானம் நிறைவேறும் என்று எண்ணுகிறீர்கள்?

கனவிலோ, கற்பனையிலோ அனுபவிக்கிற சந்தோஷத்தை, காரியத்திலே அனுபவிக்க முடியுமா? வாழ்வுக்கும் இலட்சியத்துக்கும் ஒருவாறு ஒற்றுமை வேண்டும்.

தனித்திருந்தால், தியானம் அல்லது கொட்டாவி அல்லது கற்பனைக்கு எட்டிய வரையில் அடுக்கிக் கொண்டு போகலாம். இருவர் கூடினால் அது சபை. மூவர் சேர்ந்தால் அது மகாநாடு. நாலுபேர் கலந்து கொண்டால், அது சண்டை, அதுவே யுகப் பிரளயம்.

கர்மத்துக்குப் பலன் ஜன்மம் (வாழ்வு;) கர்மத்திற்குப் பலன் சரித்திரம்; கர்மத்துக்குப் பலன் ஞானம்.

படிப்பில்லாத "ஸரஸ்வதி"கள் இல்லையா? கற்பைக் கனவிலும் அறியாத "ஸாவித்திரி"கள் இல்லையா? கடுகடுப்பு விகார மூஞ்சிக்காரனுக்கு "ராமச் சந்திரன்" என்று ஏன் பெயர் வைக்கிறார்களோ?

# நாகானந்தம்

(565-ம் பக்கத் தொடர்ச்சி.)

## IV

காலதேவதையினுடைய மகிமையால் நமது கதாநாயகனுடைய நிலைமையிலும் இப்பொழுது மாறுதலேற்பட்டது. ஜீமூதகேதுவுக்குப் பதிலாக அவனுடைய பிரதான மந்திரி இராஜ்யத்தை ஆண்டு வருகையில், திடீரென மதங்கஹஸ்தன் வித்தியாதர ராஜ்யத்தின் மேல் படையெடுத்து வந்தான். இச்சமாசாரம் எப்படியோ மித்ராவஸுவின் காதுக் கெட்டியது. ஆனால் ஜீமூதவாகனனுடைய பகைவனாகிய மதங்கனைக் கொன்று, வித்தியாதர ராஜ்யத்தைப் பகைவர்கள் வசம் செல்லாமல் காப்பாற்றிக் கொடுப்பது தன் கடமையா யிருக்க, வெட்கமென்பது சிறிதுமின்றி 'உன்னுடைய இராஜ்யத்தைப் பகைவன் அபகரித்தான்' என்னும் கர்ணகடோரமான வாக்கியத்தை ஜீமூதவாகனனிடஞ் சொல்ல மித்ராவஸு விரும்பவில்லை. ஆயினும், அவனுடைய உத்தரவின்றி அப்படிப்பட்ட ஸாகஸமான காரியத்தைச் செய்யலாகாதென அவன் நினைத்தான். ஆதலின், மாலையில் வழக்கம்போல் அவனைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று வழியில் இச்செய்தியைத் தெரிவிக்க எண்ணி அவன் தான் அன்று சாயங்காலத்தில் கடற்கரைக்கு உலாவப் போவதாய் ஜீமூதவாகனனுக்குத் தெரிவிக்க, அவன் தானும் மித்ராவஸுவுடன் உலாவ வருவதாய்ப் பதில் கூறியனுப்பினான்.

மேற்கூறிய ஏற்பாட்டின்படியே மித்ராவஸு அன்று மாலையில் ஜீமூதவாகனனுடன் கடற்கறைக்கு உலாவச் சென்றான். சமுத்திரக் கரையை யடைந்தபின் இருவரும் அங்கோர் கல்லின்மீது அமர்ந்தனர். தக்க சமயம் பார்த்து, மதங்கஹஸ்தகன் படையெடுத்து வந்திருப்பதாகத் தான் கேட்ட சமாசாரத்தை மித்ராவஸு ஜீமூதவாகனனுக்குத் தெரிவித்துத் தானொருவனாகவே சென்று பகைவனைக் கொன்று வருவதற்கு உத்தரவளிக்க வேண்டுமென்று வேண்டினான். அதைக் கேட்ட ஜீமூதவாகனன் "ஆ! நன்று பேசினாய்! பிறருடைய நன்மையின் பொருட்டு, அவர்கள் இரக்காமலே, என்னுடலையும் கொடுக்கும் தன்மை வாய்ந்த நான் ஓர் இராஜ்யத்தைப் பெறும் ஆசையால் மதங்கனைக் கொல்ல அனுமதி கொடுப்பேனோ? நீ எனக்கு நன்மையைச் செய்ய விரும்புவாயாகில், மதங்கனை மன்னித்து விடு." என மொழிந்தான். ஜீமூதவாகனனுடைய ஜீவகாருண்யத்தன்மையை ஏற்கனவே அறிந்திருந்த மித்ராவஸு அச்

---

உயிரோடு பூலோகத்தில் இருக்கும் மனிதன் செத்த மனிதனுடைய "ஆவி"யுடன் பேசும் "அற்புத"த்துக்கும், பிராமணனுக்குக் கொடுத்து பிதிர்களுக்குச் சாப்பாடு அனுப்பும் மோசடிக்கும் அதிக வித்தியாசமில்லையென்று "தமிழ் நாடு" எழுதுகிறது.

சமயத்தில் அவனிடம் வேறு ஒன்றும் கூறவில்லை.

சிறிது நேரத்தில் சமுத்திரத்தில் அலைகள் பொங்கி யெழுந்து வேகமாகக் கரைமீது மோதிக்கொண்டு வந்தன. அப்போது மித்ராவஸு ஜீமூதவாகனனைப் பார்த்து "இராஜகுமார! இப்போது கடல் கொந்தளிக்கும் சமயம் ஆகையால் நாம் வீட்டுக்குத் திரும்பிப் போகலாம்; வா." என்றான்.

ஜீமூதவாகனன்:—ஆம்; நீ கூறியது உண்மையே. அதோ பார்! நிலாவைப்போன்ற வெண்மையான அலைகள் அம்மலையடிவாரத்தில் மோதுவதைப் பார்.

மித்ராவஸு:—அது மலய மலையின் அடிவாரமல்ல; அங்கு நாகங்களின் எலும்புகள் ஒன்றாய்க் குவிக்கப் பட்டிருக்கின்றன.

ஜீமூதவாகனன்:—ஐயோ! இங்கு எந்த ஆபத்தின் காரணமாக இத்தனை நாகங்கள் இறந்தன?

மித்ராவஸு:—அவை ஆபத்தினால் இறக்கவில்லை; பக்ஷிராஜனாகிய கருடன் இங்கு வந்து, தன் இறகுகளால் இக்கடலைக் கலக்கி, பிரதிதினமும் ஒவ்வொரு நாகத்தைப் புசித்து வந்தான். அதனால் நாகங்களின் குலம் வரவர அழிவதைக் கண்ட நாகராஜனாகிய வாஸுகி பக்ஷிராஜனை யடுத்து, "அரசே! நீ கடலில் வேகமாக விழும்போது அநேக நாக கன்னிகைகளின் கர்ப்பங்கள் கலங்கி விடுகின்றன; நாகக் குட்டிகள் இறந்துவிடுகின்றன. அதனால் நாளடைவில் நாகங்களின் குலமே அழிந்துவிடும். உன்னுடைய ஆகாரத்துக்காக பிரதி தினமும் நான் ஒரு நாகத்தை உனக்குக் கொடுத்து விடுகிறேன்." என்று சொல்ல, கருடனும் அதற்கிசைந்தான். அந்த ஏற்பாட்டின்படியே கருடன் ஒவ்வொரு நாளும் ஒரு நாகத்தைப் பக்ஷித்து, அதன் எலும்புகளை இங்கு எறிந்துவிட்டுப் போகிறான். அவ்வெலும்புகளே இங்கு மலைபோல் குவிந்திருக்கின்றன.

ஜீமூதவாகனன்:—ஹா! ஹா! ஹா! வாஸுகியின் இரண்டாயிரம் நாக்குகளில் ஓர் நா "ஓர் நாகத்தை ரக்ஷிப்பதற்காக நான் இன்று கருடனுக்குப் பலியாகிறேன்." என்று சொல்லவில்லையா?

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டிருக்கையில், விச்வாவஸுவால் அனுப்பப்பட்ட அனந்தனென்னும் ஓர் சேவகன் அங்கு வந்து மித்ராவஸுவைக் கண்டு, "இளவரசே! அரசர் உம்மை ஏதோ ஒரு காரியத்தின் பொருட்டு உடனே வரும்படி கூறினார்." என்றான். அதைக் கேட்ட மித்ராவஸு, "ஜீமூதவாகன! என் தந்தை என்னை யழைத்துவரும்படிச் சேவகனை யனுப்பியிருப்பதால் நான் போகிறேன். நீயும் வெகு நேரம் இவ்விடத்திலிருக்க வேண்டாம்" என்று சொல்லிவிட்டு அரண்மனைக்குச் சென்றான்.

மித்ராவஸு சென்றவுடன் ஜீமூதவாகனன் அம்மலையைச் சுற்றிப் பார்க்க நினைத்து, அம்மலையின்

---

பாவி மனிதன் இதுகாறும் எனக்கு ஒரு நன்மையும் செய்யவில்லை என்கிறார்கள். அந்தப் பாவி மனிதனுக்கு இந்தப் பாவி மனிதன் செய்த நன்மைகள் என்னென்னவென்று யோசித்துப் பார்த்திருப்பின், தான் செய்ததற்கு மேலாகவோ, சரிசமமாகவோ அவரும் செய்திருப்பதாகத் தெரியவரும்.

உச்சியில் உலாவிக்கொண்டிருந்தான். அப்போது திடீரென "ஆ! குழந்தாய் சங்கசூட! நீ கொல்லப்படுவதை என் கண்களால் எப்படிக் காண்பேன்!" எனும் குரல் அவன்காதில் விழுந்தது. அக்குரலோ ஒரு ஸ்திரீயின் குரல் போல் காணப்பட்டது. பரோபகாரத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்த நமது கதாநாயகன், "எவ்விடத்திலேயோ ஒரு ஸ்திரீ ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறாள். அவளைக் காப்பாற்றவேண்டும்" என நினைத்து அச்சத்தம் கிளம்பிய இடத்தை நோக்கிச் சென்றாள்.

சிறிது தூரத்தில் ஓர் கிழவியுடன் ஒரு பிள்ளையையும், அவர்களின் பக்கத்தில் மற்றொரு மனிதன் நிற்பதையும் கண்டு விசாரித்ததில், சங்கசூடனென்னும் பெயர்வாய்ந்த அப்பிள்ளை அக்கிழவியின் மைந்தனென்றும், இன்று பக்ஷிராஜனுக்குப் பலியாக அவனுடைய முறை வந்ததாகவும், பக்கத்தில் நிற்கும் மனிதன் வாஸுகியின் வேலைக்காரர்களிலொருவனெனவும் ஜீமுதவாகனன் அறிந்தான். தன் மகன் இறக்கப்போவதை நினைத்த கிழவி, "குழந்தாய் சங்கசூட! இன்று நீ கொல்லப்படுவதை என் கண்களால் எப்படிக் காண்பேன்? சந்திரன்போன்ற உன் முகத்தை யிழந்த பாதாளத்தில் இருள் சாய்ந்துவிடாதோ! வெயிலையே என்றும் அறியாத ஸுகுமாரமான உன்னுடலைத் தயையற்ற அக் கருடன் எப்படிப் பக்ஷிப்பான்? நான் உன் முகத்தை நன்றாய் உற்றுப்பார்க்கும் வரையில் சற்று இங்கு நின்று, பின்பு போ." எனப் புலம்பினாள். சங்கசூடன்—"அம்மா! என் வீணாக வருந்துகிறாய்? பிறப்பெடுத்த ஜீவன்களுக்கெல்லாம் இறப்பு என்பது உடன்பிறந்ததாய் இருக்க நீ என் துக்கப்படவேண்டும்?" என்று சமாதானம் கூறினான். இராஜசேவகன்—"அடே சங்கசூட! இக்கிழவி புத்திர சினேகத்தால் துக்கித்துக்கொண்டிருக்கிறாளேயொழிய, 'இது அரசனுடைய உத்தரவு' என்பதைக் கருதாள். வா; போகலாம்' என்றாள்.

சங்கசூடனை யழைத்துச்சென்ற இராஜசேவகன் ஓர் குறித்த இடத்திற்குச் சென்று, "சங்கசூட! நாகராஜனாகிய வாஸுகியின் உத்தரவுப்படி இக்கல்லின்மேல் ஏறு, இதுவே கொலைக்களம். இச்சிவப்பு வஸ்திரங்களை யணிந்துகொள், கருடன் பக்ஷிக்கத்தக்க நாகத்துக்கு இவையே அடையாளங்கள்" என்று கூறி, அச் சிவப்பு வஸ்திரங்களைக் கொடுக்க சங்கசூடன் அவைகளை யணிந்துகொண்டான். பின்பு கருடன் வரும் சமயமென் அறிந்து அவ்விராஜசேவகன் திரும்பிப்போய்விட்டான்.

தனயனைத் தொடர்ந்து சென்ற கிழவி தன் அருமைப் புதல்வன் சிவப்பு ஆடைகளை யணிந்திருப்பதைக்கண்டு மனங்கொதிக்க, "ஆ குழந்தாய்! இச்சிகப்புத்துணியுடன் உன்னைக் காணும் காலமும் வந்ததோ!" எனக் கூறியவண்ணம் மூர்ச்சை யடைந்தாள்.

இவ்விருத்தாந்தங்களைத் தன் கண்ணாரக்கண்ட ஜீமுதவாகனன்—

---

"ஆ! இக்கருடன் எவ்வளவு கடோர நெஞ்சம் படைத்தவன்! புத்திர னிடத்தில் தனக்குள்ள ஆவலின் மிகுதியால் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிய, 'அடே பிள்ளாய்! உன்னைக் காப்பாற்றுபவர் யார்?' எனக் கல்லும் கரையும்படி யான குரலில் புலம்பும் அன்னையின் மடியில் விடப்பட்டிருக்கும் சிசுவைத் தயையின்றித் தன் மூக்கினால் கொத்தி எடுத்துச் செல்லும் இக் கருடனுடைய இதயம் வஜ்ரத்தினால் செய்யப்பட்டதோ! தன் பந்துக்களும் தன்னைத்துறக்க, பிராணன் போகும் தருவாயில், ஆபத்திலகப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நாகத்தைக் காப் பாற்றுவிடில், நான் இவ்வுடலைப் பெற்றதின்பயனென்ன?" என யோ சித்து அக்கிழவியிடஞ் சென்றான்.

மூர்ச்சையிலிருந்து தெளிவுற் றெழுந்த தன் தாயைச் சங்கசூடன் சமாதானப்படுத்தினான் அவள் அவ னைத் தழுவி "அப்பா! எவ்வளவு கஷ் டத்துடன் நான் பெற்றேன்? (இப் பாழும்) கருடனுக்கிரையாகக் கொ டுப்பதற்காகவா உன்னை நான் இது வரையில் வளர்த்தேன்? உன்னை மறு படி நான் எப்படிக் காண்பேன்? எவ்வளவோ சிரமத்துடன் ஈன் றெடுத்த எனது ஏக புத்திரனைக் கொலைக் களத்திற்கு அனுப்பிய நாக ராஜன் தயாளுவோ! ஆ! இனி: 'என்னுடைய பிள்ளை' எனச் சொல லத்தக்க பெரும் யோக்கியத்தை நான் பெறவில்லை. ஐயோ! நரகலோகத் துக்கு அரசனாகிய வாஸுகியும் உன் னைத் துறந்த பின்பு, உன்னைக் காப் பார் வேறொருவரும் உண்டோ?" என்று புலம்பினாள். உடனே ஜீமூத வாகனன் "நானிருக்கிறேன்! என்று கூறிக்கொண்டே அங்கு ஓடிவந்தான். அவனைக் கண்ட கிழவி கருடன் வந்தா னென நினைக்க, சங்கசூடன் "அம் மா! பயப்படாதே! இவன் கருட னன்று. பார்! *பெரிய பெரிய பாம்புகளை யெல்லாம் கொல்வதால் சிவந்த மூக்கையுடைய அக்கருடன் எங்கே! சாந்த ஸ்வபாவமும் அழகிய உருவமு முடைய இம்மகானுபாவன் எங்கே!யெனமொழிந்து அவளுடைய பயத்தை நீக்கினான்.

ஜீமூத வாகனனைக் கண்ட அய் கிழவி, "பிள்ளாய்! சிரஞ்சீவியாத இரு." என ஆசீர்வதித்தாள். ஜீமூப் வாகனன். "ஆ! இக் கிழவிக்குக் பிள்ளையிடமுள்ள வாத்ஸல்யம் தான் என்னே! இவளுடைய புத்திர சினே கத்தைக்கண்டு கன்னெஞ்சம் படை த்த கருடனும் இரக்கங்கொள்வான்" என நினைத்து, அம்மா! கருட பலி யின் அடையாளங்களை எனக்குக் கொடுத்துவிடு. உன் குமாரனைக் கருடனிடமிருந்து ரக்ஷிக்கும் பொருட்டு நான் என்னுடலைக் கொடுக்கிறேன் † என்றான். கிழவி காதுகளை மூடிக்கொண்டு, "ஐயை யோ! நீ எனக்கு சங்க சூடனைக் காட்டிலும் உயர்ந்த பிள்ளை. ஏனெ னில், பந்துக்களாலும் விடப்பட்ட என் மைந்தனைக் காக்க நீ முன் வந் தாய் என்றனள். சங்கசூடன், ஆஹா! இவனுடைய குணம் லோகோத்தர மானது. ஏனெனில்—எப் பிராண னைக் காப்பாற்றுவதற்காக முற்காலத் தில் விச்வாமித்திர முனிவர் நாயின் மாமிசத்தை உண்டாரோ, எப் பிராணனைக் காப்பாற்றும் பொருட்டு நன்றி யறிவற்ற கௌதமன் தனக்

* இக் கதையை வால்மீகி ராமாயணத்தில் காண்க.

† இக்கதையை "Oxford University Press" இல் அச்சிடப்பட்ட "Indian Tales" என்னும் புத்தகத்தில் ஆங்கில பாஷையில் காணலாம்.

குப் பேருதவி புரிந்த தாடிஜங்கனைக் கொன்றானே, எப்பிராணனைக் காக்கும் பொருட்டு கச்யாபருடைய புத்திரனாகிய கருடன் பிரதி தினமும் பாம்புகளைத் தின்கிறானோ, அப்பிராணனைத் திருணமாக மதித்து, இம் மகா புருஷன் பரோபகாரத்துக்காகக் கொடுக்கத் துணிந்தான் என மனதிலெண்ணி, ஜீமூதவாகனனைப் பார்த்து, "கருணைக் கிருப்பிடமாகிய இராஜ குமார! என்னைப்போன்ற க்ஷுத்திரர்கள் ஒவ்வொரு நாளும் பிறந்து இறக்கிறார்கள். உன்போன்ற பரோபகாரியோ பிறப்பதே அரிது. ஆதலின் வீணாகப் பிடிவாதஞ் செய்யாதே. சங்கத்தைப்போல் வெண்மையான கீர்த்தியை யுடைய சங்கபாலனுடைய வம்சத்திற் பிறந்த சங்கசூடனும் இப்பிராணனை ஒரு பொருட்டாக மதித்து, அதன் பொருட்டு ஜீமூத வாகனனைப் போன்ற ஒரு மகானுபாவனைக் கருடனுக்கும் பலியாகக் கொடுப்பானோ? உனக்கு என் மீது தயை யிருக்குமேயாகில், இதோ கண்ணீர் விட்டுப் புலம்பும் என் தாயைச் சமாதானப்படுத்தி, அவள் உயிரோடு வாழும்படியான ஏற்பாட்டைச் செய்.* என்றுரைத்தான்.

அதைக்கேட்ட ஜீமூதவாகனன் சங்கசூட! நான் வெகு நாட்களாகப் பிறருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென எண்ணியிருந்தும், இதுவரையில் அதற்குத் தக்க சமயம் வாய்க்கவில்லை. இப்போது தெய்வ கதியாய் அகப்பட்ட இவ்வவசரத்தை நான் விடுவேனா? உன் தாயைக் காப்பாற்ற ஒரு சிறந்த உபாயம் சொல்லுகிறேன் கேள், நீ இச் சிவப்பு வஸ்திரங்களை என்னிடம் கொடுத்து விட்டு உன் அன்னையுடன் வீட்டுக்குப் போ. கருடனுடைய மூக்கினால் கொத்தப்பட்டு நாகங்கள் கொல்லப்படுவதால், இரத்தம் ஆறாகப் பாய, இரண்டு இறகுகளையும் வேகமாக வீசிக்கொண்டு ஆகாயத்தில் கழுகுகள் வட்டமிட, நரிகள் ஊளையிட்டுக் கொண்டு ஆவலோடு ஓடிவர, மிகவும் பயங்கரமாயிருக்கும் இச்ச மசானத்தை இன்னும் சிறிது நேரம் உன் தாய் பார்ப்பாளாகில், அவள் தன் பிராணனைத் துறப்பாளென்பது திண்ணம். இப்போது கருடன் வரும் சமயமாகி விட்டது நீ உடனே இங்கிருந்து புறப்படு என்றான்.

(தொடரும்.)

K. S. ஸ்ரீநிவாசாசாரியார்.

---

நூலாசிரியரை நண்பனாகக் கொண்டவர்கள் அவரிடமே அவரது நூலின் விலையில் பாதியைக் கொடுத்து மறு பாதியைப் பிறகு தருவதாகவும் கூறுகின்றனர். நூலாசிரியரோ நட்பைக் கருதிப் பணம் பெறாமலே இவர்களுக்குப் புஸ்தகத்தைத் தர, அப்போது அதைப் பெற விருப்பமில்லாதவர்கள் போலும், பணத்திற்கே தரும்படியும் இந்த நண்பர்கள் வேண்டிக்கொண்டு பாசாங்கு செய்துவிட்டுப் பிறகு மெதுவாகப் புஸ்தகத்தைச் சுருட்டிக்கொண்டு ஓடுகின்றனர். இந்தக் குள்ளநரி நண்பர்கள் நூலாசிரியர்களின் கையில் பணம் சேரவேண்டுமென்ற உண்மைக் கருத்து உடையவராயின், வேறொரு மனிதனைப் பணத்துடன் நூலாசிரியரிடம் அனுப்பிப் புஸ்தகத்தை வாங்கிக்கோள்கிறதுதானே? அப்பொழுது பணம் ஏழை நூலாசிரியருக்குக் கிடைத்து அவர் செலவுக்கு உதவும்படி யிருக்குமே. இப்படி நட்பு நடிப்பில் பிறர் பொருள் அபகரித்தல்தான் இவர்கள் கற்ற கல்வியின் பயனோ? செய்வது ராமஜெபம், நாராயண ஸ்மரணை! கொள்ளையிடுவது பிறர் சொத்தா ?



# பெரியாரின் மொழிகள்



1. The means that heaven yields must be embraced, and not neglected. SHAKESPEARE.

கடவுள் விடும் வழியைக் குறித்து நாம் எப்போதும் உள்ளத்தில் குதூகலமடைய வேண்டுமே தவிர, அதை அலக்ஷியம் செய்யக்கூடாது.

ஷேக்ஸ்பியர்.

2. You can't make a head and brains out of a brass knob with nothing in it. DICKENS.

புத்தி நன்றாய் வேலை செய்யாவிடில், ஒரு வேலையையும் செவ்வனே செய்ய இயலாது. டிக்கின்ஸ்.

3. May mercy be showed to me as I show it to others.

DICKENS.

நான் பிறருக்குக் காருணியம் காட்டுவதுபோலவே, எனக்கும் பிறர் கருணை காட்டக்கடவார்களாக.

டிக்கின்ஸ்.

4. Love is sunshine, hate is shadow, life is checkered shade and sunshine; Rule by love.

LONGFELLOW.

இனிய வதனம் சூரிய உதயத்திற்கு ஒப்பாகும். சிடுசிடுப்பு (மந்தமான) நிழலைப்போன்றது. உலகம் இரண்டிலும் கலந்தே இருக்கிறது. ஆகையால், எப்போதும் உலகத்தை இனிய வதனத்தாலேயே ஆள்க.

லாங்பெல்லோ.

5. Think and speak and act like an accountable creature.

DICKENS.

ஆழ்ந்து யோசித்து, அதன்பின் பேசு; எப்போதும் பிறர் குறைகூறாதவாறு நட. டிக்கின்ஸ்.

6. Let us do our work as well, Both the unseen and the seen; Make the house where Gods may dwell, Beautiful, entire, and clean. LONGFELLOW.

பார்க்கக்கூடியதையும், பார்க்காமல் விடப்படுவதையும், எதுவாக இருந்தாலும் சரி, அவைகளைச் சுத்தமாகவே செய்வோம். கடவுள் வசிக்கக் கூடிய வீடாகிய கோயிலை அழகாகவும், நிர்மலமாகவும் வைத்திருப்போமாக. லாங்பெல்லோ.

7. It's as well to be kind whenever one can. DICKENS.

பக்ஷமாக எங்கெந்த சமயத்தில் இருக்க முடியுமோ, அக்காலத்தில் அவ்வாறு இருப்பதே நலம்.

டிக்கேன்ஸ்.

8. See how God in all His creatures works! SHAKESPEARE.

எண்ணிலடங்காத தம் சிருஷ்டிகள் எல்லாவிடத்தும் கடவுள் எவ்வாறு கருணை புரிகிறார் பார்!

ஷேக்ஸ்பியர்.

---

கேட்டது என்ற ஒன்றை விதிப்படி தர்ம ஒழுங்காகச் செய்கையில் அது மிக்க நியாயமானதாகிறது.

9. There's fevers of mind as well as of body. DICKENS.

உடம்பிற்கு எப்படி அசௌக்கிய மிருக்கிறதோ, அவ்வாறே மனதிற்கும் அசௌக்கியங்கள் இருக்கின்றன.

டிக்கேன்ஸ்.

10. Wander from holiness onward to holiness.

LONGFELLOW.

பரிசுத்த ஹிருதயத்திலிருந்து பரிசுத்த ஹிருதயத்திற்கே உன் மனது தாவட்டும். லாங்பெல்லோ.

11. Things pass away, like a tale and it is told DICKENS.

நம்முடைய கடந்த காலம் ஒரு கதையைப் போலிருக்கிறது.

டிகேன்ஸ்.

12. All that inhabit this great earth, Whatever be thir rank or worth, Are kindred and allied by birth, And made of the same clay.

இப்பூமியிலுள்ள எல்லா ஜீவராசிகளும், அவைகள் எவைகளாகவும் இருக்கட்டும், அவைகளெல்லாம் ஒரே ஒரு பரப்பிரம்மத்தினின்றும் உதயமானதே. லாங்பெல்லோ.

S. ஸ்ரீரங்க ராஜு,
அவனுசி.

# பாம்பு விஷத்திற்கு மருந்து.

ஸ்காத்லாந்திலுள்ள 'எடின்பரோ' என்ற நகரத்தில் டாக்டர் பிரேசர் என்ற பிரசித்த பண்டிதர் பாம்பு விஷத்திற்கு ஒரு மருந்தைக் கண்டு பிடித்தார். அதைச் சில வைத்தியர்களும் உபயோகித்ததில் விஷத்தைக் கேட்கிறது என்று சிலாகித்தனர். அவர் அதைக் கண்டுபிடித்த விதம் மிகவும் விசித்திர மாதலின், அதை இங்கு குறிப்பிடுகிறோம்.

ஃ

முதலில் ஒரு ஜெந்துவை விஷத்தால் பாதிக்கப்படாத நிலைமைக்குக் கொண்டு வந்தார். அம்மை நோய் வராமலிருப்பதற்காக அம்மை போட்டியவர்களின் தேகத்திலிருந்து எடுத்த பாலைக்கொண்டு வைசூரி (Vaccination) வைத்துக்கொண்டால் எப்படி அது உபயோகப்படுகிறதோ, அவ்விதமாகவே ஒரு ஜெந்துவின் உடலில் விஷத்தைக் கொஞ்சமாக ஏற்றி அம்மாதிரியாய் ஏதேனும் பலனுண்டாவென்று பார்த்தார். முதலில் எவ்வளவு விஷத்தால் மரணம் ஸம்பவிக்குமோ அதில் 10 ல் ஒரு பங்கு மாத்திரம் எடுத்துத் தோலின் கீழ் பிரயோகித்ததில் ஏதோ சிறிது சிரமம் உண்டாகி அந்த ஜெந்துவானது அவஸ்தைப் பட்டாலும், சாகவில்லையென்று கண்டார். சிறிது நாளைக்குப் பிறகு அதில் இரண்டு மடங்கு, பின் மூன்று மடங்கு இப்படியாகப் பிரயோகித்து வர, ஒரு சமயத்தில் பிராண ஹானியை உண்டாக்கத்தக்க அவ்வளவு விஷமும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பல தடவைகளில் ஏற்றுவதிலே தேகத்திற்கு ஏதும் கெடுதியாகப் பாதிக்கவில்லையென்று கண்டார். இது நல்ல யுக்தியென்று தாமே நிர்ணயித்துக்கொண்டு, இந்தப்படி எந்த ஜெந்துவை விஷத்திற்கு விலக்காகச் செய்தாரோ அதன் இரத்தத்தைக் கொஞ்சம் எடுத்துக்கொண்டார். எடுத்து, அதைக் கொஞ்சம் வைத்திருந்தால் சிவப்பாய் ஒரு பாகம் உரைந்துபோய் மற்றோர் பாகம் நீரா யிருக்குமல்லவா? இந்த நீராயிருக்கும் பாகத்திற்கு இங்கிலீஷில் "ஸிரம்" (Seram) என்று பெயர். இந்த 'ஸிரத்தை'ச் சேர்த்து வைத்துக் கொண்டார்.

ஃ

இதற்குப் பின் மற்றொரு பிராணியின் மேல் நாகத்தைக் கடிக்கவிட்டு, அப்பிராணி அவதிப்படுங்காலையில் இந்த 'ஸீரத்தை' அதன்

---

ஒருவனைத் தனது மனைவி மிக்க உபசரித்து ஊருக்கு அனுப்புகையில், அவன் அவரிடம் பிரயாணம் சொல்லிக்கொள்ள நெருங்கி இருகரம் கூப்பி வணங்கினான். இதெல்லாம் வீண் செலவுதானே என்று நினைத்த வீட்டுக்காரர் பதிலுக்கு ஒரு கும்பிடு போட்டுத் தொலைத்துவிட்டு மௌனமானார். இதை வந்தவனும் கண்டுகொண்டு, இவர் எளிதில் இவரது மனைவியைப்போல் ஏமாறுகிறவரல்லவென்று உணர்ந்தவனாய்ச் சென்றான்.

கடிவாயில் பிரயோகித்தார். பிரயோகித்ததில் விஷம் நிவர்த்தியாகி குணம் ஏற்பட்டதாகச் செவ்வையாய்த் தென்பட்டது. உடனே, இது தக்க ஔஷதமாகலாமென்று கண்டுகொண்டு, பல முறையும் பல பிராணிகளின் மீது பாம்பைத் தீண்டுவித்து, தன் ஔஷதத்தால் விஷத்தைப் போக்கிக் குணப்படுத்துவதானார்.

ஃ

இந்த 'ஸீரத்தை' நீராகவே பத்திரப்படுத்தியும் சில சமயங்களில் உலர்ந்து போனதாகவும், பல வைத்தியர்களுக்கும் அனுப்பி அவர்களையும் பரிசோதிக்கச் சொன்னதில், அநேகர் நல்ல அபிப்பிராயத்தையே கொடுத்துப் பாராட்டினர். ஆயினும், இது கைகண்ட ஔஷதம்தானென்று உறுதியாய்ச் சொல்லத்தக்க சாக்ஷியம் சரியாக ஏற்பட வில்லையாம். மேலே சொல்லி வந்த சரக்கிற்கு "ஆன்டி—வெனின்" (Anti—venicn) 'விஷவைரி' என்று பெயர். அதை நாகப் பாம்பெனும் நல்ல பாம்பின் விஷத்தைக்கொண்டு எடுத்ததாயிருக்கிறது. மற்ற விஷப் பாம்புகளின் விஷத்தைக்கொண்டும் மருந்து சேர்க்கவேண்டுமென்றும் டாக்டர் பிரேசர் தீர்மானித்து அவ்விதமே முயற்சி செய்தார். "டாபாய்யா" (Daboia) என்ற பெயருள்ள (கத்திரி வீரியன்) பாம்பும், "க்ரெயிட்" (Krait) என்ற (எண்ணெப் பணியன்) பாம்பும் இவ்விதம் விஷம் எடுப்பதற்கு ஏற்றதென்றும். அதைப் பிடிக்கையில் தலையிலடித்து நசுங்கிப் போனால் விஷம் சிதறிப் பயன் படாது போகுமென்றும், ஆகவே, முதுகில் அடித்துக்கொல்ல வேண்டுமென்றும் மேற்படி டாக்டர் கூறியிருக்கிறார். இந்த ஆராய்ச்சிகள் தொடங்கி 40-வருஷங்களாகின்றன. இதன் முடிவு யாதாயிற்றோ தெரியவில்லை.

---

# சென்றமாதம்

நவ நாகரீக நங்கையர்க்கு நன்மதி:—

"சுற்றிச் சுற்றிச் சுங்கச்சாவடி வந்ததுபோல்" 'பழமை'யைக் கேவலப்படுத்திவிட்டுப் 'புதுமை'யைத் தழுவினோர் அங்குள்ள வீண் ஆடம்பரத் தோற்றத்தில் வெறுப்புற்றுப் பூர்வ ஆசாரணைகளே சிலாக்யமெனக் கொண்டு திரும்புதலைப் பல இடத்தும் காண்கின்றோம். பெண் பாடசாலைகளில் உபாத்தியாயனிகள் தங்களின் புது நாகரீக நடை யுடை பாவனைகளைக் கொண்டு பாலிகைகளைக் கெடுத்து வருவது ஸர்வ சாதாரணம். பழமையில் பாலிகைகளின் கவனத்தைத் திருப்புவதில்லை. பழமையான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவற்றைப் போதிப்பதுமில்லை. எவ்வளவுக்கு ஆங்கிலச் சீமாட்டிகள் போல் வெளித் தோற்றம் போட முடியுமோ அவ்வளவுக்கும் பயிற்சி செய்வித்துவிடப்படுகிறது. லக்ஷ்மணபுரியின் அந்த மாகாணக் கல்வி இலாகா டைரக்டரான மிஸ்டர் மாககென்ஸி இதைக் குறித்துக் கூறுவதாவது:—"இந்தியப் பெண்மணிகளுக்கு மேனாட்டுக் கல்வி மிகச் சிறந்ததே. அது அவர்களுடைய மனதை ஒழுங்குபடுத்துகிறது; அவர்களுடைய அறிவை விசாலப்படுத்துகிறது; புதிய லக்ஷியங்கள் அவர்களுக்கு ஏற்படும்படி செய்கிறது. மேனாட்டுப் பெண்மணிகளுடைய பழக்க வழக்கங்களையும் அது பின்பற்றும்படி செய்து விடுமாயின், அது ஒரு அனுகூலமாக இராமல் சாபக்கேடாகி விடும். ஒவ்வொரு தேசத்தினருக்கும் ஒவ்வொரு தனித்துணம் இருந்து வருகிறது. இந்திய ஸ்திரீகளுடைய புத்தியையும், வீரத்தையும் சரித்திரங்கள் கூறுகின்றன. அவர்கள் கட்டிக்கொள்ளும் புடவையானது அழகும் சாந்தமும் அவர்களுக்கு ஏற்படும்படி செய்வதாக இருக்கிறது. அந்த "சாரியை" (மாதிரியை) விட்டு விடாதீர்கள்." இந்திய நங்கையரின் புகழ் வாய்ந்த பெண்மைக் குணத்தை மேனாட்டு நாகரீமும் கல்வியும் கெடுத்துவிடுகிற அளவுக்குப் போய் விடக்கூடாதென்பதே அவரது நல்லுபதேசமாகும். பெற்றோரும், படித்த யுவதிகளும் இதைக் கவனிப்பாராக.

ஃ

பட்டதாரிகளுக்குப் புத்திமதி:–

"சொல்வ தெளிது, செய்வ தரிது" என்பது போல, ஆங்கிலப் பட்டமளிப்பு விழாவின்போது பட்டதாரிகளுக்குப் பல பெரியோர்கள் தலைமை வகித்து நல்லுபதேசம்

---

"நகைப் பைத்தியம்" என்ற ஒரு அரிய நூலை டிஸ்திரிக்ட் முனிசீப் ஸ்ரீமான் S. இராமசாமி ஐயர் B. A. B. L. 1898-ம் வருஷம் எழுதினர். இரண்டு பாகங்களாய் 550-பக்கங்கள் கொண்டது. நகையணிவதிலுள்ள தீங்குகளை மகா அபூர்வமாய் விவரித்திருக்கின்றார். அவர் வார்த்தையின்படி ஜனங்கள் நடவாவிடினும், இப்போது பவுன் விலை ரூபாய் 20-க்குமேல் உயர்ந்திருப்பதில் நகையாசையைக் குறைக்கும்படி நேர்ந்திருக்கிறது.

செய்கிறார்களாயினும், பட்டதாரிகளிற் பலர் அதைப் பின்பற்றுவதில் விசேஷ கவனத்தைச் செலுத்துவதற்கின்றித் தடமாடிப் போகிறார்கள். ஆந்திர கலாசாலைப் பட்டமளிப்பு விழாவின்போது ஜட்ஜிஸ் வெங்கட சுப்பராவ் அவர்கள் சிறந்த உபதேசங்கள் புரிந்தார். பட்டதாரிகள் கிராமங்களுக்குச் சென்று பிரபலமடையப் பார்க்கலாமென்றும், அங்கு பாடசாலைகள் ஸ்தாபிக்கலாமென்றும், தங்களுக்கும் ஹிதத்தைத் தேடிக்கொண்டு தங்கள் தேசத்துக்கும் புகழுண்டாகச் செய்யலாமென்றும் கூறினார். ஆதியில் உயர்தரக் கல்வி கற்கப் புகுந்ததன் நோக்கம் ஸர்க்கார் உத்தியோகம் கொண்டு உன்னத வாழ்வு காண்பதற்கேயென்பதை மறுப்பதற்கில்லை. பழைய நாளில் தமயன் ஒரு உத்தியோக பதவியிலிருப்பின் அதில் தம்பியையும் சேர்த்துக்கொள்வது சுலபமாயிருந்தது. இந்நாளில் உத்தியோகஸ்தரின் பிள்ளைக்கே உத்தியோகம் கிடைப்பது அரிதாகி விட்டது ஒரு பட்டதாரியை விவாகம் செய்துகொள்வதைவிட, ஒரு கடைக்காரச் சாதாரணப் படிப்புள்ள வியாபாரியையோ, சரீர உழைப்புச் சம்பாதனைக்காரனையோ மணந்தால் வயிறு வாடாமல் ஜீவிக்கலாமென்று பெண்கள் எண்ணும்படியான காலமாகவும் மாறிக் கலக்கம் தருகிறது. ஏனெனில், வியாபாரிக்கும், சரீர உழைப்புக்காரனுக்கும் பண வருமானம் நிச்சயமாய்க் கிடைக்குமென்கிற தைரியம் இருக்கிறது. பட்டதாரிக்கோ வேலை யகப்படுவதுமில்லை; அகப்பட்ட வேலையும் நிச்சயமில்லை. நடுவில் வேலை போய்விடின் மனைவியும் மக்களும வயிறு வாடப் பல கடன்கள் சூழப் பெரிய சோதனையாகிவிடுகிறது. ஆகவே, பட்டப் படிப்பாளியை விடப் படிப்பு குறைந்தவர்கள் நிச்சயமான சம்பாதனையுள்ளவர்களாகி, அவர்களே சிலாகிக்கப்படக் கூடியதாய் விட்டது. கிராமங்களுக்குப் பட்டதாரிகளைப் போகச் சொல்வதில், பட்டதாரிகளின் அருமையைக் கிராமத்தார் அறிந்தவர்களல்லாதவர்களா யிருப்பதுடன், இப்பட்டதாரிகட்கே கிராமப் பிரவேசம் வெறுப்பாயும், கிராமம் என்பதே சோம்பலின் விளைவுக்கு உற்பத்தி யென்று கருதும்படியாகவும், நகரத்திலுள்ள சுறுசுறுப்பு கிராமத்தில் காணப்படாமலும், நகரத்திலுள்ள வாழ்வின் அபிவிர்த்தி கிராமத்தில் ஏற்படாமலு மிருப்பதில், அதுவும் ஒரு தத்தளிப்பா யிருக்கிறது. கிராம வாசிகளிற் பலர் நகரத்துக்கு வந்து படித்தே பெரிய சம்பாதனைக்காரர்களாகவும் கல்விமான்களாகவும் ஆனார்கள். இப்பொழுது அதற்கு மாறாகப் பட்டண வாஸத்தில் பழகிப் போன பட்டதாரிகளைக் கிராம வாசத்திற்குத் திரும்பி அங்கு ஊழியம் செய்யுங்களென்றால் அதில் புது சுறு சுறுப்பு உதயமாவதாக இல்லை. பெரிய உத்தியோகம் எப்படியாவது தமது அதிர்ஷ்டத்தில் கிடைத்துவிடுமென்று நம்பியிருந்த எண்ணங்களெல்லாம் பின்னமாகி, இப்போது சுறுசுறுப்பற்ற மந்தத்தன்மை

---

வித்தை, புத்தி, யுக்தி, நுட்பம், அனுபவம் இவற்றிற் சிறந்த மூளையையுடைய அறிவாளிகளிற் சிலர் தங்கட்குப் பிறரிடத்தில் ஒரு காரியம் ஆக வேண்டியபோது ஒருவிதமாகவும், தங்களுக்கு ஒரு மனுஷ்யரிடத்தில் எந்த வேலையுமில்லாவிட்டால் அப்போது ஒருவிதமாகவும் நடந்துகொள்கின்றனர். தங்களைக் காண வருவோரையும் அலக்ஷியமாய் நோக்குகின்றனர். என் இந்தக் குறுகிய கோணல் தன்மையோ?

விளைக்கும் கிராமங்களிற் போயிருங்கள் என்றால், பட்டதாரிகளின் மனம் தவிக்கவே செய்யும் தான். தவிக்கிற தவிப்போடு, பிறர் சொல்லுகிற உபதேசங்களையும் சிவனே யென்று மனம் பொறுத்துக் கேட்டுக்கொள்ள வேண்டியதுதான்! அழுவார் அழுவார் அவரவர் துக்கம்!

ஃ

ஸர். பி. ஸி. ரேயின் வாக்கு:—

லக்ஷ்மணபுரியில் ஸர்வ கலா சாலைப் பட்ட மளிப்பு விழாவின் போது தலைமை வகித்துப் பிரஸங்கம் செய்த ஸர். பி. ஸி. ரேய் பின் வருமாறு குறிப்பிட்டார். "உலகத்தின் பிரபலர்களில் பலர் ராஜீயவாதிகளிலும் சரி, ஆராய்ச்சிக்காரர்களிலும் சரி, கலாசாலைப் படிப்பு பெற்றவர்களல்ல. மிஸ்டர் ராம்ஸே மாக்டொனல்டு, ஹிட்லர், ஸ்டேலின், முஸ்ஸோலனி எடிஸன் ஆகிய பலர் இந்த உண்மையை நிரூபிக்கும் உதாரணங்களாவார். *** வாழ்க்கைக்கு அவசியமான சாதனங்களைப் பெற பள்ளிப் படிப்பு வழி காட்டவேண்டும்.***புராதன காலங்களில் காடுகளிலும், ஏகாந்தமான இடங்களிலும் குருகுல வாசம் செய்த மாணவர்கள் குருவினுடைய வீட்டுக் காரியங்களைச் செய்து வந்த போதிலும், அதி சூக்ஷ்மமான ஆத்ம தத்வங்களையும் அறிந்து வந்தனர். ஆனால், தற்காலம் மேல் நாட்டு முறைகளை மேன்மேலும் கடைப்பிடித்துப் பெரிய கட்டடங்களையும், ஸகல நவீன சுக வசதிகளையும் ஏற்படுத்திக்கொண்டு மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதால் விசேஷ பாதகம் விளைகின்றது. அதனால் தற்கால மாணவர்கள் வாழ்க்கையில் கஷ்டங்களைச் சமாளிக்க முடியாத பேடிகளாகிவிடுகின்றனர்" என்றார். ஃ

தமிழ் அன்பர் மகாநாடு:—

"முயற்சி திருவினையாக்கும்" என்றபடி, சென்ற டிசம்பர் மாதத்தில் சென்னையிற் கூடிய இம்மகாநாட்டுக்கு இணையாக இதற்கு முன்பு ஒருபோதும் எதுவும் இவ்வளவு வைபவமாய்க் கூடினதில்லை. அதன் சிறப்புக்கு ஏற்றவாறு, அதனிற் செய்யப்பட்ட தீர்மானங்களும் நாளடைவில் நிறைவேற வேண்டுமென்று பிரார்த்திப்போம். தமிழ் பாஷை தனக்கென்றே தெய்வமணங் கமழும் தனிச் சரித்திரமொன்றைப் பெற்றுள்ள பாவத் பாஷையா யிருக்கையில், கடவுள் இல்லை யென்ற நாஸ்திகக் கொள்கையை இம்மகாநாட்டின் தீர்மானங்களில் சேர்க்க முயல்வதென்றால் அது சித்திக்குமோ? அவ்விதம் முயன்ற ஒரு சிலர் பின் தோல்வியுற்றதும் சரியே. தமிழ் எழுத்துக்களைக் குறைக்கும் தீர்மானம் அனுபவத்தில் சாத்தியமில்லை. கடின நடையினும் எளிய நடையே பயனுள்ளதென்பது மகாநாட்டின் தீர்மானங்களில் ஒன்றும். அனாவசியமாகப் பாஷையின் நடையைக் கடினமாக்கிச் செல்லுவதில், ஒன்றின் பொருளை எவ்வளவு தெளிவாக அறிய இயலுமோ அதிற் பாதி தானும் உணர முடியாவாறு செய்து விடுகின்றது. தமிழின் அபிவிர்த்திக்காக ஏற்கெனவே 1870-ம் வருஷ முதற்கொண்டே சென்னைப் பாடசாலைப் புஸ்தகக் கல்விச் சங்கத்தாரும் (The Madras School Book And Vernacular Leterature Society)ம், மற்றும் அநேக மேதாவிகளும் பல புது முறைகளை அறிந்து நூதன வழிகளில் நூல்களை ஆக்குவித்து முற்போக்கின் மார்க்கம் தெரிவித்துள்ளார்கள். அவற்றில் சிரேஷ்டமானவைகளை "அன்பர்" மஹாநாட்டு நிர்வாகிகள் பின்பற்றி நடத்தினால், அதுவே

இப்போது செய்துள்ள தீர்மானங்களிற் பெரும் பகுதியை நிறைவேற்றுவிப்பதுபோலாகும். யார் யார் சேர்ந்து என்னென்ன செய்யப் போகின்றனரென்பது ஒரு கேள்வி. மகாநாடு கௌரவத்திற்காகக் கூடியதாக இல்லாமல் காரியத்திலும் காட்டவேண்டும். பேசிய வார்த்தைகள் காற்றில் பறந்துவிடும். செய்கை மட்டுமே நின்றுலாவும்.

# என் நெட்டை உருவத்தின் அவதி!

(ச. ஸ்ரீ)

நானெதற்கு உயரமாக வளர்ந்தேனோ? ஐயோ! அதனால் எவ்வளவு கஷ்டங்களுக்குள்ளாகிறேன் தெரியுமா? என் சினேகிதர்களும், சிறுமிகளும், மற்றெல்லோரும் என்னை என் "நெட்டைப் பனை" என்று அழைக்க வேண்டுமோ? நானென்ன பனைமரம் அவ்வளவு உயரமா இருக்கிறேன்? பின் எதற்காக அவ்விதம் பேசவேண்டும்! நானாவது அல்லது என் உயரம் இருக்கக் கூடியவர்களாவது அந்த வீட்டினுள் வருவார்கள் என்று அந்த வீடு கட்டினவர்களுக்குத் தெரிகிறதா? நாமும் யதாப்பிரகாரம் நம் வீட்டினுள் நடமாடுவதுபோல் அவ்வீட்டிற்குள் நுழைந்தால் அப்பா! பளீர் என்று வாசற்படி முதலில் ஒரு போடு போட்டுவிடுகிறது. ரத்தம் மள மளவென்று பிரவாகமாகிறது. வீட்டினின்று வீட்டுச் சொந்தக்காரர்கள் வந்து எனக்கு முதல் உதவி செய்யாதிருந்தால் என் பாடு பெரும்பாடாகிவிடும். இந்தச் சம்பவம் ஒரு தடவைதானா நிகழ்கிறது? அப்பப்பா! பிறர் வீட்டிற்குப் போகும் ஒவ்வொரு தடவையும் இக்கோரமான சம்பவம் நடக்கத்தான் செய்கிறது. அதை நாம் அகற்றவும் முடிவதில்லை. ஐயோ! எத்தனை அடிகள் தான் என் தலை பொறுக்குமோ? என் நெற்றி இந்த வகையில் எவ்வளவோ காய்த்தும் போய்விட்டது.

ஃ

நான் ஏதாவது குற்றம் குறை செய்தால் இவன் செய்தான், அவன் செய்தானென்று எல்லாரையும்சொல்வதைப்போல் என்னையும் சொல்லிவிடக்கூடாதோ? நம்மைப் பார்த்து மாத்திரம் "வளர்ந்தானும் ஆகாயமளவு; செய்கிறான் இக்குற்றத்தை நெட்டைப் பனை" என்கிறார்கள். இதற்கு நானென்ன செய்வது? நான் பலரிடமும் கடன் வாங்கித்தான் இருக்கிறேன். அவர்கள் என்னைப் பலதடவைகள் கேட்டும் நான் நாளை நாளை தருவதாக எவ்வளவோ தவணைகள் சொல்லியும் பார்த்தாய்விட்டது. ஆனால், பின்னும் என்னைத் தொந்தரவு செய்தால் நான் எந்த வழியைத் தான் கையாளுவது? தலையில் முக்காடிட்டு ஒளிந்து கடைவீதியில் இரவில் நடமாடினாலும் எப்படித்தான் என் கடன்காரர்களுக்கு நான்தான் என்று தெரிகிறதோ? நான் முக்காடு சரியாகப்போட்டுக்கொண்டு போகவில்லை யென்று சொல்கிறீர்கள்? கண்கள் மாத்திரம்தான் தெரியும்படி போயும் பார்த்துவிட்டேன். மறுநிமிஷம் என் தலைமயிரைப் பிடித்து எந்தக் கடன்காரனாவது இழுக்கிறானே? நான் இதற்கு எங்கு போய் முறையிடுவது?

ஃ

சிறுபையன்களுக்கு என்னைக் கண்டால் ஒரு வேடிக்கை, ஒருகேலி. நான் பனைமரம் மாதிரி இருந்தால் இவர்களுக்கென்ன? இவர்களா சோறுபோட்டு வளர்த்தது? பனைமரம் என்று கேலி பண்ணிக்கொண்டு கொக்கரித்தால் நான் சும்மா யிருக்க முடியுமோ? அவர்களைத் துரத்தித் துரத்திப் பிடிக்கப்போனாலும் அவர்கள்

லேசில் அகப்படுகிறார்களா? என் கால்களுக்கு நடுவிலும் அக்கம் பக்கத்திலுமாக ஓடிவிடுகிறார்கள். நான்குனியு முன் அவர்கள் விட்டில்மாதிரி பறக்கிறார்கள். அப்படி எவனாவது என் கையில் அகப்பட்டுவிட்டால் என் பலம்கொண்ட அளவு சாத்தலாமென்று இரண்டடி பலமாக அடித்துவிட்டால் என் காதுகளுக்கு அன்று நல்ல விருந்து கிடைக்கிறது. "அடா தடிக்கழுதை! அந்தச் சின்னப் பையனைப்போய் அடிக்கிறாயே! பனைமரம் மாதிரி வளர்ந்து என்ன பிரயோஜனம்?" என்று பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். அப்போது என் மனம் எவ்வாறு அவதிப்படுமென்று நீங்களே யோசியுங்கள். "பனை மரம்" என்று சொன்னதற்குத்தான் பையன்களை நான் அடிக்கப்போனது. இப்போது இவர்கள் அதை ஆயிரம் முறை சொல்வதற்கு நான் என்ன செய்ய?

ஃ

எல்லோரையும் போல ஏதோ $2\frac{1}{2}$ கஜம் துணி வாங்கினோம். ஒரு ஷர்ட்டுதைத்துக்கொண்டோம் என்று இருக்கிறதா? "நெட்டை உயரத்திற்கு $3\frac{1}{2}$ கஜம் துணி வாங்கிக்கொள்ளுங்கோ சார்" என்று வெகு தாராள சிந்தையுடன் கடைக்காரன் சொல்லிவிடுகிறான். மடியிலிருக்கும் துட்டை அவிழ்த்துக் கொடுப்பது நானா அவனா? அவனைச் சொல்லக் குற்றமில்லை. பின் எப்படித்தான் $2\frac{1}{2}$ கஜம் துணி என் உயரத்திற்குப் போதும்? மூக்கால் அழுதுகொண்டு அவன் சொன்ன அளவு வாங்கித்தான் தொலைத்தாகவேண்டும்.

ஃ

ரெயிலில் பிரயாணம் செய்கையில் ஒரு பெஞ்சி காலியாயிருந்தாலும் கால்நீட்டிப் படுத்துத்தூங்க சாத்தியமா யிருக்கிறதா இவ்வுடம்பின் அமைப்பு? நாம் போகும் ஒவ்வொரு வீட்டிலும் அறைகள் எல்லாம் மிகவும் பெரிதாகவா இருக்கிறது? சின்னஞ்சிறு அறை ஏதாவது நமக்குப் படுக்கக்கொடுத்துவிட்டால், அன்றையத் தூக்கத்தை சுவாமி சிந்தனையில்தான் கடத்த வேண்டும். நீட்ட மடக்க புரள ஒரு அறையை விசாலமாகக் கட்டக் கூடாதோ! இதில் என்ன புரண்டு போவதோ?

ஃ

எல்லாவற்றையும்விட என்னை நெட்டைப் பனை என்றழைப்பதுதான் என் பிராணனை வாங்குகிறது. இதற்கென்னதான் செய்யலாம்? இன்னும் பெண்கள் என்னைப்போல் நெட்டையாயிருந்துவிட்டாலோ, பெரும்பாலும் குட்டையாய்விட்ட இந்தக் காலத்தார் அதை ஒரு பெரும் பழிப்பாகப் பரிகசிப்பது கொடுமையிலும் கொடுமை! ஒருவனைப்பார்த்து அவனுடைய நெட்டையான மனைவியை "உன் அக்காவா?" என்று கேட்கிறார்கள். இதற்கு என்ன பதில் சொல்வதோ?

---

எந்தப் புஸ்தகமும், உன்னிடம் இருந்தால்தான் உனக்கு ஒரு காலா காலத்தில் பிரயோஜனப்படுமே தவிர, நீ முட்டாள்தனமாய் மற்றொரு நடுவழிக்கொள்ளைக்காரப் பேய்க்குத் தூக்கிக் கொடுத்துவிட்டால், பிறகு உனக்கு அப்புஸ்தகம் வேண்டியிருந்தால் ஜென்ம ஜென்மத்துக்கும் கிடைக்காது. உன்னிடம் பெற்றவன் உன்னைப்போல் ஏமாறிய கசடனல்லவாதலின் ஒருபோதும் உனக்குத் திரும்பத்தரான். காணாமற்போயிற்றென்பான். புத்தி குறைந்தவனே! உன் பிள்ளைகளுக்குப் புஸ்தக சொத்து சேர்த்துவை. வீணாகப் பிறர்க்கு வாரித்தந்து புஸ்தக பொக்கிஷத்தைக் காலிசெய்து பாழாக்காதே.

# " அமிர்த குணபோதினி "

## ஸ்ரீமுக வருஷத்திய தை மாத பஞ்சாங்கம்.

| யோகம் | இங் | தமிழ் | வார | திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை. |
|---|---|---|---|---|
| அ-ஸி | 14 | 1 | ஞா | சஸி-40-30, மூல-17-41, உத்தராயனம், ஸ்ரீவில்லிபுத்தூர் நீராட்ட சாத்துமுறை. கரிநாள் |
| உ-ம | 15 | 2 | திங் | ● 31-14, பூரா-10-14, கரிநாள் மாட்டுப்பொங்கல் தை சோமவார அமாவாசை. |
| பி-ஸி | 16 | 3 | செ | பிர-22-18, உரா-2-55, உப-53-13, சந்திரதரிசனம் |
| பி-ஸி | 17 | 4 | புத | துவி-14-4, அவி-50-33, [கரிநாள். |
| ம-ஸி | 18 | 5 | வியா | திரி-6-57, சத-46-16, |
| ஸி | 19 | 6 | வெ | சது-1-20, உப-56-10, பூட்-43-46, |
| ஸி-பி | 20 | 7 | சனி | ஷஷ்-55-43, உட்-43-3, கும்பாயனம் 41-3, |
| அ-ஸி | 21 | 8 | ஞா | ஸப்-55-5, ரே-44-18, ரதஸப்தமி, |
| ஸி | 22 | 9 | திங் | அஷ்-57-59, அசு-47-20, பீஷ்மாஷ்டமி, |
| ஸி | 23 | 10 | செ | நவ-60-0, பர-52-3, |
| அ-ஸி | 24 | 11 | புத | நவ-1-47, கிரு 58-5, கரிநாள் கிருத்திகா விரதம். |
| உ | 25 | 12 | வியா | தச-6-53, ரோ-60-0, கந்தஸ்வாமி மயில் வாஹனம். |
| ம-ஸி | 26 | 13 | வெ | ஏகா-12-55, ரோ-5-9, ஸர்வ பீஷ்ம ஏகாதஸி. |
| ஸி | 27 | 14 | சனி | துவா-19-25, மிரு-12-41, கந்தஸ்வாமி ரதம். |
| ஸி | 28 | 15 | ஞா | திர-26-1, ஆரு-20-20, |
| அ-ஸி | 29 | 16 | திங் | சஸி-32-25, புந-27-49, கந்தஸ்வா கைலாச கிரி. |
| ஸி | 30 | 17 | செ | ○ 38-21, பூச-34-53, கரிநாள், தைபூசம், திருக்கழுக்குன்றம்-பெருந்தேவித்தாயார்-தெப்பம். |
| ஸி | 31 | 18 | புத | பிர-43-36, ஆயி-41-23, |
| அ-ஸி | 1 | 19 | வியா | துவி-47-59, மக-46-55, |
| ஸி | 2 | 20 | வெ | திரி-51-23, பூர-51-36, மாவோங்க, சித்திரம்எழுத. |
| உ-ம | 3 | 21 | சனி | சது-53-32, உத்-55-5, |
| அ-ஸி | 4 | 22 | ஞா | பஞ்-54-30, ஹஸ்-57-25, |
| பி-அ | 5 | 23 | திங் | ஷஷ்-53-59, சித்-58-21 |
| ஸி-ம | 6 | 24 | செ | ஸப்-51-58, ஸ்வா-57-53, ஸீதா ஜனனம். |
| ஸி-அ | 7 | 25 | புத | அஷ்-48-37 விசா-55-59, |
| ஸி-பி | 8 | 26 | வியா | நவ-43-47, அநு-52-44, ராமதாஸ நவமி |
| ம-அ | 9 | 27 | வெ | தச-37-49 கேட்-48-19, |
| ஸி | 10 | 28 | சனி | ஏகா-30-54, மூல-42-57, ஸர்வைகாதஸி, |
| ஸி-அ | 11 | 29 | ஞா | துவா-23-12, பூரா-36-57, பிரதோஷம், |

மகர (சாப) மீ 4—45

பிப்ரவரி

| | | | |
|---|---|---|---|
| | | | |
| குஜ | 15உ-க்கு ராஸி | | கேது |
| ர-ரா சுக் ச பு | | | |
| | | குரு | |

" அமிர்த குணபோதினி " பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1934.